349

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

179

349
2-55

# திருநறையூர்த் தலவரலாறு

(நாச்சியார்கோவில்)

ACL-TNAL
00190



ஸ்ரீமாந் வைணவப் புரவலர் - பிரபன்ன வித்வான்

றை-நா. ஸ்ரீகாந்தராமாநுஜர்

அவர்கள் எழுதியது.

Q22:38·21196
N55

ஸ்ரீநிவாசபெருமாள் தேவஸ்தான வெளியீடு.

(விலை அணா நான்கு).

113

U.1113

# பதிப்புரை

இச்சிறு நூல் சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் சுற்றறிக்கையின் பயனாக இத்தேவஸ்தானத்தின் முன்னாள் நிர்வாக தர்மகர்த்தரான நாச்சியார்கோயில் ஸ்ரீமாந் என். கே. ஆர். நாராயணசாமி நாயடுகாரு அவர்களால் 1944 ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. அவைகள் முற்றும் செலவாகிவிட்டதால், இதுபோது இரண்டாம் பதிப்பாக இந்நூல் வெளியிடப்பெறுகின்றது.

இந்த இரண்டாம் பதிப்பில் இத்தல சம்பந்தமான திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பாடல்களும் திருநறையூர்நம்பி மேகவிடு தூதும் திருச்சிராப்பள்ளி அறநிலையப் பாதுகாப்பு டிப்டி கமிஷனர் உயர்திருவாளர் கணேசம் பிள்ளை அவர்கள் விருப்பத்திற்கிணங்க சேர்க்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய நூல்கள் பல திருக்கோயில்களின் பண்டைச் சிறப்பு, வரலாறு, இன்றைய நிலை முதலிய உண்மைப்பொருள்களை மக்கள் உணர்ந்து கோடற்கு இன்றியமையாதன. இந்நூலை எழுதியுதவிய ஸ்ரீமாந் பிரபன்னவித்வ-வைணவப் புரவலர் காரை நா. ஸ்ரீகாந்தராமாநுஜர் அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியை செலுத்துகின்றோம்.

**M. D. தியாகராஜ பிள்ளை, M. L. A.**
**P. R. பொன்னுசாமி,**
டிரஸ்டிகள்.
**N. K. R. திருவரங்கம் நாயுடு.**
மானேஜிங் டிரஸ்டி.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# முன்னுரை.

அறிவுக்கு மொழியும், ஒழுக்கத்திற்குச் சமயமும் இன்றியமையாதன. ஒழுக்கத்தாலன்றி உயிர்கள் உயர்நிலையடைதல் இயலாது. ஒழுக்கத்தை வகுத்துணர்த்தி மக்களை உய்திபெறச்செய்வது சமயமே. சமயமில்லையேல் ஒழுக்கமில்லை; இதில் ஐயமொன்றில்லை.

எனவே அறிவுவளர்ச்சிக்கு மக்களுக்கு மொழிப்பற்று அவசியமாதல் போன்று, ஒழுக்க வளர்ச்சிக்குச் சமயப்பற்று மிக மிக வேண்டற்பாலதொன்று. மக்களுள்ளத்தில் சமய உணர்ச்சியைத்தூண்டி, ஒழுக்கத்தில் நிலைப்பெறச் செய்வது தமிழ்நாட்டின் சமயச் சின்னங்களான திருக்கோயில்களேயாகும்.

சமயப்பற்றின் உயர்ந்த குறிக்கோள் திருக்கோயில்கள். தமிழரை இன்றளவும் ஒழுக்கத்தில் தலைசிறந்தவர்களாக ஓம்பிவருவன திருக்கோயில்கள். மேலும், தமிழகத்தின் தலைசிறந்த நாகரிகத்தின் எடுத்துக்காட்டாகத் திகழ்வன திருக்கோயில்கள் என்றுஞ்சொல்லலாம். மக்களை அற வாழ்க்கையில் தூண்டி, ஒழுக்கநெறியில் நிறுத்தி, இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள ஒழிக்க வொழியாத உறவினை உணர்த்தி நிற்பனவும் திருக்கோயில்களே.

அறப்பெரியனான இறைவன் உயிர்கள்மாட்டு அருள் சுரந்து அறத்தாழ்ந்த நிலையே அர்ச்சாவதாரம். இறைவன் அருள்வடிவினனாயினும் அவனது இன்னருள் சுரக்குமிடம் அர்ச்சாவதாரம். குழவிக்குப் பால்சுரக்குமிடம் போன்றது, அடியவர்க்கு அர்ச்சாவதாரம். உயர்வற உயர்ந்த இறைவன் யானைபோன்றவன். இறைவனை "என்னானை! என்னானை! என்பதல்லால் என்னறிவன் ஏழையேன்!" என்றார்

திருமங்கையாழ்வார். மக்கள் கையுங் காலுமற்ற முடவர் போன்றவர். எனவே முடவன் யானையேறப் போகாது. அதுபோல குற்றத்திற்குக் கொள்கலமான சேதனர் உயர்வற உயர்நலமுடைய இறைவனைப் பற்றுதலென்பது இயலாது.

முடவன் யானையேற வேண்டுமெனில்: யானை தலை யோடுதரையாகப் (முடவனும் தன்மீது ஏறலாம்படி) படிந்து கொடுக்கவேண்டும். இன்னணமே மக்கள் இறைவனைப்பற்ற வேண்டுமெனில், இறைவன் தாழ நின்றருள வேண்டும். இவ்வாறு உயிர்கள் பற்றுதற்கு எளியனாய்ப் பரமன் தாழ நின்ற நிலையே அர்ச்சாவதாரம். விடாய் கொண்டவனுக்குத் தண்ணீர்த்தடம் போன்று, அன்பவிடாய்க்கு அர்ச்சா வதாரம்.

"பரத்வத்திற்கு அவதரிக்க யோக்யதையுண்டு; அவதா ரங்களுக்குத் தீர்த்தம் பிரசாதிக்க யோக்யதையுண்டு; அர்ச் சாவதாரம் சமசாரம் கிழங்கெடுத்தாலன்றிப் புடைப்பெய ராதது" என்னும் நம் அருட்குறவர்களின் மண்ணும விண்ணும் விலைபெறுதனவாய ஸ்ரீ சூக்திகள் அர்ச்சாவதா ரத்தின் அறச்சிறந்த சீர்மையை நன்கு வலியுறுத்துவன.

பத்துடை யடியவர்க்கு எளியவனை அறப்பெரியவன் அர்ச்சாவதாரங்கொண்டெழுந்தருளி, "வாட்டமின்றி மகிழ்ந்துறையும்," "நிலையாரநின்றருளும்" திருப்பதிகள் திவ்யதேசங்கள் எனப்பெறும். உயர்வற உயர்நலமுடைய இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார் களின் அருந்தமிழ்ப் பாடல்கள் பெற்றவை திவ்யதேசங் களாகும்.

திவ்யதேசங்களை யல்லது உயிர்கள் உய்திப்பெற உபாய மொன்றில்லை "அற்றபற்றர் சுற்றிவாழும் அந்தணீர் அரங் கமே" என்ற திருமழிசைப்பிரான் அருளிய அருளிச்செய லின்படி பற்றற்ற—முற்றத்துறந்த பெரியோர்களும் அரங் கத்தைப்பற்றியே யன்றோ வாழ்ந்துபோந்தனர். "நின்

கடைக்தலையிருந்து வாழும் சோம்பரையுகத்திபோலும், சூழ் புனலரங்கத்தானே" என்ற திருமாலைப் பாசுரமும் இதனை நன்கு வலியுறுத்தும்.

எனவே, எத்தனை உயர்ந்த ஞானியர்க்கும் திவ்யதேசங்களல்லது வாழ்ச்சிக்கு வேறு வழியில்லை. இதனை "ஒருவனூர்; உலகமேத்தும் கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை என்று மண்டினார், உய்யலல்லால் மற்றயார்க்கு உய்யலாமே?" என்ற மங்கை மன்னரின் அளரி பொதிந்த மணிவாக்கு அழகுற வலியுறுத்துவதாகும்.

சமயத்தின் அழியாத (சிரஞ்சீவி) சின்னங்கள் திவ்யதேசங்கள். திவ்யதேசங்களே மொழிமூலம் அறிவையும், சமயத்தின் மூலம் ஒழுக்கத்தையும் உயிர்களுக்கு ஊட்டும் பெற்றியன. ஆனபோது, மொழிப்பற்று மிக்குள்ள இந்நாளில், ஒழுக்கத்தை யோம்பும் சமயத்தை வளர்த்தல் தலைசிறந்த பணியாகும். ஆலயங்களை உயிரினும் ஓம்பி, ஆண்டுள்ள சிறு குறைகளைச் செம்மைப்படுத்துவதன் மூலமே மக்களுள்ளத்தில் சமயப்பற்றைத் தூண்டி ஒழுக்க வாழ்வை உயிர்ப்புற வளர்த்தல் முடியும் இதனோடே சமயப்பிரசாரமும் இன்றியமையாததாகும் இதனை நன்குணர்ந்து ஒல்லும் வகை செயலாற்றித் திகழ்வார் நமது சென்னை, இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகத் தலைவர் உயர்திருவாளர், திவான்பகதூர் T M நாராயணசாமிப் பிள்ளையவர்களும், கமிஷனர் உயர்திருவாளர் இராவ்பஹதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்களுமாவர்.

இவர்கள், வைணவத்திருவின் வளர்ச்சியிலேயே இளமைத்தொடங்கிக் கருத்தூன்றி நின்ற அடியேனது சிறு தொண்டு சீரியவகையிற் செயற்படுமாறு என்னைத் தம் கழகத்தின் வைணவ சமயப் பிரசாரகனாக்கியதோடு, வைணவத்தலங்களின் வரலாறுகளை எழுதுமாறும் ஊக்கிப்பணித்தனர். இவர்களுக்கு என்றும் என் நன்றிசான்ற வணக்கம் உரியது.

வேறு வழிகளில் வைணவத்தொண்டாற்றிவந்த எளியேற்கு இப்பேறு கிடைக்கப்பெரிதும் காரணரானவர்கள், எனது வாழ்வின் வளர்ச்சிக்கே உறுதுணைவரான சென்னை, ஸ்ரீ வைஷ்ணவ மகாசங்கக் காரியதரிசி திருத்தக்க செல்வர் ஸ்ரீமாந், K. வேங்கடசாமி நாயடுகாரு அவர்களாவர். இவர்களுக்கு எழுமையும் எனது தலையல்லால் வேறு கைம்மாறு அறிகிலேன்.


இந்நிலையில் இத்திருநறையூர்த் தலவரலாற்றை எழுதித் தருமாறு இச்சந்நிதியின் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமாந் N. K. R. நாராயணசாமி நாயடவர்கள் கேட்டுக்கொண்டார்கள். எனது உள்ளங்கவர்ந்த கள்வரான பரகால வள்ளல் ஆழ்ந்து ஈடுபட்ட இவ்வொப்புயர்வற்ற திவ்ய தேசத்தின் பரந்த பெருமை புகழை அடியேனது சிற்றறிவிற் கெட்டியவகையில் ஒருவாறு சுருக்கி எழுதியுள்ளேன்.

இவ்வரலாற்றை எழுதிமுடிக்கத் துணைசெய்தது நாய்ச்சியார்கோயில் போர்டு ஆரம்பப்பாடசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீமாந், T. நரசிம்மாசாரியார் அவர்களின் முதனூலின் மொழிபெயர்ப்புப் பிரதியாகும். இதனைக்கொடுத்துதவிய அவர்கட்கு எனது நன்றி என்றும் உரியது.

எழுதியதோடன்றி, இதனை எனது அச்சகத்திலேயே பதிப்பித்துத் தருமாறும் பணித்தருளிய இத்தேவஸ்தான மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமாந் நாயடுகாரவர்களுக்குப் பெரிதும் நன்றி செலுத்துகின்றேன். இவர்கள் இன்று எழுதியுள்ள நலன்களோடு இன்னும் பன்னலன்களெய்தி நீடுவாழ நம்பியெம்பெருமான் திருவருள் புரிவாராக. பெரியோர்கள் இதிற்காணும் பிழைகளைத் திருத்தியருள்வார்களாக.

ஸ்ரீ புனிதநிலையம்<br>
காரைக்கால்<br>
11-6-44

**காரை, நா. ஸ்ரீகாந்தராமாநுஜன்.**



33
34
19
18
4
1
5
6
7
3
2
17
11
8
12
13
10
9
22
21
16
14
37
35
15
20
24
31
23
30
32
25
29
26
27
28
36

# கோவில் படவிளக்கம்.

---

1. ஸ்ரீ வஞ்சுளவல்லி தாயார் ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாள் சந்நிதி
2. பொன்னியம்மன்
3. சேஷவாகன இடம்
4. உள்பிராகாரம்
5. ஆழ்வார்கள் சன்னதி
6. பக்ஷிராஜன் சன்னதி
7. சுரங்க அறை
8. திருவண்ணாழி
9. நரசிம்மர் சன்னதி
10. கொலு பொம்மை இடம்
11. ஆஞ்சநேயர் சன்னதி
12. ஸ்ரீ மணவாளமாமுனிகள்
13. ஸ்ரீ தேசிகர்
14. கல்யாணமண்டபம்
15. திருமடைப்பள்ளி
16. அனுமார் சன்னதி
17. மகிழமரம் ஸ்தலவிருக்ஷம்
18. சக்கரத்தாழ்வார் சன்னதி
19. வெளிப்பிராகாரம்
20. யாகசாலை
21. ஸ்ரீராமசாமி சன்னதி
22. உக்கிராணம்
23. முத்தவெளிமைதானம்
24. ரதமண்டபம்
25. வாகனமண்டபம்
26. ஆபீஸ்
27. திருமங்கைஆழ்வார் சன்னதி
28. ரிகார்ட் ரூம்
29. நம்மாழ்வார்சன்னதி
30. உடையவர் சன்னதி
31. த்வஜாரோகணமண்டபம்
32. 33 & 35. தோட்டம்.
34, வஸந்தமண்டபம்.
36. சந்நிதிதெருவு.
37. மணிமுத்தாறு நதி–திருக்குளம்.

---

ஸ்ரீ:

# திருநறையூர் நம்பி மேகவிடு தூது.

## தனியன்.

நேரிசைவெண்பா.

போதுமண வாளணங்கு புல்லுநறை யூர்நம்பி
மீதுமண வாளரருண் மேகவிடு—தூதுதனைச்
சொல்லுவார் கேட்பார் துதிப்பாரிம் மேதினிமேல்
வெல்லுவா ரெல்லாம் விரைந்து.

## காப்பு.

நம்மாழ்வார்.

காரணனை யெவ்வுயிர்க்கு நாயகனை யண்டரண்ட
பூரணனை நாகணையிற் புண்ணியனை—வாரணமுன்
வந்தானை யேத்து மறையா யிரந்தமிழாற்
றந்தானை நெஞ்சே தரி.

திருமங்கையாழ்வார்.

நாட்டியசீர்த் தென்னறையூர் நம்பி திருவடிக்கே
சூட்டியதோர் மேகவிடு தூதுக்குக்—கூட்டம்
பொலியன்ப ரேத்தும் புனலாலி நாடன்
கலியன் பரகாலன் காப்பு.

## நூல்.

கலிவெண்பா.

1. சீர்கொண்ட செங்கமலச் செல்வத் திருமகளு
நீர்கொண்ட வேலை நிலமகளு—மேர்கொண்ட

2. காந்தண் மணிக்கடகக் கையா லடிவருடப்
பாந்தண் மணிச்சுடிகைப் பாயன்மேற்—சேர்ந்துறங்குஞ்

3. செங்கண்மா லுந்தித் திருத்தா மரைப்பிறந்த
வங்கண்மா ஞாலத் தனைத்துயிர்க்குந்—தங்காமும்

4. மாரி வழங்குதன் மாறுமே கைம்மாறு
காரிய மென்று கருதாமே—பாரிற்

5. றுளிக்கின்ற தண்ணந் துளியமுத நல்கி
யளிக்கின்ற கொண்மூ வரசே—களிக்கின்ற

6. மேனுலக மேறி விரிஞ்சநா மம்படைத்து
நானு திசைமுகமு நண்ணுதலான்—மானுமா

7. நீலநிற மாகி நிறைகமலக் கண்ணுகிக்
கோல வளையாழி கொள்கையாற்—சூலம்

8. விரவிய பாணியாய் மின்னையிடந் தாங்கி
யரவ மணியு மழகால்—வரமளிக்கு

9. மெத்தே வருக்கு மிறைவராய் மேலாய
முத்தே வருநிகரா மூர்த்தியே—மைத்தகன்ற

10. வானத்து ளேபிறந்து வானத்து ளேதவழ்ந்து
வானத்து ளேவளரும் வானமே—வானத்து

11. வேலைவாய் நீரருந்தி வெற்பி லரசிருந்து
சோலைவாய்க் கண்படுக்குந் தோன்றலே—ஞாலமிசைத்

12. தானமு மெய்யுந் தருமமுங் கல்வியு
மானமுந் தானமு மாதவமு—நானக்

13. கருங்கொண்டை மங்கையர்தங் கற்புநிலை நிற்ப [முவ
தருங்கொண்ட லேயுனைக்கொண் டன்றே—நெருங்கு

14. ராழிநீர் துய்ய வமுதநீ ரானதுவும்
வாழிநீ யுண்ட வளமன்றே—தாழுமடி

15. யாவுஞ்சிந் தாமணியு மம்புயமுஞ் சங்கமுங்
காவும் பணியவுயர் கார்வேந்தே—நாவினாற்

16. சாதகமுந் தோகைத் தனிமையிலும் போலவே
மேதகையை நின்வரவை வேட்டிருந்தேன்—பூதலத்துப்

17. பல்லுயிருங் காக்கப் பரமா முனக்கெனது
புல்லுயிருங் காக்கிற் புகழன்றோ—வல்லதொரு

18. சீருயிரு மேகமே செங்கண்மாற் காளானே
னாருயிரு மேகமே யல்லவோ—பேரரவ

19. நீலமஞ்சே கேட்டியா னின்னையல்லா தென்னையிந்தக்
காலமஞ்சே லென்பாரைக் காண்கிலே—னோலமுறு

20. விண்மாரி யேபெருமான் வேரித் துழாய்வேட்டென்
கண்மாரி பெய்வதெல்லாங் கண்டாயே—தண்மை

21. விளையும் பயோதரமே வெம்பாத செம்பொ
னளையும் பயோதரமே யானேன்—கிளைபிரியாக்

22. கோல மழையே குயின்மா ரனையந்திக்
கால மழையாமே காப்பாரார்—நீலநிற

23 மங்குலுக்கு வேந்தே மலர்க்கண் புதைத்தனைய
கங்குலுக்கு நெஞ்சங் கரைகின்றே—னிங்கு

24. நடந்தகன மேமுலையி னாலுந் தரள
வடந்தகன மேசெய்து மாய்த்தேன்—விடந்திரண்ட

25. திங்களெழி லிக்குச் சிலைமார வெண்முனியி
லெங்களெழி லிக்கரசே யென்செய்கேன்—மங்கலமா

26. மிந்திரவில் வாங்கி யெழுகின்ற மைப்புயலே
வந்திரவில் வாடை வருத்துங்காண்—அந்தரத்து

27. விண்ணே யுனக்கிவற்றை விண்டுரைத்தே னல்லாதெ
னுண்ணேய வேட்கையெவர்க் கோதுவேன்—கண்ண
[ழலால்

28. வெந்தா னிலத்துக்கும் வீறுகத் தாங்குகையான்
மந்தா னிலத்துக்கும் வாய்திறவே—னந்தக்

29. குருத்தத்தை மாரன் குரகதமா மென்றே
வருத்தத்தை யங்குரைக்க மாட்டேன்—கருத்துள்ள

30. மாதண் டலைவாய் மதுகரத்துக் கும்மவன்றன்
கோதண்ட நாணென்று கூறேனுன்—மூதண்ட

31. கோளக் குயிற்கெல்லாங் கோவே யவன்றனது
காளக் குயிற்குங் கழறேனு—னொன்றி

32. லன்புறு வுக்கு மரசனுட லீர்வித்த
புன்புறு வுக்கும் புகன்றிடேன்—மென்புரத்துக்

33. கோம்பிக் குடல்பனிக்குங் கொச்சைமட மஞ்ஞைக்குஞ்
சோம்பித் தளருந் துயர்பணியேன்—றேம்பிரச

34. நிற்கின்ற பூவைக்கு நீள்குழலார் சொல்லியதே
கற்கின்ற பூவைக்குங் கட்டுரையேன்—பொற்கால்

35. வெறிப்பதும வீட்டன்னம் வெண்பாலு நீரும்
பிறிப்பதுபோ னட்பும் பிறிக்குங்—குறிப்பறிந்து

36. காதலா லுள்ளக் கவலை யதுகேட்க
வோதலால் காதெதன் றுரையாடே—ணுதலா

37. லுள்ளே புழுங்குவ தன்றி யொருவருக்கும்
விள்ளே னுனக்கு விளம்பினேன்—றெள்ளியநா

38. லோதுவா ரெல்லா முதவுவார்க் கொப்புரைக்க
வேதுவாய் நின்ற வெழிலியே—பூதலத்துப்

39. பெய்யுதவி யும்புரிந்தாற் பேச்சுதவி யுஞ்சிறிது
மெய்யுதவி யும்புரிய வேண்டாவோ—துய்ய

40. அடலாழி யானடிக்கே யன்பாய காதற்
கடலாழி மூழ்கினேன் கண்டா—யுடல்வாடி

41. விம்முகிலே சந்தாக மீளத் திருமால்பான்
மைம்முகிலே சந்தாக மாட்டாயோ—பெய்ம்மதவேள்

42. தண்ணப்பஞ் செய்வதெல்லாந் தாமோ தரனடிக்கீழ்
விண்ணப்பஞ் செய்தருள வேண்டாவோ—வெண்ணத் [தின்

43. சேதரனை நீயிரந்து தெய்வத் துழாய்கொணர்ந்தெ
ணுதரவு தீர்த்தருள லாகாதோ—கேதகைக்கு

44. மின்கேள்வ னுக்கியநீ விண்ணோர் பெருமானை
யென்கேள்வ னுக்கினு லோகாதோ—முன்கேட்டு

45. மெள்ளரிய தாம மெனக்குதவா யேலுனக்கு
வள்ளலெனு நாமம் வழுவாதோ—தெள்ளுகடன்

46. ஞாலத் துளவமே நல்லிளமை போகாமற்
கோலத் துளவமே கொண்டுதவாய்—சீலத்தா

47. லூனு யுடலா யுறுதுணையாய்த் தெய்வமா
யானு மருந்தாயென் னுருயிரா—யானுத

48. நெஞ்சமாய்க் கண்ணாய் நினைவாய் வினையேற்குத்
தஞ்சமாய் நின்ற தனிமுதலே—பஞ்சவர்க்காய்

49. மெய்த்தூது சென்றவரை வெல்லவே வெண்சங்கம்
வைத்தூது செங்கமல மாயோன்பா—லித்தூது

50. நல்லதெனக் காரே நடந்தருள வேண்டுநீ
யல்லதெனக் காரே யருள்செய்வார்—சொல்லித்

51. தருதுமெனக் கந்தரமே சாற்றுயே லுய்யக்
கருதுமெனக் கந்தரமே கண்டாய்—பெரிது

52. மெனைத்தோன்றி யோதுயர மெய்தினார் பார்மே
லுனைத்தோன்றி யோதா துழன்றார்—நினைத்தார்

53. தமது பிறப்பறுக்குந் தாயாகி மேனு
ளமுதிற் பிறந்தாள்பா லன்றோ—நமது

54. கருமஞ் சனையவற்காய்க் காய்கதிரைப் பாய்ந்து
பொருமஞ் சனைசிறுவன் போனன்—றரணிதனின்

55. மீது பரவை விடமுண் டவனன்றே
மாது பரவை மனைவந்தா—னுதலா

56. லோது மிவரி லுயர்ந்தோ ரிலையன்றே
தூதுபுரிந் தோரைத் தொகுத்துரைத்தேன்—ஆதலாற்

57. றேனின் புறத்தூது தெய்வத் துளவினன்பா
யானின் புறத்தூ தெழுந்தருளாய்—வானிற்

58. றிவலை பிலிற்றிவருந் தெய்வமே நீயென்
கவலையறத் தூதுபோங் காலை—குவலயத்தி

59. லெம்பிரா னாரு மவர்பெயரு மெற்பயின்ற
தம்பிரான் செய்தமையுஞ் சாற்றக்கேள்—உம்பரிற்

60. பன்னிருவர் மான்றேர்ப் பரிதிக் கடவுளரு
மன்னிருவர் தெய்வ மருத்துவரு—மொன்னலரைப்

61. பாயும் விடையர் பதினொருவ ருந்திசையிற்
காயுங் கடாயானைக் காவலருந்—தூயகதிர்

62. வெண்ணிலா விட்டு விளங்குங் கலாமதியு
மெண்ணிலாத் தாரகையி னீட்டமுங்—கண்ணி

63. லருடருமா ஞானத் தருந்தவர் நாகர்
தெருடரும் விஞ்சையர் சித்தர்—கருட

64. ரரக்க ரியக்க ரவுணர் முதலோர்
பரக்குங் கணங்கள் பலரும்—பெருக்கமு

65. நீரேழு மேழு நினது பெருங்கணமும்
பாரேழு மேழு பருப்பதமும்—மீரே

66. ழுடுக்கும் புவனமு மாடகமால் வெற்பு
மெடுக்கு மரவரசு மெல்லாந்—தொடுக்கத்தான்

67. முண்டக நாபி முளைக்குஞ் சதுமுகனே
டண்ட வளாக மடங்கலுங்கண்—கண்டளித்து

68. முன்னிய வண்ண முடித்து விளையாடுந்
தன்னிகரில் லாத தனிமுதல்வன்—அன்னமாய்

69. மீனாகி யாமையாய் வெள்ளேன மாய்மடங்கன்
மானாகி மாயையாய் வாமனமாய்—ஆனாத

70. மானிடராய்ப் பாய்பரியாய் வாழும் மடியவர்க்குத்
தானிடராற் றப்புகுந்த தம்பிரான்—மேனாளிற்

71. பைந்நாகப் பள்ளிமேற் பங்கயங்கள் பூத்தொளிரு
மைந்நாகம் போற்கண் வளருநாட்—பொன்னாய

72. வன்ன முளரி மலர்த்தவிசில் வீற்றிருக்கு
மன்ன முணர்த்தவுண ராமையா—லென்னையெல்லா

73. லிங்கித் திரைமடந்தை யெய்தலுமா யிற்றோவென்
றுன்னித் திரைமடந்தை யூடினளா—வங்கிலையே

74. காயத்திரியுங் கலைமகள்சா வித்திரியு
மாயத் தெரிவையரா யாங்குவர—நேயத்தார்

75. கோலத்தாள் கைதொழுது கூரிலைய முக்கவட்டுச்
சூலத்தா ளேவற் றொழில்கேட்ப—ஞாலத்து

76. மானிட மங்கை வடிவாக வந்துறையுங்
கானிடம் யாதென்று கண்சாத்தி—யானா

77. நலமாகும் யோசனையோர் நாற்றிசையு முத்தித்
தலமாஞ் சுகந்தவனந் தன்னு—ளலமாற

78. வான்றிகழுங் கங்கைமுதன் மங்கைமார் மார்கழியிற்
றோன்றியமுற் பக்கத் துவாதசியிற்—றேன்றிகழுங்

79. கூந்த னணையக் குடைந்தாட லானதிக்கு
வேந்தனென நாமம் விளம்பியே—பாய்ந்த

80. திருமணிமுத் தாறலைக்குந் தீரத்தி னின்ற
மருமருவு வஞ்சியின்கீழ் வைக—வருவாக

81. வானமே தாவி வளரு மகிழடியின்
ஞானமே தாவியெனு நன்முனிவன்—முனெய்திச்

82. செய்ய கமலத்துச் செய்யவளைக் கண்டுவந்தே
யையர் பயந்தெடுத்த வன்னையார்—துய்யபெய

83. ரூரே தெனப்பெயரு மூருமிலை தந்தைதாய்
நீரே யெனமுனிவ னெஞ்சுருகிப்—பாரேத்த

84. மன்னிள வஞ்சியின்கீழ் வந்துறைத லாற்பெயரு
மென்னிள வஞ்சியா ரென்றுரைத்து—தன்னுழையி

85. லான வரமுனிவ னவ்வனத்துக் கொண்டிருப்ப
வானவர் தோலா வலிதோற்றுத்—தானவரால்

86. விண்ணு டிழந்து விரிஞ்சனொடு கூப்பிடுநாட்
டண்ணார் துழாய்மா தவனுணர்ந்து—நண்ணார்

87. மிடைகெடுத்து மென்று விடைகொடுத்த பின்னர்க்
கிடைகெடுத்த செந்துவர்வாய்க்கிள்ளை—யடைகொடுத்த

88. புண்டரிக மாளிகைமேற் பூவை தணந்தமையு
மண்டரெலா மாற்ற லகன்றமையுங்—கண்டருளிச்

89. செந்திருவை நாடுவான் றெய்வ வடிவகற்றி
யைந்துருவ மாகி யவனிமேல்—வந்தருளி

90. யாடற் பறவை யரச னகல்விசும்பு
தேடத் திசையனைத்துந் தேடியநா—ணீடுஞ்

91. சுகந்தவன நோக்கித் துணையாய செல்வி
யுகந்தவன மீதென் றுணர்ந்து—புகுந்தருள

92. மேதாவி கண்டு விருந்தளிப்ப வெவ்வுயிர்க்கு
மாதாவி னல்லான் மகிழ்ந்ததற்பின்—போதார்

93. முருகுவளை மொய்குழலை முன்றிறணிற் கண்டு
பெருகுவளை முன்கை பிடிப்பத்—திருமகளுங்

94. காதலால் வந்தநம்பி கைப்பிடித்தா னென்றலறிக்
கோதிலா மாமுனியைக் கூவுதலும்—வேதியனுங்

95. கண்புகையச் செய்ய கதிர்புகையக் கார்வெளிற
விண்புகைய வாய்துடிப்ப மெய்பதற—மண்புகைய

96. வந்தான் கரகநீர் வாங்கிச் சபிப்பதற்கு
முந்தாமுன் சங்காழி முன்காட்டச்—சிந்தை

97. மயங்கினு னஞ்சினுன் வாய்குழறிப் பார்மேன்
முயங்கினுன் செங்கை முகிழ்த்தான்—றியங்கி

98. யழுதான் றுள்வின்மான் லஞ்சலென வானோர்
விழுதா மரைத்தாளில் வீழ்ந்து—முழுது

99. மறியாமை செய்தே னதுபொறுத்தி யென்ன
வெறியாழி யம்ம னிரங்கிச்—செறிதுழாய்க்

100. கோதை மணம்புணர்ந்த கொண்டலும் புண்டரீக
மாதை மணம்புணர்ந்து வைகியபி—னீதி

101. யறந்திறம்பா நேமியா னவ்வனஞ்சேர் கைக்கும்
பிறந்தார்கள் வீடு பெறற்குஞ்—சிறந்தமலர்

102. மாமாதின் பேரே வழங்குகைக்குங் கேட்டவர
மாமா தவனுக் கருளியபின்—பூமாதைப்

103. பாமாதுள் ளிட்டார் பணிந்துவிடை கொடுபோய்த்
தேமா மலரோன் செவிப்படுப்ப—நாம

104. மறையாள னவ்வனத்து வந்தரசி னீழன்
முறையாய வேள்வி முடித்துப்—பொறையார்ந்த

105. பாதார விந்தம் பணிந்தேத்தப் பாற்கடலிற்
சீதார விந்தத் திருவினெடும்—பூதலத்தோர்

106. பேறுபெற வேபஞ்ச பேர வடிவுகந்து
வீறுபெற மாமுனிக்கும் வீடருளிக்—கூறரிய

107. ஞாலத் தெழுபத்து நான்கு சதுரயுகம்
நீலத் தடவரைபோ னின்றபிரான்—மேலைச்

108. சிகரக் குடகிரியிற் சென்றிழிந்து கீழை
மகரக் கடல்வயிறு மட்டு—மகலிடத்திற்

109. பாரங் கிழித்துப் பரவி மதகிடறி
யாரஞ் சுருட்டி யகிலுருட்டி—நார

110. நுரையெறிந்து வித்துருமக் கொத்து நடங்கத்
திரையெறிந்து முத்தஞ் சிதறிக்—கரையிற்

111. கொழிக்குங்கா வேரி குதித்தோடப் பாய்ந்து
சுழிக்குங்கா வேரித் துறையா—னெழிற்கருகி

112. யோங்கிப் பகலிருளை யுண்டாக்கி யேசுரும்பைத்
தாங்கிப் புயறடுத்த தண்டலையுந்—தேங்கமலப்

113. பூமிசை யன்னம் பொருந்தி வலம்புரியு
நேமியு மேந்திய நீள்கயமுங்—காம

114. ருளமகிழ வெண்ணிலா வொண்கதிரைக் கன்னல்
வளமதனை யீன்ற வயலு—மளவின்றித்

115. தன்னையே போலத் தழைப்பத் தரணிக்கோ
ரன்னையே போல வருள்செய்வான்—மன்னு

116. மருநறையூர் வீதி மணிமாடக் கோயிற்
றிருநறையூர் வாழ்வாசு தேவ—னிரணியனைப்

117. பாரி லுரங்கிழித்த பன்னகத்தான் பன்னகத்தான்
வாரிநிகர் வண்ணத்தான் வண்ணத்தா—னூரிடத்துந்

118. தண்ணளியான் றண்ணளியான் ரூழ்ந்தவன சக்கரத்
[தான்
கண்ணினழகார்முகத்தான்கார்முகத்தான்-விண்ணுலகி

119. னல்லசுரர்க் கண்ணியா ளுறுதுழாய்க் கண்ணியான்
புல்லசுரர்க் குக்கொடியான் புட்கொடியான்—றொல்லி
[லங்கை

120. வஞ்சனை யங்கறுத்தான் வாய்ந்தவடி வங்கறுத்தான்
கஞ்சனைமுன் கண்சிவந்தான் கண்சிவந்தான்—றுஞ்சுந்

121. திரையான் மலரிந் திரையான் கவிகை
வரையான் செழுந்து வரையான்—றரையான

122. மங்கையான் வேதநிய மங்கையான் சென்னியிலோர்
கங்கையான் சூடியகாற் கங்கையான்—பங்கயக்கை

123. யாரணன் கேசவ னாழியா னச்சுதன்
காரண னெம்பெருமான் காகுத்த—னாரணன்

124. யாதவன் கண்ண னிருடிகே சன்முகுந்தன்
மாதவன் கோவிந்தன் வைகுந்தன்—சீதரன்

125. மாய னனந்தன் மதுசூத னன்றிருமா
லாயன் முராரி யருளாளன்—றாயகழற்

126. றேவாதி தேவன் றிருநா யகத்தேவன்
றுவா விடர்கெடுத்த தம்பிரா—னோவாப்

127. படந்திகழ மாடரவப் பாய்க்கிடந்து மேலா
மிடந்திகழ்வை குந்தத் திருந்து—நடந்து

128. பொறையூ ரடிக்கமலம் பூத்தோய வந்து
நறையூரு ணின்றருளு நம்பி—மறையூரு

129. மாயிரம் பேழ்வா யநந்தன் பணாடவிமேன்
மாயிரு ஞால மகிழ்ந்திறைஞ்சச்—சேயிருந்தா

130. ரண்டர் குழாமு மருந்தவ ரீட்டமுந்
தொண்டர் குழாமுந் தொழுதேத்தப்—பண்டைத்

131. திருவாய் மொழியுந் திருமொழியும் வேதாத்
தருவாய் மொழியுந் தழைப்ப—வொருவாத

132. திங்களு நாளுந் திருவிழா நின்றோங்க
மங்கல வெண்சங்கம் வாய்பிளிற—வங்கமர்ந்து

133. நன்பஞ்சேர் நாடகக்கா னம்பிக்கு நாயகித
னின்பஞ்சேர் நாளி லினிதொருநாள்—அன்பமர்ந்து

134. தன்னிசையாற் புள்வேந்தன் சாமவே தம்பாடு
மின்னிசையாற் பள்ளி யெழுந்தருளி—மன்னிச்

135. சிலம்புதிரை மோதுந் திருமணிமுத் தாற்றி
னலம்புதிரு மஞ்சனநீ ராடி—நலம்பரவு

136. சேலை களைந்தணிந்து தெய்வப் பசுந்துளப
மாலை புதிய வகைசூடிக்—கோலந்

137. தயங்குதிரு வாரா தனைகொண்ட பின்ன
ரியங்குகடற் சங்க மிசைப்பப்—பெயர்ந்தோர்

138. திருந்துமணி மண்டபத்துச் சிங்கஞ் சுமந்த
வருந்தவிசி னேறி யருளிப்—பொருந்தியநால்

139. வேதமும் வேதாந்த மெய்த்ததிரு வாய்மொழியு
நாதமுங் கேட்டு நயந்துருகி—யோது

140. மருண வடவரையி னம்பொற் குவட்டிற்
றருண மவுலி தயங்கத்—திருநாம

141. மிட்ட வதனத் தெழுதிய கத்தூரி
வட்ட மதியின் மறுவேய்ப்பக்—கிட்டரிய

142. தேங்குழைக்கீழ்க் கற்பகத்திற் செம்பாம்பு சூழ்ந்த
பூங்குழைக்கீழ் வாகு புரிதயங்கப்—பாங்கிற் [தெனப்

143. பதிக்குங் கவுத்துவமு மார்பும் பரிதி
யுதிக்கு மரகதக்குன் றொப்பக்—குதித்தொருநாட்

144. கால்வீழ்ந்த கங்கை விலங்கிக் கடிமார்பின்
மேல்வீழ்ந்த தென்னமுந்நூல் விட்டிலங்கச்—சூல்வீங்கு

145. கொண்டலின்கீழ்த் தோன்றுங் குடதிசையிற் செக் [கரென
விண்டிலங்கு பொன்னுடை மெய்யசையத்—தொண்ட [ரெலாம்

146. பற்றிக் கழலவிடாப் பாதார விந்தத்தின்
வெற்றிக் கழலின் வெயிலெறிக்க—மற்றுந்தான்

147. வேண்டும் பலகலனு மேகவடி விற்கேற்பப்
பூண்டு களபம் புயத்தணிந்து—நீண்டகடற்

148. பெண்ணு டியதன் பெரிய திருவடிவைக்
கண்ணுடி மண்டலத்திற் கண்சாத்தி—வண்ணத்

149. திருமருங்குற் கேற்றதொரு சிற்றுடைவாள் வீக்கி
யிருமருங்கு மைம்படையு மேந்தித்—திருமறுகிற்

150. போதரலு நாற்கடல்சூழ் பூதலத்தும் வானத்து
மாத ரரம்பையர்கள் வந்தீண்டிப்—பாதந்

151. தொழுவார் வளைகலைநாண் சோர்வார் மயலா
யழுவார் முலைபசலை யாவார்—குழுவாகி

152. யம்மாதர் நிற்ப வருவினையேன் கைதொழுதேன்
விம்மா வெதும்பா மெலிவானேன்—னெம்மானுக்

153. கென்னெஞ்சு மென்கலையு மென்னுணுஞ் சங்குமவன்
றன்னெஞ் சறியத் தனிதோற்றேன்—பின்னுமொரு

154. விண்ணப்ப முண்டென்று மெய்ந்நடுங்கிக் கைகூப்பி
வண்ணத் துகிலொதுக்கி வாய்புதைத்துக்—கண்ணுத [லாம்

155. வீரன் சிலையிறுத்த வேந்தே வினைவிளக்கு
மாரன் சிலையிறுக்க வாராதோ—பாரமலை

156. யன்றெடுத்த கையா லழல்வீ சியதென்றற்
குன்றெடுத்த போது குறையாமோ—நின்றெறிக்குஞ்

157. செய்ய கதிர்மறைத்த சீராழி யான்மதியின்
வெய்ய கதிர்மறைக்க வேண்டாவோ—கையமைத்து

158. முன்னநீ வாயடக்கு முந்நீரை யென்பொருட்டா
லின்னநீ வாயடக்கி லேலாதோ—பன்னகத்தின்

159. பூமரமே பூந்துளைத்த போர்வாளி புன்குயில்வாழ்
மாமரமொன் றுந்துளைக்க மாட்டாதோ—சேமலைந்து

160. மாவாய் பிளந்த மரகதமே வம்புரைப்பார்
நாவாய் பிளந்தா னகையாமோ—பூவாய்த்த

161. தூய குருந்தொசித்த தோளாய் செவிவெதுப்பு
மாயர் குழலொசித்தா லாகாதோ-மாயமாய்க்

162. காதிச் சுழல்காற்றைக் காய்ந்தநீ வாடையாய்
வாதிச் சுழல்காற்றை மாற்றாயோ—மோதிவரும்

163. மண்ணூறு நீங்க வழிகண்ட நீயெனது
கண்ணூறு நீங்கவழி காட்டாயோ—தண்ணூர்ந்த

164. தாதிரும் பைந்துழாய் தாராயேற் கண்ணனென
வோதுதிரு நாமமா சுண்ணாதோ—வீதிருக்க

165. நீநெடுமா லானநிலை நின்சே வடிதொழுது
நானெடுமா லாகவோ நம்பியே—மாநிலத்துப்

166. பாவையர்கைச் சங்கம் பறிப்பதற்கு நின்சங்கந்
தீவகமோ நேமித் திருமாலே—மேவத்

167. திருக்கடைக்கண் சாத்தாய் திருவாய் மலரா
யருட்கடலே யென்னு மளவின்—மருக்கமலை

168. நாதன் சிறிதே நகைகோட்டி வெண்கோட்டு
மாதங்க மீதே மறைதலாற்—சீதரன்றன்

169. வையம் புதைக்கு மலர்கருதி மாரவே
ளெய்யம்பு தைக்கு மிலக்கானேன்-செய்யநிறப்

170. பீதகவா டைக்கும் பெரிய திருவரைக்கும்
பாதகவா டைக்கும் பரிவானே—னாதலா

171. லந்திக் கமல னணையுங்கோ லென்றிருந்தே
னுந்திக் கமலத் துளமானேன்—கொந்துற்ற

172. கொய்துழாய் மார்பகலங் கூடுங்கோ லோவெனவே
கைதுழாய் மண்சுழித்துக் கைசோர்ந்தே—னெய்தி

173. யயனாலுங் காண வரியான் கரிய
புயனாலுங் காணமால் பூண்டேன்—வயமாரன்

174. றாதை திருப்பவளந் தான்வேட் டிளந்தென்ற
லூதை திருப்பவள மொல்கினேன்—மாதுவரை

175. யாயன் பவனிதொழு தன்றுமுத லின்றளவுந்
தூய நயனந் துயினீங்கி—யாயொறுக்கப்

176. பந்து கழன்மறந்து பாவை கிளிதுறந்து
சந்து பனிநீர் தனத்தகற்றி—வெந்துயராய்ப்

177. போதக் கலனிழந்து பூவிழந்து நீரிழந்து
காதற் சிறையிருத்தல் கண்டாயே—மாதுளபத்

178. தாரானை வேட்கையெல்லாந் தந்தானை மும்மதமும்
வாரானை யன்றழைக்க வந்தானைக்—காரான

179. மெய்யானை யன்பருக்கு மெய்த்தானைக் கண்கைகால்
செய்யானை வேலையணை செய்தானை—வையமெலாம்

180. பெற்றானைக் காணப் பெறாதானைக் கன்மழையிற்
கற்றானைக் காத்ததொரு கல்லானை—யற்றார்க்கு

181. வாய்ந்தானைச் செம்பவள வாயானை மாமடியப்
பாய்ந்தானை யாடரவப் பாயானைப்—பூந்துவரை

182. மாமாலைக் கண்டந்தி மாலைவரு முன்னமே
தேமாலை வாங்கநீ செல்லுங்காற்—பூமாயன்

183. முன்னந் தடுத்த முளரித் திருக்கரத்தா
லின்னந் தடுக்குமென வெண்ணூதே—நின்னுடைய

184. தீமுழக்கின் மிக்கதெனச் செங்கண்மால் கைச்சங்கின்
வாய்முழக்கங் கேட்டு மயங்காதே—நீமருவும்

185. வானச் சிலையின் வனப்புளதென் றெம்பெருமான்
கூனற் சிலைகண்டு கூசாதே—மேனிலத்து

186. மின்சோதி யெல்லாம் விழுங்குமென்று நாந்தகத்தின்
நன்சோதி கண்டுமிக நாணூதே—நின்சோதி

187. மையழகி னீல மணியழகி லெம்மான்றன்
மெய்யழகு நன்றென்று வெள்காதே—துய்யமணி

188. யாரக் கபாட மணிக்கோயில் வாசலெல்லாஞ்
சேரக் கடந்து திருமுன்போய்த்—தூரத்தில்

189. நின்று வணங்கி நெடிதேத்தி வாய்புதைத்துச்
சென்று பெருமான் றிருச்செவியிற்—றுன்றுகடற்

190. றையற் கரசேயுன் றூர்வேட் டொருபேதை
மையற் கரைசேரு மாறறியாள்—மெய்யுருகிக்

191. கொம்பனையா ளோர்விரகங் கொண்டா ளதுதன்னை
யெம்பெருமான் கேட்டருளா யேதென்னி—லம்பரமு

192. மட்புலனு முண்டுமிழ்ந்த மாயோ னுறுவமலாற்
கட்புலனும் வேற்றுருவங் காணற்க—புட்புறத்து

193. மூர்த்தி புகழே முகப்பதல்லான் மற்றொருவர்
கீர்த்தி செவிமடுத்துக் கேளற்க—நீர்த்தரங்கப்

194. பூவெடுத்த வெண்கோட்டுப் புண்ணியனை யல்லாதென்
னூவெடுத்து வேறு நவிலற்க—கோவெடுத்த

195. கங்கை யுலவுங் கழலினூற் கல்லாதென்
செங்கை தலைமிசைபோய்ச் சேரற்க—பங்கயத்தா

196. டாக்குந் திருத்துழாய்த் தாமமணா மல்லாதென்
மூக்கும் பிறிதுமணா மோவற்க—மாக்கடல்போ

197. லஞ்சன வண்ண னடிக்கமல மல்லாத
னெஞ்சமு மொன்றை நினையற்க—செஞ்சுணங்கோ

198. டிங்கெழுந்த கொங்கை யெழுபிறப்பு மெம்பெருமான்
கொங்கணைந்த தோளல்லாற் கூடற்க—மங்கைநல்லீ

199. ரென்று வருந்தி யிருந்தா ளவளுக்குன்
மன்றல் கமழ்தார் வழங்கென்று—நின்றிரந்து

200. பண்டுளவத் தாமரையாள் பற்றுந் திருமார்பின்
வண்டுவளத் தார்வாங்கி வா.

செங்கமல வயல்சேருந் திருநறையூர் வாழியே
சீராரு நம்பியினைத் திருவடிகள் வாழியே
பங்கமறு மேதாவி பயந்தசெல்வி வாழியே
பாரின்மறை தென்சொல்லாற் பகுத்துரைப்போன் [வாழியே
யெங்களெதி ராச னிணைமலர்த்தாள் வாழியே
யிடில்வர வரமுனிவ னெப்பொழுதும் வாழியே
செங்கைகுவித் தன்போடு சேவிப்போர் வாழியே
செப்புவோர் வாழிசெவி சேர்ப்போரும் வாழியே.

### இதுவுமது

### கலிநிலைத்துறை

பந்துவராளி ராகம் - ஜம்பை தாளம்

---

கண்ணுஞ்சுழன்று பீளையோடீளைவந்தேங்கினால்
பண்ணின்மொழியார் பையநடமினென்னாதமுன்
விண்ணும்மலையும்வேதமும் வேள்வியுமாயினான்
நண்ணுநறையூர்நாம்தொழுதுமெழு நெஞ்சமே. (1)

கொங்குண்குழலார் கூடியிருந்துசிரித்து நீர்
இங்கென்னிருமி யெம்பால்வந்ததென்றிகழாதமுன்
திங்களெரிகால் செஞ்சுடையாயவன்தேசுடை
நங்கள்நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (2)

கொங்கார்குழலார் கூடியிருந்துசிரித்து எம்மை
ஏங்கோலம்ஐயா ! என்னினிக்காண்பதென்னாதமுன்
செங்கோல்வலவன் தான்பணிந்தேத்தித்திகழுமூர்
நங்கோன்நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (3)

கொம்புமரவமும்வல்லியும்வென்ற நுண்ணேரிடை
வம்புண்குழலார் வாசலடைத்திகழாதமுன்
செம்பொன்கமுகினந்தான் கனியும்செழும்சோலைசூழ்
நம்பனறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே ! (4)

விலங்கும்கயலும் வேலுமொண்காவியும்வென்றகண்
சலம்கொண்டசொல்லார் தாங்கள் சிரித்திகழாதமுன்
மலங்கும்வராலும் வாளையும்பாய்வயல்சூழ்தரு
நலங்கொள்நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (5)

மின்னேரிடையார் வேட்கையைமாற்றியிருந்து
என் ? நீரிருமி யெம்பால்வந்ததென்றிகழாதமுன்
தொன்னீரிலங்கைமலங்க விலங்கெரியூட்டினுன்
நன்னீர்நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்மே. (6)

வில்லேர்நுதலார்கேட்கையை மாற்றிச்சிரித்துஇவன்
பொல்லான்திரைந்தானென்னும் புறனுரைகேட்பதன்முன்
சொல்லார்மறைநான்கோதி யுலகில்நிலாயவர்
நல்லார்நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (7)

வாளொண்கண்ணல்லார் தாங்கள்மதனனென்றார்தம்மை
கேண்மின்களீளேயோடேங்குகிழவனென்னுதமுன்
வேள்வும்விழவும் வீதியிலென்றுமறுதலூர்
நாளுநறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே ! (8)

கனிசேர்ந்திலங்குநல்வாயவர் காதன்மைவிட்டிட
குனிசேர்ந்துடலம் கோலில்தளர்ந்திளேயாதமுன்
பனிசேர்விசும்பில் பான்மதிகோள்விடுத்தானிடம்
நனிசேர்நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே (9)

பிறைசேர்நுதலார் பேணுதல்நம்மையிலாதமுன்
நறைசேர்பொழில்சூழ் நறையூர்தொழுநெஞ்சமேயென்ற
கறையார்நெடுவேல்மங்கையர்கோன் கலிகன்றிசொல்
மறவாதுரைப்பவர் வானவர்க்கின்னரசாவரே. (10)

கண்கொங்குண் கொங்கார் கொம்பு விலங்கு வில் வாள் கனிபிறைகலங்க.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்.

## இதுவுமது

### கலிநிலைத்துறை

### செஞ்சுருட்டி ராகம்—அடதாளம்

கலங்கமுந்நீர்கடைந்தமுதங்கொண்டு இமையோர்
துலங்கல்தீர நல்குசோதிச்சுடராய்
வலங்கையாழியிடங்கைச்சங்க முடையானூர்
நலங்கொள்வாய்மை யந்தணர்வாழும்நறையூரே. (1)

முனையார்சீயமாகி யவுணன்முரண்மார்வம்
புனைவாளுகிரால் போழ்படவீர்ந்தபுனிதனூர்
சினையார்தேமாம் செந்தளிர்கோதிக்குயில்கூவும்
நனையார்சோலைசூழ்ந் தழகாயநறையூரே. (2)

ஆனைப்புரவித் தேரொடுகாலாளணிகொண்ட
சேனைத்தொகையைச்சாடி யிலங்கைசெற்றானூர்
மீனைத்தழுவிவீழ்ந்தெழும் மள்ளர்க்கலமந்து
நானைப்புதலிலாமையொளிக்கும் நறையூரே. (3)

உறியார்வெண்ணெயுண் டுரலோடும்கட்டுண்டு
வெறியார்கூந்தல் பின்னைபொருட்டுஆன்வென்றானூர்
பொறியார்மஞ்ஞை பூம்பொழில்தோறும்நடமாட
நறுநாண்மலர்மேல் வண்டிசைபாடும்நறையூரே. (4)

விடையேழ்வென்று மென்தோளாய்ச்சிக்கன்பனாய்
நடையால்நின்றமருதம்சாய்த்த நாதனூர்
பெடையோடன்னம் பெய்வளையார்தம்பின்சென்று
நடையோடியலி நாணியொளிக்கும்நறையூரே. (5)

பகுவாய்வன்பேய்கொங்கைசுவைத் தாருயிருண்டு
புகுவாய்நின்ற போதகம்வீழப்பொருதானூர்
நெகுவாய்நெய்தல் பூமதுமாந்திகமலத்தின்
நகுவாய்மலர்மே லன்னமுறங்குநறையூரே. (6)

முந்துநூலும்முப்புரிநூலும் முன்னீந்த
அந்தணாளன்பிள்ளையை யந்நான்றளித்தானூர்
பொந்திலவாழும்பிள்ளைக்காகிப் புள்ளோடி
நந்துவாரும் பைம்புனல்வாவிநறையூரே. (7)

வெள்ளைப்புரவித்தேர் விசயர்க்காய்விறல்வியூகம்
விள்ளசிந்துக்கோன்விழவூர்ந்த விமலனூர்
கொள்ளைக்கொழுமீனுண் குருகோடிப்பெடையோடும்
நள்ளக்கமலத்தேறலுகுக்கும் நறையூரே. (8)

பாரையூரும்பாரந்தீரப் பார்த்தன்றன்
தேரையூரும் தேவதேவன்சேருமூர்
தாரையூரும்தண் தளிர்வேலிபுடைசூழ
நாரையூரும் நல்வயல்சூழ்ந்தநறையூரே. (9)

தாமத்துளபநீண்முடிமாயன்தான்நின்ற
நாமத்திரள் மாமாளிகைசூழ்ந்தநறையூர்மேல்
காமக்கதிர்வேல்வல்லான் கலியனொலிமாலை
சேமத்துணையாம் செப்புமவர்க்குத்திருமாலே. (10)

கலங்கமுனை ஆனை உறி விடை பகுவாய் முந்து வெள்ளை
பாரை தாமத்தம்பரம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர்திருவடிகளே சரணம்.

இதுவுமது
**எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்**
தோடிராகம் - ரூபகதாளம்

---

*அம்பரமும்பெருநிலனுந்திசைகளெட்டும்*
*அலைகடலுங்குலவரையு முண்டகண்டன்*
*கொம்பமரும்வடமரத்தினிலைமேல்பள்ளி*
*கூடினான் திருவடியேகூடகிற்பீர்*
*வம்பவிழும் செண்பகத்தின்வாசமுண்டு*
*மணிவண்டுவகுளத்தின் மலர்மேல்வைகு*
*செம்பியன்கோச்செங்கணான் சேர்ந்தகோயில்*
*திருநறையூர்மணிமாடம் சேர்மின்களே.* (1)

*கொழுங்கயலாய்நெடுவெள்ளங் கொண்டகாலம்*
*குலவரையின்மீதோடி யண்டத்தப்பால்*
*எழுந்தினிதுவிளையாடு மீசனெந்தை*
*யிணையடிக்கீழினிதிருப்பீர்; இனவண்டாலும்*
*உழும்செறுவில்மணிகொணர்ந்து கரைமேல்சிந்தி*
*யுலகெல்லாம்சந்தனமுமகிலுங்கொள்ள*
*செழும்பொன்னிவளங்கொடுக்கும் சோழன்சேர்ந்த*
*திருநறையூர்மணிமாடம் சேர்மின்களே.* (2)

*பவ்வநீருடையாடையாகச்சுற்றிப்*
*பாரகம்லதிருவடியாப்பவனம்மெய்யா*
*செவ்விமாதிரமெட்டும் தோளாஅண்டம்*
*திருமுடியாகநின்றான்பால்செல்லகிற்பீர்*
*கவ்வைமாகளிறுந்தி விண்ணியேற்றக்*
*கழல்மன்னர்மணிமுடிமேல் காகமேற*

தெய்வவாள்வலங்கொண்ட சோழன்சேர்ந்த
திருநறையூர்மணிமாடம் சேர்மின்களே. (3)

பைங்கணாளரியுருவாய் வெருவநோக்கிப்
பருவரைத்தோளிரணியனைப்பற்றிவாங்கி
அங்கைவாளுகிர் நுதியாலவனதாகம்
அங்குருதிபொங்குவித்தா னடிக்கீழ்நிற்பீர்
வெங்கண்மாகளிறுந்தி விண்ணியேற்ற
விறல்மன்னர்திறலழிய வெம்மாவுய்த்த
செங்கணான்கோச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர்மணிமாடம் சேர்மின்களே. (4)

அன்றுலகமூன்றனையும் மளந்துவேறோ
ரரியுருவாயிரணியன் தாகங்கீண்டு
வென்றவனைவிண்ணுலகில் செலவுய்த்தாற்கு
விருந்தாவீர்! மேலெழுந்துவிலங்கல்பாய்ந்து
பொன்சிதறிமணிகொணர்ந்து கரைமேல்சிந்திப்
புலம்பரந்துநிலம்பரக்கும் பொன்னிநாடன்
தென்தமிழன்வடபுலக்கோன் சோழன்சேர்ந்த
திருநறையூர்மணிமாடம் சேர்மின்களே. (5)

தன்னாலேதன்னுருவம் பயந்ததானாய்த்
தயங்கொளிசேர்மூவுலகும் தானாய்வானாய்
தன்னாலேதன்னுருவில் மூர்த்திமூன்றாய்த்
தானாயனாயினான் சரணென்றுய்வீர்
மின்னாடுவேளேந்து விளைந்தவேளை
விண்ணேறத்தனிவேலுய்த் துலகமாண்ட
தென்னாடன்குடகொங்கன் சோழன்சேர்ந்த
திருநறையூர்மணிமாடம் சேர்மின்களே. (6)

முலைத்தடத்தநஞ்சுண்டு துஞ்சப்பேய்ச்சி
முதுதுவரைக்குலபதியாக் காலிப்பின்னே
இலைத்தடத்தகுழலூதி யாயர்மாதர்
இனவளைகொண்டானடிக்கீ ழெய்தகிற்பீர்
மலைத்தடத்தமணிகொணர்ந்து வையமுய்ய
வளங்கொடுக்கும்வருபுன லம்பொன்னிநாடன்
சிலைத்தடக்கைக்குலச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர்மணிமாடம் சேர்மின்களே. (7)

முருக்கிலங்குகனித்துவர்வாய்ப் பின்னைகேள்வன்
மன்னெல்லாம்முன்னவியச் சென்றுவென்றிச்
செருக்களத்துத்திறலழியச் செற்றவேந்தன்
சிரந்துணித்தான்திருவடிநும் சென்னிவைப்பீர்
இருக்கிலங்குதிருமொழிவா யெண்டோளீசற்கு
எழில்மாடமெழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்துவளச்சோழன்சேர்ந்தகோயில்
திருநறையூர்மணிமாடம் சேர்மின்களே. (8)

தாராளன்தண்ணரங்க வாளன்பூமேல்
தனியாளன்முனியாளரேத்தநின்ற
பேராளன் ஆயிரம்பேருடையவாளன்
பின்னைக்குமணவாளன் பெருமைகேட்பீர்
பாராளரவரிவரென் றழுத்தையேற்றப்
படைமன்னருடல்துணியப் பரிமாவுய்த்த
தேராளன்கோச்சோலன் சேர்ந்தகோயில்
திருநறையூர்மணிமாடம் சேர்மின்களே. (9)

செம்மொழிவாய்நால்வேத வாணர்வாழும்
திருநறையூர்மணிமாடச் செங்கண்மாலை

*பொய்ம்மொழியொன்றில்லாத மெய்ம்மையாளன்*
*புலமங்கைக்குலவேந்தன் புலவையார்ந்த*
*அம்மொழிவாய்க்கலிகன்றி யின்பப்பாடல்*
*பாடுவார்வியனுலகில் நமனூர்பாடி*
*வெம்மொழிகேட்டஞ்சாதே மெய்ம்மைசொல்லில்*
*விண்ணவர்க்குவிருந்தாகும் பெரும்தக்கோரே.* (10)

*அம்பரம் கொழுப்பவ்வம் பைங்கணன்று தன்னுலே முலைமுருக்கு தாராளன் செம்மொழி ஆளும்.*

*திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்*
*ஜீயர் திருவடிகளே சரணம்.*

---

# திருநறையூர்நம்பி விஷயம்

**அறுசீர்க்கழிநெடிலடிலாசிரிய விருத்தம்**

ஆரபிராகம்-ரூபகதாளம்.

---

ஆளும்பணியுமடியேனைக்கொண்டான் விண்டநிராசரரை
தோளும்தலையும்துணிவெய்தச்சுடுவெஞ்சிலைவாய்ச்சுரந்துரந்தான்
வேளும்சேயுமனையாரும் வேல்கணாரும்பயில்வீதி
நாளும்விழவினொலியோவா நறையூர்நின்றநம்பியே (1)

முனியாய்வந்துமூவெழுகால் முடிசேர்மன்னருடல்துணிய
தனிவாய்மழுவின்படையாண்ட தாரார்தோளான், வார்புறவில்
பனிசேர்முல்லைபல்லரும்பப் பானலொருபால்கண்காட்ட
நனிசேர்கமலமுகங்காட்டும் நறையூர்நின்றநம்பியே. (2)

தெள்ளார்கடல்வாய்விடவாயச் சினவாளரவில்துயிலமர்ந்து
துள்ளாவருமான்வீழ வாளிதுரந்தானிரந்தான்மாவலிமண்
புள்ளார்புறவில்பூங்காவி புலன்கொள்மாதர்கண்காட்ட
நள்ளார்கமலமுகங்காட்டும் நறையூர்நின்றநம்பியே (3)

ஒளியாவெண்ணெயுண்டானென் றுரலோடாய்ச்சியொண்கயிற்றல்
விளியாவார்க்கவாப்புண்டு விம்மியழுதான் மென்மலர்மேல்
களியாவண்டுகள்ளுண்ணக் காமர்தென்றலலர்தூற்ற
நளிர்வாய்முல்லைமுறுவலிக்கும் நறையூர்நின்றநம்பியே. (4)

வில்லார்விழலில்வடமதுரை விரும்பிவிரும்பாமல்லடர்த்து
கல்லார்திரடோள்கஞ்சனைக்காய்ந்தான் பாய்ந்தான்காளியன்மேல்
சொல்லார்சுருதிமுறையோதிச் சோமுச்செய்யும்தொழிலினோர்
நல்லார்மறையோர்பலர்வாழும் நறையூர்நின்றநம்பியே. (5)

வள்ளிகொழுநன்முதலாய மக்களோடுமுக்கணன் [தான்
வெள்கியோட விறல்வாணன்வியன்தோள் வனத்தைத்துணித்துகந்
பள்ளிகமலத்திடைப்பட்ட பகுவாயலவன்முகம்நோக்கி
நள்ளியூடும்வயல்சூழ்ந்த நறையூர்நின்றநம்பியே. (6)

மிடையாவந்தவேல்மன்னர் வீயவிசயன்தேர்கடவி
குடையாவரையொன்றெடுத்தாயர் கோவாய்நின்றான்கூராழிப்
படையான் வேதநான் கைந்துவேள்வி யங்கமாறிசையேழ்
நடையாவல்லவந்தணர்வாழ் நறையூர்நின்றநம்பியே. (7)

பந்தார்விரலாள்பாஞ்சாலிகூந்தல்முடிக்கப் பாரதத்து
கந்தார்களிற்றுக்கழல்மன்னர் கலங்கச்சங்கம்வாய்வைத்தான்
செந்தாமரைமேலயனோடு சிவனுமனையபெருமையோர்
நந்தாவண்கைமறையொர்வாழ் நறையூாநின்றநம்பியே (8)

ஆறும்பிறையுமரவமும் அடம்பும்சடைமேலணிந்து-உடலம்
நீறும்பூசியேறூரு மிறையோன்சென்றுகுறையிரப்ப
மாறொன்றில்லாவாசநீர் வரைமார்வகலத்தளித்துகந்தான்
நாறும்பொழில்சூழ்ந்தழகாய நறையூர்நின்றநம்பியே. (9)

நன்மையுடையமறையோர்வாழ் நறையூர்நின்றநம்பியை
கன்னிமதில்சூழ்வயல்மங்கைக் கலியனொலிசெய்தமிழ்மாலை

பன்னியுலகில்பாடுவார் பாடுசாராபழவினைகள்
மன்னியுலகமாண்டுபோய் வானோர்வணங்கவாழ்வாரே. (10)

ஆளும் முனிதெள்ளாரோளிவில் வள்ளிமிடைபந்து ஆறுநன்மைமான்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்,

---

இதுவுமது
**தரவு கொச்சகக்கலிப்பா**
பைரவி ராகம்—ஜம்பைதாளம்

---

*மான்கொண்டதோல்மார்வில் மாணியாய் மாவலிமண்*
*தான்கொண்டு தாளாலளந்தபெருமானை*
*தேன்கொண்டசாரல் திருவேங்கடத்தானை*
*நான்சென்றுநாடி நறையூரில்கண்டேனே.* (1)

*முந்நீரைமுன்னாள்கடைந்தானை மூழ்த்தநாள்*
*அந்நீரைமீனாயமைத்தபெருமானை*
*தென்னாலிமேயமதிருமாலை யெம்மானை*
*நன்னீர்வயல்சூழ் நறையூரில்கண்டேனே.* (2)

*தூவாயபுள்ளூர்ந்துவந்து, துறைவேழம்*
*மூவாமைநல்கி முதலைதுணித்தானை*
*தேவாதிதேவனைச் செங்கமலக்கண்ணானை*
*நாவாயுளானை நறையூரில்கண்டேனே.* (3)

*ஓடாவரியா யிரணியனையூனிடந்த*
*சேடார்பொழில்சூழ் திருநீர்மலையானை*
*வாடாமலர்த்துழாய் மாலைமுடியானை*
*நாடோறும்நாடி நறையூரில்கண்டேனே.* (4)

கல்லார்மதில்சூழ் கடியிலங்கைக்காரரக்கன்
வல்லாகங்கீள வரிவெஞ்சரம்துரந்த
வில்லானை, செல்வவிபீடணற்குவேறாக
நல்லானை, நாடி நறையூரில்கண்டேனே. (5)

உம்பருலகோடுயிரெல்லாம் உந்தியில்
வம்புமலர்மேல்படைத்தானை, மாயோனை
அம்பன்னகண்ணா ளசோதைதன்சிங்கத்தை
நம்பனைநாடி நறையூரில்கண்டேனே. (6)

கட்டேறுநீள்சோலைக் காண்டவத்தைத்தீமூட்டி
விட்டானை மெய்யமமர்ந்தபெருமானை •
மட்டேறுகற்பகத்தை மாதர்காய்வண்துவரை
நட்டானைநாடி நறையூரில்கண்டேனே. (7)

மண்ணின்மீபாரங்கெடுப்பான் மறமன்னர்
ண்ணின்மேல்வந்த படையெல்லாம் பாரதத்து
விண்ணின்மீதேற விசயன்தேரூர்ந்தானை
நண்ணினான்நாடி நறையூரில்கண்டேனே. (8)

பொங்கேறுநீள்சோதிப் பொன்னாழிதன்னோடும்
சங்கேறுகோலத் தடக்கைப்பெருமானை
கொங்கேறுசோதக் குடந்தைக்கிடந்தானை
நங்கோனைநாடி நறையூரில்கண்டேனே. (9)

மன்னுமதுளை வசுதேவர்வாழ்முதலை
நறையூர்நின்றநம்பியை வம்பவிழ்தார்
கன்னவிலும்தோளான் கலியனொலிவல்லார்
பொன்னுலகில்வானவர்க்குப் புத்தேளிராகுவரே. (10)

*மான்முந்நீர்தூவாய் ஓடாகல்லும்பர் கட்டேறு மண் பொங்கு மன்னுபெடை.*

*திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.*
*ஜீயர் திருவடிகளே சரணம்.*

---

இதுவுமது
**தரவு கொச்சகக்கலிப்பா**
யமுனாகல்யாணி ராகம்—ரூபக தாளம்

---

பெடையடர்த்தமடவன்னம் பிரியாது மலர்க்கமலம்
மடலெடுத்துமது நுகரும் வயலுடுத்ததிருநறையூர்
முடையடர்த்தசிரமேந்தி மூவுலகும்பலிதிருவோன்
இடங்கெடுத்ததிருவாள னிணையடியேயடைநெஞ்சே, (1)

கழியாரும்கனசங்கம் கலந்தெங்கும்நிறைந்தேறி
வழியாரமுத்தீன்று வளங்கொடுக்கும் திருநறையூர்
பழியாரும்விறலரக்கன் பருமுடிகளவைசிதற
அழலாரும் சரந்துரந்தா னடியிணையேயடைநெஞ்சே. (2)

கலைகொண்டபலங்கனிகள் தேன்பாய கதலிகளின்
திலைகொண்டபழம் கெழுமு திகழ்சோலைத்திருநறையூர்
வலைகொண்டவண்ணத்தன் பின்தோன்றல், மூவுலகோடு
அலைவெண்ணெயுண்டான்ற னடியிணையேயடைநெஞ்சே. (3)

துன்றோளித்துகில்படலம் துன்னியெங்கும்மாளிகைமேல்
நின்றாரவான்மூடும் நீள்செல்வத்திருநறையூர்
மன்றாரக்குடமாடி வரையெடுத்துமழைதடுத்த
குன்றாரும்திரடோளன் குரைகழலேயடைநெஞ்சே. (4)

அகிற்குறடும்சந்தனமும் மம்பொன்னும்மணிமுத்தும்
மிகக்கொணர்ந்துதிரையுந்தும் வியன்பொன்னித்திருநறையூர்

பகல்கரந்தசுடாழிப்படையான் இவ்வுலகேழும்
புகக்கரந்ததிருவயிற்றன் பொன்னடியேயடைநெஞ்சே. (5)

பொன்முத்துமரியுகிரும் புழைக்கம்மாகரிகோடும்
மின்னத்தண்திரையுந்தும் வியன்பொன்னித்திருநறையூர்
மின்னொத்தநுண்மருங்குல் மெல்லியலை திருமார்வில்
மன்னத்தான்வைத்துகந்தான் மலரடியேயடைநெஞ்சே. (6)

சீர்தழைத்தகதிர்ச்செந்நெல் செங்கமலத்திடையிடையின்
பார்தழைத்துக்கரும்போங்கிப் பயன்விளைக்கும்திருநறையூர்
கார்தழைத்ததிருவுருவன் கண்ணபிரான்விண்ணவர்கோன்
தார்தழைத்ததுழாய்முடியன் தளிரடியேயடைநெஞ்சே. (7)

குலையார்ந்தபழுக்காயும் பசுங்காயும்பாளைமுத்தும்
தலையார்ந்தவிளங்கமுகின் தடஞ்சோலைத்திருநறையூர்
மலையார்ந்தகோலஞ்சேர் மணிமாடம்மிகமன்னி
நிலையாரநின்றான்றன் நீள்கழலேயடைநெஞ்சே. (8)

மறையாரும்பெரும்வேள்விக் கொழும்புகைபோய்வளர்ந்து எங்கும்
நிறையாரவான்மூடும் நீள்செல்வத்திருநறையூர்
பிறையாரும்சடையானும் பிரமனுமுன்தொழுதேத்த
இறையாகிநின்றான்றன் னிணையடியேயடைநெஞ்சே. (9)

திண்களகமதிள்புடைசூழ் திருநறையூர்நின்றானை
வண்களகநிளவெறிக்கும் வயல்மங்கைநகராளன்
பண்களம்பையின்றசீர்ப் பாடலிவைபத்தும்வல்லார்
விண்களகத்திமையவராய் வீற்றிருந்துவாழ்வாரே. (10)

பெடை கழி சுனை நுன்று அகில் பொன் சீர்குலை மறைதிண் கிடந்த.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

## இதுவுமது

## அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

## கமாசுராகம்—திருபுடை தாளம்

கிடந்தநம்பிகுடந்தைமேவிக் கேழலயுலகை
யிடந்தநம்பி எங்கள்நம்பி யெறிஞாரணழிய
கடந்தநம்பிகடியாரிலங்கை, உலகையீரடியால்
நடந்தநம்பிநாமம்சொல்லில் நமோநாராயணமே. (1)

விடந்தானுடையவரவம்வெருவச் செருவில்முனநாள் முன்
தடந்தாமரைநீர்ப்பொய்கைப்புக்கு மிக்கதாடாளன்
இடந்தான்வையம்கேழலாகி, உலகையீரடியால்
நடந்தானுடையநாமம்சொல்லில் நமோநாராயணமே. (2)

பூணுதனலும்தறுகண்வேழம் மறுக வளைமருப்பைப்
பேணான்வாங்கியமுதம் கொண்ட பெருமான்திருமார்வன்
பாணுவண்டுமுரலும்கூந்த லாய்ச்சிதயிர்வெண்ணெய்
நாணுதுண்டான்நாமம்சொல்லில் நமோநாராயணமே. (3)

கல்லார்மதிள்சூழ் கச்சிநகருள்நச்சி பாடகத்துள்
எல்லாவுலகும்வணங்க விருந்தவம்மான் இலங்கைக்கோன்
வல்லாளாகம்வில்லால்முனிந்த வெந்தை விபீடணற்கு
நல்லானுடையநாமம்சொல்லில் நமோநாராயணமே. (4)

குடையாவரையால் நிரைமுன்காத்தபெருமான் மருவாத
விடைதானேழும்வென்றான்கோவல்நின்றான் தென்னிலங்
அடையார்வரக்கர்வீயப்பொருது மேவிவெங்கூற்றம் [கை
நடையாவுண்ணக்கண்டான்நாமம் நமோநாராயணமே. (5)

கான எண்கும்குரங்கும் முசுவும்படையா அடலரக்கர்
மானமழித்துநின்ற வென்றியம்மான் எனக்கென்றும்
தேனும்பாலுமமுதுமாய திருமால்திருநாமம்
நானும்சொன்னேன்நமருமுரைமின் நமோநாராயணமே. (6)

நின்றவரையும்கிடந்தகடலும் திசையுமிருநிலனும்
ஒன்றுமொழியாவண்ணமெண்ணி நின்றவம்மானார்
குன்றுகுடையாவெடுத்த வடிகளுடையதிருநாமம்
நன்றுகாண்மின்தொண்டீர்சொன்னேன் நமோநாரா
[யணமே (7)

கடுங்கால்மாரிகல்லேபொழிய அல்லேயெமக்கென்று
படுங்கால் நீயேசரணென்றாயரஞ்சவஞ்சாமுன்
நெடுங்கால்குன்றம்குடையொன்றேந்திநிரையைச்சிரமத்தால்
நடுங்காவண்ணம்காத்தான்நாமம் நமோநாராயணமே. (8)

பொங்குபுணரிகடல்சூழாடை நிலமாமகள்மலர்மா
மங்கை பிரமன்சிவனிந்திரன்வானவர் நாயகராய
எங்களடிகளிமையோர்தலைவருடையதிருநாமம்
நங்கள்வினைகள்தவிரவுரைமின் நமோநாராயணமே. (9)

வாவித்தடஞ்சூழ்மணிமுத்தாற்று நறையூர்நெடுமாலை
நாவில்பரவிநெஞ்சில்கொண்டு நம்பிநாமத்தை
காவித்தடங்கண்மடவார்கேள்வன் கலியனொலிமாலை
மேவிச்சொல்லவல்லார்பாவம் நில்லாவீயுமே. (10)

கிடந்தவிடம் பூண் கல் குடைகானம் நின்றகடும் பொங்குவாவிகறவா.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

இதுவுமது

**தரவு கொச்சகக்கலிப்பா**

முகாரி ராகம் — ரூபக தாளம்

---

கறவாமடநாகு தன்கன்றுள்ளினாற்போல்
மறவாதடியே னுன்னையேயழைக்கின்றேன்
நறவார்பொழில்சூழ் நறையூர்நின்றநம்பி
பிறவாமையெனைப்பணி யெந்தைபிரானே. (1)

வற்றாமுதுநீரொடு மால்வரையேழும்
துற்றாகமுன்துற்றிய தொல்புகழோனே
அற்றேனடியே னுன்னையேயழைக்கின்றேன்
பெற்றேனருள்தந்திடு எனெந்தைபிரானே. (2)

தாரேன்பிறர்க் குன்னருளென்னிடைவைத்தாய்
ஆரேனதுவே பருகிக்களிக்கின்றேன்
காரேய்கடலேமலையே திருக்கோட்டி
யூரே உகந்தாயை யுகந்தடியேனே. (3)

புள்வாய்பிளந்தபுனிதா என்றழைக்க
உள்ளேநின்றென்னுள்ளங் குளிருமொருவா
கள்வா! கடன்மல்லைக்கிடந்தகரும்பே!
வள்ளாலுன்னை யெங்ஙனம்நான்மறக்கேனே. (4)

வில்லேர்நுதல் வேல்நெடுங்கண்ணியும்நீயும்
கல்லார்கடுங்கானம் திரிந்தகளிறே
நல்லாய்நரநாரணனே யெங்கள்நம்பி
சொல்லாயுன்னை யான்வணங்கித்தொழுமாறே. (5)

பனியேய் பரங்குன்றின்பவளத்திரளே
முனியேதிருமூழிக் களத்துவிளக்கே
இனியாயதொண்டரோம் பருகின்னமுதாய
கனியே உன்னைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. (6)

கதியேலில்லை நின்னருளல்லதெனக்கு
நிதியே! திருநீர்மலைநித்திலத்தொத்தே!
பதியேபரவித்தொழும் தொண்டர் தமக்குக்
கதியே உன்னைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. (7)

அத்தாவரியே யென்றுன்னையழைக்க
பித்தாவென்றுபேசுகின்றார் பிறரென்னை
முத்தேமணிமாணிக்கமே முளைக்கின்ற
வித்தே உன்னையெங்ஙனம்நான்விடுகேனே? (8)

தூயாய்சுடர்மாமதிபோ லுயிர்க்கெல்லாம்
தாயாயளிக்கின் தண்டாமரைக்கண்ணா
ஆயாவலைநீருலகேழும்முன்னுண்ட
வாயா உன்னையெங்ஙனம்நான்மறக்கேனே. (9)

வண்டார்பொழில்சூழ் நறையூர்நம்பிக்கு என்றும்
தொண்டாய்க்கலியனொலிசெய்தமிழ்மாலை
தொண்டீரிவைபாடுமின் பாடிநின்றாட
உண்டேவிசும்பு உந்தமக்கில்லைதுயரே. (10)

கறவா வற்றா தாரேன் புள் வில் பனி கதி அத்தா தூயாய் வண்டார் புள்ளாய்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஜீயர் திருவடிகளே சரணம்.

## இதுவுமது

## தரவு கொச்சகக்கலிப்பா

### கேதாரகௌளராகம்—ஆதிதாளம்

புள்ளாயேனமுமாய்ப்புகுந்து என்னையுள்ளங்கொண்ட
கள்வாவென்றலும்என்கண்கள் ர்கள்சோர்தருமால்
உள்ளேநின்றுருகி நெஞ்சமுன்னையுள்ளியக்கால்
நள்ளேனுன்னையல்லால் நறையூர்நின்றநம்பியோ. (1)

ஓடாவாளரியினுருவாய்மருவி என்றன்
மாடேவந்தடியேன்மனங்கொள்ளவல்லமைந்தா
பாடேன்தொண்டர்தம்மைக் கவிதைப்பனுவல்கொண்டு
நாடேனுன்னையல்லால் நறையூர்நின்றநம்பியோ. (2)

எம்மானுமெம்மனையு மென்னைப்பெற்றொழிந்ததற்பின்
அம்மானுமம்மனையு மடியேனுக்காகிநின்ற
நன்மானவொண்சுடரே நறையூர்நின்றநம்பி உன்
மைம்மானவண்ணமல்லால் மகிழ்ந்தேத்தமாட்டானே. (3)

சிறியாயோர்பிள்ளையுமா யுலகுண்டோராலிலைமேல்
உறைவாய் என்நெஞ்சினுள்ளே யுறைவாய், உறைந்ததுதான்
அறியாதிருந்தறியேனடியேன், அணிவண்டுகிண்டும்
நிறைவாரும்பொழில்சூழ் நறையூர்நின்றநம்பியோ. (4)

நீண்டாயைவானவர்கள் நினைந்தேத்திக்காண்பரிதால்
ஆண்டாயென்றாதரிக்கப் படுவாய்க்குநானடிமை
பூண்டேன் என்நெஞ்சினுள்ளே புகுந்தாயைப்போகலொட்
[டேன்
நாண்தானுனக்கொழிந்தேன் நறையூர்நின்றநம்பியோ. (5)

எந்தாதைதாதைதையப்பா லெழுவர்பழவடிமை
வந்தார் என்னெஞ்சினுள்ளே வந்தாயைப்போகலொட்டேன்
அந்தோ ! என்னுருயிரே ! அரசே யருளெனக்கு
நந்தாமல்தந்தவெந்தாய் ! நறையூர்நின்றநம்பீயோ ! (6)

மன்னஞ்சவாயிரந்தோள் மழுவில்துணித்தமைந்தா !
என்னெஞ்சத்துள்ளிருந் திங்கினிப்போய்ப்பிறரொருவர்
வன்னெஞ்சம்புக்கிருக்க வொட்டேன்வளைத்துவைத்தேன்
நன்னெஞ்ச வன்னம்மன்னும் நறையூர்நின்றநம்பீயோ. (7)

எப்போதும்பொன்மலரிட் டிமையோர்தொழுது தங்கள்
கைப்போதுகொண்டிறைஞ்சிக் கழல்மேல்வணங்கநின்றாய்
இப்போதென்னெஞ்சினுள்ளே புகுந்தாயைப்போகலொட்
[டேன்
நல்போதுவண்டுகிண்டும் நறையூர்நின்றநம்பீயோ. (8)

ஊனேராக்கைதன்னை யுழந்தோம்பிவைத்தமையால்
யானாயென்றனக்கா யடியேன்மனம்புகுந்த
தேனே தீன்கரும்பின்தெளிவே என்சிந்தைதன்னால்
நானேயெய்தப்பெற்றேன் நறையூர்நின்றநம்பீயோ. (9)

நன்னீர்வயல்புடைசூழ் நறையூர்நின்றநம்பியை
கல்நீரமால்வரைத்தோள்கலிகன்றி மங்கையர்கோன்
சொல்நீரசொல்மாலைசொல்லுவார்கள் சூழ்விசும்பில்
நன்னீர்மையால்மகிழ்ந்து நெடுங்காலம்வாழ்வாரே. (10)

புள் ஓடா எம்மான் சிறியாய் நீண்டாய் எந்தாதை மன் எப்போதும் ஊனேர் நன்னீர் சினவில்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

## இதுவுமது
### எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்
மோகனராகம்—ரூபகதாளம்

*சினவில்செங்கணரக்கருயிர்மாளச்
செற்றவில்லியென்று கற்றவர் தந்தம்
மனமுட்கொண்டு - என்றுமெப்போதும்
நின்றேத்தும்மாமுனியை, மாமேழெய்தமைந்தனை
நனவில்சென்றார்க்கும் நண்ணற்கரியானை
நானடியேன்நறையூர்நின்றநம்பியை
கனவில் கண்டேனின்றுகண்டமையாலென்
கண்ணிணைகள்களிப்பக்களித்தேனே.* (1)

*தாய்நினைந்தகன்றேயொக்க வென்னையும்
தன்னையே நினைக்கச்செய்து, தானெனக்
காய நினைந்தருள்செய்யுமப்பனை
அன்றிவ்வையகமுண்டுமிழ்ந்திட்ட
வாயனை மகரக்குழைக்காதனை
மைந்தனை மதிள்கோவலிடைகழி
யாயனை அமரர்க்கரியேற்றை யென்
னன்பனையன்றி யாதரியேனே.* (2)

*வந்தநாள்வந்தென்நெஞ்சிடங்கொண்டான்
மற்றோர்நெஞ்சறியான் அடியேனுடைச்
சிந்தையாய்வந்து தென்புலர்க்கென்னைச்
சேர்கொடா னிதுசிக்கெனப்பெற்றேன்
கொந்துலாம்பொழில்சூழ்குடந்தைத்தலைக்
கோவினை, குடமாடியகூத்தனை
எந்தையையெந்தைதந்தைதம்மானை
எம்பிரானையெத்தால்மறக்கேனே.* (3)

உரங்களாலியன்றமன்னர்மாளப்
பாரதத்தொருதேரைவர்க்காய்ச்சென்று
இரங்கியூர்ந்தவர்க்கின்னருள்செய்யும்
எம்பிரானை, வம்பார்புனல்காவிரி
அரங்கமாளியென்னாளிவிண்ணாளி
ஆழிசூழிலங்கைமலங்கச்சென்று
சரங்களாண்டதண்டாமரைக் கண்ணனுக்
கன்றியென்மனம் தாழ்ந்துநில்லாதே. (4)

ஆங்குவெந்நரகத்தழுந்தும்போ தஞ்சே
லென்றடியேனையங்கேவந்து
தாங்கு தாமரையன்னபொன்னாரடி
யெம்பிரானை உம்பர்க்கணியாய் நின்ற
வேங்கடத்தரியைப்பரிகீறியை
வெண்ணெயுண் டுரலினிடையாய்ப்புண்ட
தீங்கரும்பினை தேனைநன்பாலினை
யன்றியென்மனம் சிந்தைசெய்யாதே. (5)

எட்டனைப்பொழு தாகிலுமென்று
மென்மனத்தகலாதிருக்கும்புகழ்
தட்டலர்த்தபொன்னே யலர்கோங்கின்
தாழ்பொழில்திருமாலிருஞ்சோலையங்
கட்டியை கரும்பீன்றவின்சாற்றைக்
காதலால்மறைநான்குமுன்னோதிய
பட்டனை பரவைத்துயிலேற்றையென்
பண்பனையன்றிப் பாடல்செய்யேனே. (6)

பண்ணினின்மொழியாழ்நரம்பில்பெற்ற
பாலையாகியிங்கேபுகுந்து - என்
கண்ணும்நெஞ்சும்வாயுமிடங்கொண்டான்

கொண்டபின்மறையோர் தன்னுள்
விண்ணுளார்பெருமானையெம்மானை
வீங்குநீர்மகரம்திளைக்கும்கடல்
வண்ணன் மாமணிவண்ணனெம்மண்ணல்
வண்ணமேயன்றி வாயுரையாதே. (7)

இனியெப்பாவம்வந்தெய்தும்சொல்லீர்
எமக்கிம்மையேயருள்பெற்றமையால் அடும்
துனியைத் தீர்த்தின்பமேதருகின்றதோர்
தோற்றத்தொன்னெறியை வையம்தொழப்படும்
முனியை, வானவரால் வணங்கப்படும்
முத்தினைப் பத்தர்தாம்நுகர்கின்றதோர்
கனியை காதல்செய்தென்னுள்ளங்கொண்ட
கள்வனை யின்றுகண்டுகொண்டேனே. (8)

என்செய்கேனடியேனுரையீர் இதற்கென்று
மென்மனத்தேயிருக்கும்புகழ்
தஞ்சையாளியைப் பொன்பெயரோன்
நெஞ்சமன்றிடந்தவனை, தழலேபுரை
மின்செய்வாளரக்கன்நகர்பாழ்படச்
சூழ்கடல்சிறைவைத்து, இமையோர்தொழும்
பொன்செய்மால்வரையை மணிக்குன்றினை
யன்றியென்மனம்போற்றியென்னாதே (9)

தோடுவிண்டலர்பூம்பொழில்மங்கையர்
தோன்றல் வாள்கலியன் திருவாலி
நாடன் நின்னறையூர்நின்றநம்பிதன்
நல்லமாமலர்ச்சேவடிசென்னியில்
சூடியும் தொழுதுமெழுந்தாடியும்
தொண்டர்கட்கவன் சொன்னசொல்மாலை

பாடல்பத்திவை பாடுமின்தொண்டீர்
பாட நும்மிடைப்பாவம் நில்லாவே. (10)

சினவில் தாய் வந்த உரங்கள் ஆங்கு எட்டனை பண்ணின் இனி யென செய்கேன் தோடு கண்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

## பெரிய திருமடல்.

இரும்பொழில்சூழ் மன்னுமறையோர் திருநறையூர்மாமலைபோல்
பொன்னியலுமாடக் கவாடம்கடந்துபுக்கு (1)
என்னுடையகண்களிப்ப நோக்கினேன்—நோக்குதலும்
மன்னன்திருமார்பும் வர்யுமடியிணையும். (2)
பன்னுகரதலமும் கண்களும்—பங்கயத்தின்
பொன்னியல்காடோர் மணிவரைமேல்பூத்ததுபோல் (3)
மின்னியொளிபடைப்ப வீணும்தோள்வளையும்
மன்னியகுண்டலமு மாரமும்நீண்முடியும் (4)
துன்னுவெயில்விரித்த சூளாமணியிமைப்ப
மன்னுமரகதக் குன்றின்மருங்கே—ஓர் (5)
இன்னிளவஞ்சிக் கொடியொன்றுநின்றதுதான்
அன்னமாய்மானு யணிமயிலாயாங்கிடையே (6)
மின்னுயிளவே யிரண்டாயிணைச்செப்பாய்
முன்னயதொண்டையாய்க் கெண்டைக்குலமிரண்டாய் (7)
அன்னதிருவுருவம் நின்றதறியாதே
என்னுடையசெஞ்சு மறிவுமினவளையும். (8)
பொன்னியலும்மேகலையு மாங்கொழியப் போந்தேற்கு
மன்னுமறிகடலு மார்க்கும். (9)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருநறையூர்த் தல வரலாறு.

## தியான சுலோகம்.

சாந்தம் சாரத சந்த்ரகோடி வதனம் பீதாம்பராலங்ருதம்
ச்யாமம் வஞ்சுள நாயகம் ஸுரதரும் ஸங்கர்ஷணத்யைர் வ்ருதம்
ஸ்ரீமத்திவ்ய ஸுரகந்தீ பூதாவரோஸம் பூஜிதம் ப்ரம்மண
ஸ்ர்வாபீஷ்ட பலப்ரதம் நாவபும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜே.

---

**குலையார்ந்த பழுக்காயும் பசுங்காயும் பாளைமுத்தும்**
**தலையார்ந்த விளங்கமுகின் தடஞ்சோலைத் திருநறையூர்**
**மலையார்ந்த கோலஞ்சேர் மணிமாடம் மிக மன்னி**
**நிலையார நின்றான்றன் நீள்கழலே யடைநெஞ்சே.**

---

**செய்ய சடையோன் திசைமுகத்தோன் வானவர்கோன்**
**ஐய மறுத்தின்ன மறியாரே — துய்ய**
**மருநறையூர் வண்டுழாய் மாயோன் செவ்வாயோன்**
**திருநறையூர் நின்றான் செயல்.**

கங்கையிற் புனிதமாய காவிரி பாய்ந்துபாயும் நலம் பல நிறைந்த சோழ நன்னாட்டிற்குத் திலதமெனத் திகழ்வது **திருநறையூர்** என்னும் திவ்யதேசம், இத்திருப்பதி, தஞ்சை ஜில்லா கும்பகோணம் தாலுக்காவில் இலங்கித் துலங்கும் திருக்கோயிலுடன் மிளிர்ந்து ஒளிர்வதாகும். நாச்சியார்

கோயிலென்று வழங்கப்பெறும் இத்திருநறையூர் கும்பகோணம் ரயில்வே நிலையத்திலிருந்து கிழக்கே 5 மைல் தூரத்தில், கும்பகோணம் - திருவாரூர் பஸ் மார்க்கத்தில் உள்ளது. இத்தலம் சோழநாட்டுத் திருப்பதியுள் ஒன்று. சோழன் கோச்செங்கணான் நம்பியைப் பணிந்து சேர பாண்டியர்களை வெல்லுதற்கு வெற்றிவாள் பெற்ற தலம் இதுவே. இத்தலத்திற்குச் செல்ல கும்பகோணமிருந்து பஸ் முதலிய வண்டி வசதிகளுண்டு. இப்பகுதிக்குத் தென்பால் மூன்று பர்லாங்கு தூரத்தில் திருமலைராயன் ஆறும், வடபால் ஐந்து பர்லாங்கு தூரத்தில் அரிசொல்லாறும் ஓடுகின்றன. நாலாயிரம் ஜனத்தொகையுடைய இவ்வூரின் சீதோஷ்ண ஸ்திதி வாசத்திற்கேற்றது. இங்கு தங்குவதற்குச் சத்திரமும் உண்டிச்சாலைகளுமிருக்கின்றன.

## தலச்சிறப்பு.

"மண்ணிலிதுபோல நகரில்லை" யென்னும் பெருமையுடைய இந்நன்னகர் சித்திக்ஷேத்திரம், சுகந்தவன க்ஷேத்திரம், சுகந்தகிரி, ஸ்ரீநிவாச க்ஷேத்திரம், நாச்சியார்கோயில் என்னும் பல பெயர்களால் போற்றப்பெறுவது. சுயம்பு ஸ்தலங்களான திருப்பாற்கடல், திருவரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருவேங்கடம், சாளக்கிராமம், வானமாமலை, புஷ்கரம், வதரிகாச்சிரமம், நைமிசாரண்யம், வடரங்கம், ஸ்ரீநிவாசம், துவாரகை என்னும் முத்திதரும் தலங்கள் பன்னிரண்டினுள் இத்தலம் முதன்மைபெறும் புனிதமும் பெருமையும் உடையதாகும்.

ஒன்றிலொன்றுங் குறைவில்லாத பூரணஞான நம்பியெம்பெருமான், "நிலையாரநின்றான்" என்றபடி நித்யவாசம் செய்யும்தாய், திருமால் திருப்பதிகள் நூற்றெட்டினுள் ஒன்றாய்,

புராணப்பிரசித்த முடைய சுயம்புஸ்தலங்களில் முதன்மை பெறும் இத்திருப்பதி; திருவாகிய இலக்குமிப் பிராட்டிக்குத் தேனனைய இனிய இருப்பானதுபற்றி திருநறையூர் என்றும் தேனோடு வண்டாலும் திருச்சோலைகளின் வளத்தால் தேன் பெருக்கெடுத்தோடும் ஊரானமையால் நறையூர் என்றும் பெயர்பெற்றது. "தாரையூரும் திருநறையூர்" என்ற அருளிச்செயலில் தாரை என்ற பதத்திற்குத் தேன் தாரையென்று பொருள் கொண்டு, "ஊரும்" என்பதற்கு வழிகின்ற என்று பொருள் கூறப்படுவதாலும் இது பொருந்துமென்பர். இத்தலம் வடமொழியில் சுகந்தவனம் எனப் பேசப்படுவதால், அப்பெயரே தமிழில் நறையூரான தெனவும் நவில்வர். சுகந்தம்—நறை. நறை—மணம்.

திருமங்கை மன்னரான பரகாலரைத் திருமங்கையாழ்வாராக்கித்தந்த பெருஞ் சிறப்பைத் தனக்கேயுரிய இத்திருப்பதி, அவரால் "குலையார்ந்த பழுக்காயும் பசுங்காயும் பாளை முத்தும், தலையார்ந்த விளங்கமுகின் தடஞ்சோலைத் [1] திருநறையூர்" என்றும், "பொறியார் மஞ்ஞைப் பூம்பொழில் தோறும் நடமாட, நறுநாண் மலர்மேல் வண்டிசைபாடும் நறையூரே" என்றும்; "செம்பொன் கமுகினந்தான் கனியும் செழும் சோலைசூழ், நம்பன் நறையூர்" என்றும், "சினையார் தேமாஞ் செந்தளிர்கோதிக் குயில்கூவும், நனையார் சோலைச் சூழ்ந்தழகாய நறையூரே" என்றும்; "இரும்பொழில்சூழ் நறையூர்" என்றும் பலவாறேத்திப் புகழ்ந்து (நூற்றியொரு பாசுரங்களால்) மங்களாஸாஸனம் செய்யப் (பாடல்) பெற்ற பெரிய திருவீறுமுடையதுமாகும்.

தன் ஆசாரியனாகிய நம்பியெம்பெருமான் மகிழ்ந்துறையும் பதியாதலின் இத்தலத்தில் திருமங்கையாழ்வாருக்கு

---

[1] திரு—இலக்குமி, நறை—தேன்.

ஆழ்ந்தாடுபாடுண்டு. திருமங்கையாழ்வாருக்குப் [2]பஞ்சசமஸ்காரம் செய்தருளியவர் இத்தலத்து நம்பியேயாவார். எல்லாம்வல்ல இறைவனே முதற்பெருங் குரவனுய பேருண்மையைப் பின்னுள்ளாருமறிந்துய்ய இன்றும் இத்திவ்யதேசத்தெம்பெருமான் ஆழ்வாருக்கு ஆசாரியனுக நின்றருளிய நிலையிலேயே சேவைசாதித்தருளுகின்ருர்.

குற்றத்திற்குக் கொள்கலமான சேதநன் (மனிதன்) ஈசுவரனைக் கிட்டும்போது, இவன் குற்றம் அவன் (இறைவன்) கண்ணிற் படாதபடி செய்து நடுநின்று அங்கீகரித்தருளச்செய்யும் காரியம் புருஷகாரமெனப்பெறும். இப்புருஷகாரம் செய்யுமவள் திருமாலின் அகலங்கொள் நன்மார்பிலிறையும் அகலாதுறையும் இலக்குமிப்பிராட்டியாவர். பிராட்டியாரைத் தாயாரென்றும், [3]நாச்சியாரென்றும் சொல்வது வைணவர்மரபு. புருஷகார பூதையான ஸ்ரீ வஞ்சுளவல்லி நாச்சியார்க்கே இத்தலத்தில் எல்லா முதன்மையும் சுதந்தரமும் கூறப்படுவதால், இத்தலம் நாச்சியார்கோயிலென்றே வழங்கப்படுகிறது.

முன்னொருகால் நாட்டை நலிந்த சண்டன், ஹேமன் என்ற பொல்லாவரக்கர் இருவரை அழித்தருளவேண்டுமென இந்திரனுல் பிரார்த்திக்கப்பெற்ற பெரியதிருவடி (கருடன்) மணமிக்கமகாமேரு மலையின் சிகரமொன்றைப் பிடுங்கியெறிந்து அவர்களை அழித்தருளினர். மரங்களோடு மலர் நிறைந்து மணம் வீசிய அம்மலைத்துண்டம், இத்தலத்தில் வந்து விழுந்தமையான் இத்தலம் சுகந்தகிரியெனவும் பெயர் பெறுவதாயிற்று.

---

[2] பஞ்சசமஸ்காரம்—ஐந்து வகைப்பட்ட வைணவ சமய தீக்ஷை.
[3] நாச்சி—தலைவி.

மலையனைய உயர்ந்த கருப்பக் கிருகத்தின் உள்ளெழுந் தருளியுள்ள பெருமாள், திருக்கோபுர வாயிலில் நின்று சேவிப்போர்க்கு நன்றாகச்சேவை சாதித்தருள்வதால் இப் பதி [4] கிரியெனவும் பெயர்பெறும்.

## தோற்றம்.

தழைத்தோங்கிய தருக்களடர்ந்த சோலைகளோடு உயர்ந்த திருக்கோபுரங்களுடன் காண்பார்க்கு இரண்டுமைல் தூரத்தே காட்சியளிக்கும் இவ்வூரின் தோற்றம் மிக மிக அழகியது.

## திருக்கோயில்.

திருக்கோயில் மிகவும் புராதனமானது. தற்போது சந் நிதியின் எல்லாப் பகுதிகளும் அழகாகப் புதுக்கித் திருப் பணி செய்யப்பெற்றுள்ளது. கண்கவர் வனப்புடன் விசால மாக இடம்பெற்றுள்ள இத்திருக்கோயிலின் அமைப்பும், வானளாவிய நான்குத் திருக்கோபுரங்களும், "திண்களக மதிள்" என்று சிறப்புற்ற நான்கு திருமதிள்களும், அழகிய திருச்சுற்று நான்கும், மணிமாடமும், நீணிலா முற்றமும், விமானமும், மண்டபங்களும் கண்களுக்குப் பெருங் களிப் பருளும் பெற்றியன. கோயிலின் நீளம் 690 அடியும், அகலம் 288 அடியுமாகும். 75 அடி உயரமுள்ள மிக அழகிய பெரிய திருக்கோபுரக்காட்சி கண்டு மகிழ்தற் குரியது.

வெளிப்பிராகாரத்துள் நாற்புறமும் நன்கமைந்துள்ள அழகிய பெருந்தோட்டம், அழகினுக்கு அழகு செய்வ தொப்ப இச்சந்நிதிக்குப் பேரழகு செய்வதாம். வண்சாதி, சண்பகம், முல்லை மகிழ் முதலிய மலர் நிறைந்த செடி

---

[4] கிரி—மலை.

களுடன் மா, பலா, தெங்கு, கமுகு முதலிய தருக்களை டர்ந்து, நன்கு பாதுக்காக்கப்பெற்று வளமுற்றுத் திகழும் இத்திரு நந்தவனமும், இங்குள்ள வசந்த மண்டபமும் கண்டுகளித்தற்குரியன.

## விமானம்.

இத்தலத்துக்கோயில் விமானம் **ஸ்ரீநிவாச விமானம்** எனப் பெயர்பெறும். ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமான் மிக மகிழ்ந்து உறைந்தருளும் காரணம்பற்றி இவ்விமானம் இப் பெயர்பெருவதாயிற்று. எம்பெருமான் திருநாமமே அவர் வாசஸ்தானமான விமானத்திற்கும் பெயரானமை யறிக. தரிசன மாத்திரத்தில் சகல துன்பங்களையும்போக்கி, இம்மை மறுமையாதிய எல்லா நலனும் இனிதருளும் இவ்விமானத் தின்கீழ் "நிலையார நின்றான்" என்றபடி வாட்டமின்றி மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீ ஸ்ரீநிவாச னென்னும் திருநறையூர் நம்பியாவர்.

## கருப்பக்கிருகம்,

உட்கோயிலின் மூலத்தானத்துள் கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலமாக, சேவை சாதித்தரு ளும் பெருமாள் மூலவராவர். இவர் திருநாமம் **ஸ்ரீநிவாசன்.** திருமங்கையாழ்வாருக்குத் [5]திரு இலச்சினை செய்தருளிய அவசரத்துடன் திருவாழி திருச்சங்கேந்திய இரண்டு திருக் கைகளோடும், மரகதக்குன்றம்போல் நின்றருளும் பரம காம் பீர்யமான இவர்தம் திருக்கோலம், பயில இனிய பைந் தமிழ்ப் பாடும் பரகாலவள்ளலால் "திருநறையூர் மலை யார்ந்த மணிமாடம் மிகமன்னி-நிலையார நின்றான்" என் றும், "தென்னறையூர் மன்னுமணிமாடக் கோயில்

[5] திரு இலச்சினை—இதனை சாமானியர் முத்திராதாரணம் என்பர்.

மணாளன்" என்றும், "வாவித்தடஞ்சூழ் மணிமுத்தாற்று நறையூர் நெடுமால்" என்றும், "தேன்கொண்ட சாரல் திருவேங்கடத்தானை-நான் சென்று நாடி நறையூரிற் கண்டேனே" என்றும் பலபடி புகழ்ந்து வாழ்த்திப்பரவப் பெற்றதொன்று. இவர்க்கு ஆழ்வார் சாத்தியருளும் அழகிய திருநாமம் **நறையூர் நம்பி** என்பதாம். இவர் அனைத்துலகினுக்கும் இறைவனாய உரிமை தோன்றக் கவித்த நீண் முடியர். இருபெரும்புயத்தினர். இந்திர நீலமொத்தத் திரண்ட மேனியர். "குன்றுடும் கொழுமுகில் போல் குவளைகள்போல், குரைகடல்போல், நின்றாடுங் கணமயில் போல்" நிறமுடையர். உயர்ந்து வளர்ந்த உருவில் அழகியர். மரகதக் குன்றம்போல் மன்னி நின்றருளும் மாண்புறுமேனியர். அகலகில்லேன் இறையுமென்ற அலர்மேல் மங்கை யுறைமார்பர் அழகிய சங்கமும் ஆழியுந்தாங்கிய பங்கயம் போன்ற அங்கைகளுடையர். திருமேனியில் வெள்ளியங்கி தங்கிய வீறூர் கோலத்தர், பரத்வ சூசகமான திருத்துழாய் மாலையர். அமரர்வந்திறைஞ்சும் அறிவரிய பொன்னங்கழலினர்.

எண்ணுவார்தம் இடர்களையும் ஏத்தரும் பெருங்கீர்த்தியினரான இம்"மன்னன் திருமார்பும் வாயுமடியிணையும், பன்னு கரதலமும் கண்களும்,-பங்கயத்தின் பொன்னியல் காடோர் மணிவரைமேல் பூத்ததுபோல், மின்னியொளி படைப்ப வீணாணும்தோள்வளையும், மன்னிய குண்டலமும், ஆரமும் நீண்முடியும், துன்னு வெயில் விரித்த சூளாமணியிமைப்ப, மன்னுமரகதக் குன்ற" மனைய திருக்கோலம் சேவிப்பார், ஏய்ந்த பெருஞ்செல்வத்தராய், இனையிலிவ்வுலகில் எண்ணிய வெல்லாம் எய்தப்பெற்று, கல்வியுஞ் செல்வமுங் கலந்து துய்த்து, வாயு நன்மக்களைப் பெற்று

மகிழ்ந்து மறுமையிற் பேரின்பந் துய்க்கும் மாண்புறு பெற்றியராவர். பத்தருக்கருளும் இப்பரமர் நான்கு திருக்கைகளின்றி இரண்டு திருக்கைகளோடு எழுந்தருளியுள்ளது கவனித்தற்குறியது. நான்முகக்கடவுளால் நாடோறும் பூசிக்கப்பெறும் இவர், மேதாவி முனிவர்க்கும் திருமங்கையாழ்வார்க்கும் பிரத்தியக்ஷமான பெருமைக்குரியவர்.

**தாயார்.**

தாயாருக்கு இத்தலத்தே தனிக் கோயிலின்மையும், பெருமாளிருவருக்கும் (மூலவர்-உற்சவர்) உபய நாச்சிமாரின்மையும் குறிப்பிடத்தக்கவை. மூலவரான பெருமாளின் மருங்கே தாயாரும் மூலவராக எழுந்தருளியுள்ளனர். இவர் திருநாமம் ஸ்ரீ வஞ்சுளவல்லி நாயகி. இத்திருநாமம் 'வஞ்சு' என்ற நீர்நொச்சி மரத்தினடியில் இவரைக்கண்டு மகளாக ஏற்றுவளர்த்த மேதாவி முனிவரால் சாத்தப்பெற்ற அழகிய காரணப்பெயராம். அனைத்துலகுமுடைய இவ்வன்னையின் அழகாருந் திருக்கோலம் "மன்னு மரகதக் குன்றின் மருங்கே, ஓர் இன்னிளவஞ்சிக் கொடியொன்று நின்றது தான், அன்னமாய்மானாயணிமயிலாய் ஆங்கிடையே மின்னா யிளவே யிரண்டா யிணைச்செப்பாய், முன்னாய தொண்டையாய்க் கெண்டைக் குலமிரண்டாய், அன்ன திருவுருவம் நின்றது" என்று ஸ்ரீ பரகால வள்ளல் தம் அணிபொதிந்த மணிவாக்கால் அதிசயித்துத் துதிசெய்யப் பெறுவதாகும்.

**உற்சவர்.**

சென்று நாடிக் காண்பவர் தஞ்சிந்தை கவருஞ் சீருருவில் இன்றுந் தனக்கு இணையில்லா எழிலார் நறையூர் உறை நம்பியாம் இவ்வுற்சவ மூர்த்தி வரத அர்ச்சாவதாரர். இவர் திருநாமம் **ஸ்ரீநிவாசனே**. பேரா யிரமுடைய பேராளனை

இப்பெருமான் ஸ்ரீநிவாசனென்றும், நம்பிநாதரென்றும், திருநறையூர் நம்பியென்றும் திருப்பெயர்பெற்றுத் திகழ்ந் தருளுகின்றனர். இவர் வலது திருப்பக்கத்தில் ஸ்ரீ வஞ்சுள வல்லியென்ற ஒரே நாச்சியாருடன் அழகுற நின்ற திருக் கோலத்துடன் சேவை சாதித்தருள்வர்.

இவர் செஞ்சுடர்க்குன்றமன்ன செம்பொன் மேனியர், கவித்த நீண்முடியர், காதளவோடிமீண்ட கண்ணழகர், திருப் பவளச் செவ்வாயர், மதிபழித்த திருநுதலோடு மகரம்சேர் குழைகாதர்; அகலங்கொள் திருமார்பர், அரைச்சிவந்த ஆடையர், சங்கும் ஆழியுஞ் சுமக்கும் தண்டாமரைக் கைக ளோடு, தானஅஸ்தமும், இடையிலூன்றிய எழிலுறு கரமு முடைய நவிலரிய நாற்கரத்தர். தங்கக்கவசந் தருக்குறு மேனியர். தண்டுளவ மாலையர். நல்லார்க்கும் பொல்லார்க் கும் நடுநின்ற தண்டாமரை சுமக்கும் தாளிணையர். தன் னடியார்க் கெளிய தண்ணளியர், மறவாதடியா ரழைக்கப் பிறவாமை யவர்க்கருளும் பெற்றியர்.

ஸ்ரீ பரகால வள்ளல் நெஞ்சிற்கொண்டு நாவில் பரவும் இந்நறையூர் நின்ற நம்பியின், மலர்கொள் கண்ணிக்குழ லழகும், மாலைக்கிசைந்த தோளழகும், வண்ணஞ்சிவந்த வாயழகும், வழுத்தற்கரிய கண்ணழகும், இலகுதிலகக் கத் தூரி என்றும் விலகா நுதலழகும், இணையற்றொளிரும் முடியழகும், இனியசெங்கைத் தலத்தழகும், அலைரைப் பழிக்கும் அழகினதாய் "அஞ்சேல்" என்ன அருளு வதாய்; அன்பர் தம்மை உய்விக்கும் அபயத்திருக்கைப்பே ரழகும், நிலவு மிரண்டு திருவடியின் நிலைத்தவழகும் கண்டு நிதம், களித்து மகிழும் கண்ணுடையோர் காதைபேசுந் தரமன்று.

“என் அமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே” என்று பிறவற்றிற் கண்வையாதே, வழவழகில் வைத்தகண் வாங்காது “நீலமேனி ஐயோ ! நிறைகொண்டதென் நெஞ்சினையே” என்று ஆப்ததமர்களான ஆழ்வார்களைப் பாசுரமிடப்பண்ணும் இவ் வடி வழகிய நம்பியெம்பெருமானின் பேரழகு, நம்மனோரின் பேச்சுக்கு நிலமன்றே!

**உற்சவத் தாயார்.**

கனியா மனமுங் கனிந்துருகச் செய்யும் கண்ணிற்கினிய இந்நம்பி யெம்பெருமான் பக்கத்தில் “பெடையடர்த்த மடவன்னம் பிரியாது” என்ற மறையுரையின்படி இணைபிரியாது ஏகாஸனத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவியாம் ஸ்ரீ வஞ்சுளவல்லி சேவை நெஞ்சையுருக்கும் நீர்மையதாம், இப்பிராட்டியார் தம் பிராதான்யம் தோன்ற “மூன்றங்குல அளவு” நம்பிக்கு முன்பு எழுந்தருளியிருக்கும் சீர்மை சிந்தித்து உய்வதற்குரியதொன்று.

எல்லாம் வல்ல இறைவன் தன் *முற்றுரிமையிழந்து அருளிரக்கத்தலைவியான பிராட்டியாருக்குப் பாதந்திரராக நின்றருளும் பேருண்மையை, நம்பினோர்க்கு நனியுணர்த்தி உய்விக்கும் நவிலரிய பெருஞ்சீர்த்தி இந்நன்னகர்க்கேயுரியதொன்று.

நாச்சியார் கோயிலென்று இத்திருப்பதி ஓய்ச்சிப் பேசுதற்குரிய இவ் வஞ்சளவல்லி நாச்சியாரின் நல்லருளுக்கிலக்கானோர் தாழ்ச்சியற்ற உயர் வாழ்ச்சிக்கேயென்றும் உரியவராவர்.

வாஞ்சிதமான புருடார்த்தங்களை யளிக்கவல்ல கஞ்சச் செல்வப் பெருங்காரணங்காம் இவ் வஞ்சளவல்லியார்,

மருங்கிலே சங்கெடுத்தருளும் மாயவன்றன் மருங்கிருந்து தன்னடியார்க்கு வருங்கிலேசங் கெடுத்தருளும் வகையறிந்தோரே இவ்வுலகில் மிக உயர்ந்தோராவர்.

## உள்ளெழுந்தருளியுள்ள பிற மூர்த்திகள்.

இனி, இம் மூலத்தானத்தில் சங்கர்ஷணர், பிரத்யும்னர், அநிருத்தர், புருஷோத்தமர் என்ற நான்கு பிரமூர்த்திகளும் அழகுற எழுந்தருளியிருக்கின்றனர். இவர்கள் மேதாவி முனிவரின் கன்னியாய் வளர்ந்த வஞ்சுளவல்லியைத்தேடிவந்த உருவத்துடன் நின்றருளியுள்ளனர். மேலும். பெருமாளை ஆராதிக்கும் பிரமதேவரின் திருவுருவமும் இங்கு அழகுற இடம்பெற்றுள்ளது. கவனிக்கற்பாலது.

111113

## ஸ்ரீ பக்ஷிராஜன் சந்நிதி.

இச்சந்நிதி மூலத்தானத்திற்குச் சிறிது கீழ்வடபால் தெற்கு நோக்கியுளது. இதனுள் ஸ்ரீ பக்ஷிராஜனென்றும், பெரிய திருவடியென்றும். வைநதேயர் என்றும் பெயர் பெறும் பெருஞ் சீர்த்தியினரான ஸ்ரீ கருடாழ்வார் தென் திசையில் பரமபத வாயிலை நோக்கி எழுந்தருளியுள்ளனர். இவர்க்கு மற்றைய திருப்பதிகளெவற்றிலும் இல்லாத பெருஞ் சிறப்பு இத்தலத்தேயுள்ளது. இவர் சாளக்கிராமத் திருமேனியர். (கற்சிலை வடிவானவர்) வாகன வடிவத்து அழகியர், நீள்சிறகுடையவர், நீண்முடியர், நீண்டுவளர்ந்த ஆகத்தினர், அகன்ற மார்பினர், ஆஜானுபாகுவான இரு பெரும்புயத்தர், வசித்தியுடையவர், வீரப்பாதர், தீரசூரர்

நறையூர் நெடுமாலான நம்பியெம்பெருமான் இவர்மீது வீற்றிருந்தருளிக் கண்டருளும் பெரிய திருவடி சேவை

“நாச்சியார்கோயில் கருடசேவை” என்று உலகப் பிரசித்தியானது. இவர், கருங்கடற் பள்ளியில் கலவி நீங்கி மேதா முனிவர்தம் திருமகளாராக வளர்ந்தருளிய திருமகளை ஆகாயவழியே தேடிவந்து இத்தலத்தில் கண்டு எம்பெருமானுக்குக் குறிப்பாலுணர்த்தியவர். அன்று தொடங்கி திருமாலருளால் இத்தலம் விட்டகலாது தம்மை விரும்பித் தொழும் அடியவர் வேண்டிற்றெல்லாம் தந்து அவர்க்கு நாளும் நல்லருள் சுரக்க ஈண்டு திருக்கோயில் கொண்டனர். இவர் பெருமாள் திருவாராதனம் கண்டருளியவுடனே அவர் அமுதுசெய்தருளிய திருப்போனகங் களைத் தாமும் அமுது செய்தருளி திருவாராதனம் கண்டருளுகின்றனர்.

எண்ணுவார்தம் இடர்களைந்து இஷ்டசித்தியருளும் இவர்க்கு “அமுது கலசம்” எனும் மோதகமானது உவப்பாக அமுது செய்விக்கப்படுகிறது. இவர்பால் செய்து கொள்ளும் பிரார்த்தனைகள் பலிதமாவதுடன் இவரது சர்ப்பாங்கங்களில் புஷ்பாங்கிகள் அணிவிப்பவர்கள் இஷ்டசித்தியெய்தப்பெருகின்றனர். இவை உலகப் பிரசித்தமானவை. இவர் வருடமிருமுறை கண்டருளும் திருவீதிப் புறப்பாடு மிகச் சிறப்புடையது. இரண்டு புறப்பாடுகளுள் ஒன்று மார்கழி மாதத்து நான்காம் திருநாளிலும், மற்றொன்று பங்குனித் திருநாளின் நான்காம் திருநாளிலும் நடைபெறுகின்றது.

இப்பக்ஷிராஜன் எழுந்தருளியுள்ள இடம் $10\frac{1}{2}$ அடி சதுரமுள்ளது. இங்கிருந்து இவர் புறப்பாடு கண்டருளுங் காலத்து ஸ்ரீபாதம் தாங்குவோர் நால்வராகவும், வாரைகள் சேர்த்தபின் கோடி ஒன்றுக்கு நால்வராகவும், பின் எண்மர், பதின்மர்களாகவும், படிகளில் இறங்கியருளும் சமயம் கணக்

கற்றவர்களும் ஸ்ரீபாதம் தாங்கிச் செல்வது காணத்தக்க தாம். இவர் தம் திருவீதிப்புறப்பாடு மிகப் பெருமை வாய்ந் தது. அரவ குண்டலமணிந்த கரிய திருமுக மண்டலத் துடன் அரவாபரணமணிந்து, நீள்மகுடம் தாங்கி, வஸ்திரம் தரித்து, சர்ப்ப கங்கண அஸ்தராய், கடாக்ஷித்தருளும் திருநயனங்களுடன், புருநூலும் மேகலையும் கட்கமும் சர்ப்ப வடமும் பூண்டு, பெரிய திருமாலையணிந்து, இருமருங்கும் விசிறி சாமரம் வீசுவார் விநயமுடன் பணிசெய்ய, மரகதக் குன்று நின்றார்வது போன்று பரம கம்பீர்யத்துடன் இவர் எழுந்தருள்வது கன்னெஞ்சர் தம்மையும் கரைவிக்கவல்லது. எண்ணிலார் நீனிலா முற்றத்தில் நின்று சேவிக்க இவர் தம் பக்தியுலாக்காட்சி பரமானந்தக்காட்சியாம். இங்கிருந்து நேரே வாகனமண்டபஞ் சென்று ஆங்கு தன்மீது பெரு மாள் எழுந்தருள, மீண்டு மிரண்டாமுறையாக வெளியில் எழுந்தருளுவது விண்ணும் மண்ணும் விலைபெருக் காட்சி யாகும். இக்காட்சி காணுதார் கண்ணென்றுங் கண்ணல்ல கண்டீர் !

பின்னர் அழகிய வெள்ளி அம்ஸவாகனத்தில் மின் னேர் மணிபல பூண்ட வஞ்சுளவல்லியார் முன்னேயெழுந் தருள, பின்னே கருடாரூடராய் பெருமாள் தேரடிக்குச் சென்று, ஆங்குள்ள அழகிய சப்பரத்தில் எழுந்தருளி "வேள்வும் விழவும் வீதியிலென்றும் அருதவூர்" என்று சிறப்புறும் இந்நறையூர் திருவீதிகளில் புறப்பாடு கண் டருளுவது, கண்களுக்குப் பெருவிருந்தாகும்.

இனி, இப்பக்ஷிராஜன் சந்நிதிக்கு மேற்புறத்தே கோமள ஆயர் கொழுந்தான குழலூதும் கோபாலனும் உயர்பதமருளும் பரமபதநாதனும், சீர்மைசான்ற சிங்கப்

பிரானும் எழுந்தருளியிருப்பதோடு, நூற்றெட்டு திவ்ய தேசத்தெம்பெருமான்களின் திவ்ய மங்கள திருவுருவங் களும் ஒளி சிறந்து திகழ்கின்றன.

## வெளியிலுள்ள சந்நிதிகள்.

வெளியிலுள்ள சிறிய திருவுண்ணாழியை யடுத்து அழ கிய திருச்சுற்று ஒன்றுளது. இதனுள் யோகநரகேசரி, மத்வ பூஜா ஆஞ்சநேயர், ஸ்ரீ வரதராஜன், சிறிய திருவடி ஸ்ரீ சௌரிராஜன், திருவரங்கன், சேனையோர்கோன் முத லியவர்களின் சந்நிதிகள் அழகுற இடம்பெற்றுள்ளன.

இவ்விடத்தே, உயரத்தேயுள்ள ஸ்ரீ ஸ்ரீநிவாச விமா னத்தின் சேவை பெறலாம். இதற்கப்பால் ஸ்ரீ பூவராக மூர்த்தியின் சந்நிதியுளது. ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமான் பஞ்ச வியூக மூர்த்தியாக இத்தலத்திற்கு எழுந்தருளு முன்னரே, இப்பூவராகப் பரமர் ஈண்டு எழுந்தருளியிருந்தனரென்று புராணவரலாறு கூறுகின்றது. இவர் பிரும்மாதிகளாலும் முனிவர்களாலும் ஆராதிக்கப் பெற்று வந்தவர். ஸ்ரீ ஸ்ரீநி வாசன் தம்மைச் சேவிககவரும் அடியவர்கள் முதலில் பூவ ராக மூர்த்தியைச் சேவித்துப் பின் தம்மைச் சேவிப்பதே தமக்கு மகிழ்ச்சியை விளைவிக்குமெனக் கருதுவதாகவும், அவ்வாறு செய்யாதார் எப்பயனும் பெறுதொழிவர் எனவும் தலபுராணங் கூறும். இவ்விடத்தில் நமது பரமாசாரிய சிரேஷ்டரான ஸ்ரீவிசதவாக் சிகாமணியாம் ஸ்ரீ மணவாள மாமுனிகளும் பூர்வாசார்யர்களும் எழுந்தருளியுள்ளனர். பக்கத்தே பால அனுமார் சந்நிதியும் அடுத்து ஸ்ரீ வேதாந்த தேசிகர் சந்நிதியுமுளது.

## பெரிய திருவுண்ணாழி.

இவ்விடமிருந்து கீழேவர, அற்புதசிற்ப வேலைகளோடு விளங்கும் அழகிய நூற்றுக்கால் மண்டபம் காணவினியது.

இது கோச்செங்கணான் சோழனால் கட்டுவிக்கப்பெற்ற தாகும். இம்மண்டபமே இன்று திருக்கல்யாண மண்டப மாகத் திகழ்கின்றது.

ஆவணி மாதத்தில் இம்மண்டபத்தில் திருக்கல்யாண மகோற்சவம் சிறப்புற நடைபெறுகின்றது. இதற்கு வட பால் மனத்துக்கினியனாய ஸ்ரீ கோதண்டராமன் சந்நிதியும் கவினுறத் திகழ்கின்றது. இங்கிருந்து வலந்திரும்பத் தோன் றுவது பெரிய திருவுண்ணாழியாம். இதனுள் முதலில் தோன்றுவது ஆஞ்சநேயர் சந்நிதி. அடுத்து மேதாவி முனிவரால் நட்டு வளர்க்கப்பெற்ற தலவிருக்ஷமான வகுள மரமுளது.

இதனெதிரில் மேற் பாரிசத்தில் தோன்றுவது ஸ்ரீ சக் கரபாணி நரகேசரி சந்நிதியாகும். இப்பெருமான் மணி முத்தாற்றில் நீராடிய மேதாவி முனிவர் கையில் எழுந்தரு ளியவர். அசரீரி கூறியவாறு மேதாவி முனிவரால் பிர திஷ்டை செய்து ஆராதிக்கப் பெற்றவர். இவரது தரிசனத் தால் சகல தோஷ நிவர்த்தியும், ஓர் மண்டல பிரதக்ஷண ஆராதனத்தால் பூதவேதாள பைசாச பீதி பீடாதி நிவர்த் தியும் கூறப்படுகின்றது.


இனி இரண்டாம் திருக்கோபுர வாயிற்படிகளின் கீழ் திறந்த திருமுற்ற வெளியும், அதன் நடுவே வானமளாவிய துவஜஸ்தம்பமும் சிந்தையைச் செந்நிறுத்தும் பெற்றியன. இந் நீணிலா முற்றத்தின் நடுவிலுள்ள துவஜஸ்தம்பத்தை வலம் வரும்போது வடபாரிசத்தில் முதலில் தோன்றுவது "தென்கொண்டசாரல்" திருவேங்கடமுடையான் சந்நிதி யாகும். அழகிய மண்டபமாகத்திகழும் இச்சந்நிதி வாகன மண்டபமெனவும் பெயர் பெறுகின்றது. திருநாட் காலங்

களில் தாயார் பெருமாள் முதலியோர் இங்கு எழுந்தருளித் திருமஞ்சனம் திருவாராதனம் முதலியன கண்டருளுகின்றனர். இதன் கீழ் பாரிசத்தில் வாட்கலியனுய பரகால வள்ளலாம் நம் திருமங்கையாழ்வார் சந்நிதியுளது அதனை யடுத்து வெளியிலிருப்பது தேவஸ்தான காரியாலயமாகும்.

துவஜஸ்தம்பத்தின் தென்பாரிசத்தில் மயர்வறமதி நல மருளப்பெற்ற வேதந் தமிழ் செய்த மெய்யனும், நங்குல முதல்வருமான ஸ்ரீ நம்மாழ்வார்சந்நிதியும், ஸ்ரீ உடையவர் சந்நிதியும் அழகுறத் திகழ்கின்றன. இச்சந்நிதியுள் கூறுதற்கரிய வீறுபெற்றுயர்ந்த ஆழ்வார்கள் பதின்மரும், வைணவத்திருவின் வளர்ச்சிக்காக கண்கொடுத்த, மொழியைக் கடக்கும் பெரும் புகழாளரான ஸ்ரீ கூரத்தாழ்வானும் எழுந்தருளியிருக்கின்றனர்.

பெரிய திருச்சுற்றுக்கும் வெளி மதிளுக்குமிடையே அழகிய திருநந்தவனமும் அதனடுவேயுள்ள அழகிய வசந்த மண்டபமும்பற்றிக் கீழே கூறப்பட்டது. இத்தோட்டத்தின் நடைபாதைக்குச் சற்று மேற்கில், வடபால் தோன்றுவது மற்றொரு தலவிருக்ஷமான வில்வவிருக்ஷம். அது கண்டு வணங்கத்தக்கதொன்று. மேற்குப் பாரிசத்திலுள்ள வசந்த மண்டபத்தில் பெருமாளும் பிராட்டியாரும் எழுந்தருளியிருந்து வைகாசி வசந்தோற்சவத்தை விமரிசையாகக் கண்டருளுவர்.

இக்கோயிலைச் சார்ந்த இதர சிறு கோயிலாக ஓர் ஆஞ்சநேய சுவாமி சந்நிதியுண்டு. இதுகோயிலின் வடபால் 2 பர்லாங்கு தூரத்திலுள்ளது. ஈண்டுள்ள சிறிய திருவடிக்கு நாடோறும் ஒரு காலம் பெருமாள் சந்நிதியிலிருந்து திருப்போனகம் கொண்டுபோகப்பெற்று ஆராதனம் நடைபெறுகின்றது.



ஸ்ரீ வஞ்சுளவல்லி சமேத ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமாள்.



மணிமுத்தாநதி.

கோபுர வாயிலில் ஓர் விநாயகர் ஆலயமுளது. இவ் விநாயகரைத் தாமோதரப் பிள்ளையாரென்றும் வரசித்தி விநாயகரென்றுங் கூறுவர். இவர் மிகச் சக்தி வாய்ந்தவர் என்று பிரார்த்தனை செய்துகொள்ள இஷ்டசித்தி யுண்டா மென்பர். இவர்க்கு அபிஷேகமும் மோதக நிவேதனமும் நடைபெறுகின்றன. விநாயக சதுர்த்தியன்று இவர்க்குக் கோயில் திட்டத்தில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறு கின்றன.

## தீர்த்தங்கள்.

இத்தலத்தின் புண்ணிய தீர்த்தங்கள் ஐந்து. அவை திருமணிமுத்தா நதி, அநிருத்த தீர்த்தம், பிரத்தியும்ன தீர்த்தம், சாம்ப தீர்த்தம், சங்கர்ஷண தீர்த்தம் என்பன வாம். அவற்றுள் முதலாயது மணிமுத்தா நதியாம்.

## 1. திருமணிமுத்தா நதி.

திருக்கோயிலின் வடபாலுள்ள பெரிய திருக்குளமே மணிமுத்தா நதியாம். இதன் நீளம் 684 அடியும், அகலம் 225 அடியுமாகும். திருநாராயணபுரத் தெம்பெருமானுக்கு அணிவிக்கப் பண்டு பெரிய திருவடியானவர் திருப்பாற்கடலி லிருந்து எடுத்துச்சென்ற வைர முடியின் ஒளி பொருந்திய மணியொன்று, இத்தீர்த்தத்தில் நழுவி விழுந்தமையான் அன்றுமுதல் இத் தீர்த்தம் இப்பெயர் பெறுவதாயிற்று.

உலகினர் கழுவிய பாவச்சுமை நீங்கி உய்திபெறக்கரு திய கங்கை திருக்காவிரி முதலிய உலகின் சகல புண்ணிய நதிகளும் நான்முகக் கடவுளை யணுகிப்பிரார்த்திக்க, அவரும் அருள்சுரந்து அவைகளை நோக்கி "நாரணனுறையும் நறை யூர்ச்சென்று மணிமுத்தா நதியில் மார்கழி மாத சுக்லபக்ஷ

துவாதசியில் நீராடி உயர்க" எனப்பணித்தருளினர். அங்ஙனமே அந்நதிகள் இந்நதியில் நீராடி உயர்ந்தமையான் இத்தீர்த்தம் பெரும் புனிதமுடையதொன்றும்.

இத் தீர்த்தத்திற்கு பிரம்மதேவர் இருடியாகவும், திருமால் தேவதையாகவும், விஷ்வக்சேநர் ரக்ஷகராகவும் கூறப்படுகின்றது.

## நீராடுதற்குரிய புண்ணிய காலங்கள்.

சூரிய சந்திர கிரகண காலம், புரட்டாசி மாத அமாவாசை, பங்குனிமாத பௌர்ணமி வெள்ளிக்கிழமை, ஐப்பசி மாத பூர்வபக்ஷ நவமிதிதி, மார்கழி சுக்கிலபக்ஷ துவாதசி, சிரவணம் முதலியன இப்புண்ணியப் புனலாட பொருந்திய நாட்களாகும். இந்நாட்களில் இதில் நீராடுமுன், தீர்த்த ரக்ஷகரான விஷ்வக்சேனரையும் இருடியான பிரமதேவரையும், க்ஷேத்திர ரிஷியான மேதாவி முனிவரையும் வணங்கி, ஸ்ரீயுடன் கூடிய ஸ்ரீவாசுதேவனை நெஞ்சுற வழுத்தி ஆசமனஞ்செய்து நீராடுதல் முறையாகும்.

## முழுக்கின் பலன்.

புனிதத்துட் புனிதமாய இப் புண்ணிய புனலாடுவாரொருவர் தம் முற்பிறவி மூன்றினுஞ் செய்த பாவத்தின் நீங்கி உய்திபெறுவர்; உலகின் புண்ணிய தீர்த்தங்களனைத்தினும் மூழ்கிப் பெறும் பயனை, இத்தீர்த்தத்தில் முறையாக ஒரேமுறை ஆடினர் பெறுவர். இப்புண்ணிய நதியில் மூன்று மாத காலம் தொடர்ந்து நீராடும் கன்னியர் தாம் விரும்பும் நல்ல கணவனைப் பெற்று மகிழ்வர்; மகப்பேறற்ற மாதர் அப்பேறு பெற்றுயர்வர்; கிரகணகால ஸ்நானத்தால் வாஜபேய யாகபலனும்; மாகஸ்நானத்தால் நான்முகன் உலகை

யும், புரட்டாசி அமாவாசை முழுக்கால் எண்ணரிய புண்ணியத்தையும், சிரவண ஸ்நானத்தால் அசுவமேத யாகபலனையும், இதரகால ஸ்நானத்தால் பகைவர்முன் வெற்றியும், காரியசித்தியும், செல்வமும் பெறுவர். மறுபிறவி நீக்கும் மாண்புடைய மணிமுத்தா நதியின் கரையில் செய்யப்பெறும் தானங்கள் வானத்தினுயர்ந்தது; என்றின்னவாறு தலபுராணத்துள் இந்நதியின் ஸ்நான பலன்கள் பரக்கப் பேசப்படுகின்றது.

இப்புஷ்கரணியைத் தற்போது ஆழமாக்கியும் படித்துறையைப் புதுக்கியும் ஜீர்ணமான பாய்கால் வடிகால் முதலியன செப்பனிடப்பட்டும் சிறந்த முறையில் வைக்கப்பெற்றுள்ளது. அரண்க அழகிய கேட்டும் போடப்பட்டுள்ளது.

## 2. அநிருத்த தீர்த்தம்.

இது கோயிலின் கிழக்கு திக்கில் இரண்டு பர்லாங்கு தூரத்தே யுள்ளது. அநிருத்த பகவானால் ஆக்கப்பட்டமையின் இது அநிருத்த தீர்த்தமெனப் பெயர் பெற்றது. துர்வாச முனிவரின் சாபத்தால் செல்வம் வீரியம் முதலியன இழந்து துயருழந்த இந்திரன், ஒருகால் இதில் தீர்த்தமாடித் தவமியற்றி சாபத்தின் நீங்கிப் பொலிவுபெற்றுயர்ந்தனன். இதற்கு வசிஷ்ட பகவான் இருடியாகவும், இந்திரன் தேவதையாகவும் அநிருத்தர் அரியாகவும், கருட பகவான் ரக்ஷகராகவும் கூறப்படுகின்றது. சுக்கிரவாரப் பஞ்சமி திதி, அமாவாசை முதலியன இதில் நீராடுதற்கேற்ற காலங்களாகும். முறையே அநிருத்தர், ஸ்ரீ வாசுதேவர், வசிஷ்டர், இந்திரன், கருடன் முதலியோரை வணங்கி அவர் தம் அநுக்ஞைபெற்று இதில் நீராடுதல் முறையாம். இதனைக் கண்ணுற்றவரும் உற்ற துயர் நீங்கப்பெறுவர். எனவே,

ஆடினர் பெற்றோர்செய்த பாபத்தினின்றும் விடுபட்டு, எண்ணரிய புண்ணியப் பலனெய்தி வறுமைநீங்கி மகிழ்வரென்பதில் ஐயமொன்றுமில்லை.

## 3. பிரத்யும்ன தீர்த்தம்.

இது கோயிலின் தெற்கே ஒரு பர்லாங்கு தூரத்திலுள்ளது. பிரத்யும்ன பகவானல் அமைந்த இத் தீர்த்தக்கரையில் வாயுபகவான் ஆயிரமாண்டு அருந்தவமியற்றி உயர்ந்தனர். மேலும் பானுதத்தன் என்பாளெருவன் இதில் மூழ்கி குரு சாபத்தால் பெற்ற பிரும்ம ராக்ஷச வடிவம் நீங்கப் பெற்றனன். சோமவார அமாவாசை, சுக்லபக்ஷம், கேட்டை, மூலம் முதலியன இதில் நீராடற்குரிய நாட்களாகும். இதன் இருடியரான விசுவாமித்திரரையும், தேவதையான வாயுபகவானையும், பிரத்யும்னரான அரியையும், ரக்ஷகரான அனந்தனையும் சிந்தித்து வணங்கி, இதில் தீர்த்தமாடுவோர் பிறர்மனை நயத்தல் குருத்துரோகம் முதலிய குற்றத்தினின்றும் விடுபடுவர். பிரம்மராக்ஷச பீடையும் போம்.

## 4. சாம்ப தீர்த்தம்.

திருக்கோயிலின் மேற்கே இரண்டு பர்லாங்கு தூரத்திலுள்ள இத் தீர்த்தத்தில் மூழ்கி, பண்டு இருடியர் எழுவர் தவஞ்செய்து சித்தியெய்தினர். ஸ்ரீயுடன் கூடிய சாம்ப அரியையும் பராசரரிஷியையும், தேவதையான சூரியனையும், ரக்ஷகரான சுப்பிரமணியனையும் நமஸ்கரித்து அவர் தம் அனுமதிகொண்டு இதில் நீராட, பிறர் பொருள் கவர்தல், நம்பிக்கை மோசம் முதலிய பாவத்தினின்றும் விடுபடுவர்; முடிவில் பிரும்ம லோகத்தையுமடைவர். வைகாசிமாத சுக்கிலபக்ஷம், பௌர்ணமி திதி, கார்த்திகைமாத சங்கிரமணம் முதலியன இதில் நீராடுதற்குரிய புண்ணிய காலங்களாகும்.

## 5. சங்கர்ஷண தீர்த்தம்.

நான்கு பர்லாங்கு தூரத்தில் கோயிலுக்கு வடக்கே யுள்ள இத்தீர்த்தம் சங்கர்ஷணரால் தோற்றுவிக்கப்பெற் றது. இங்கு அவர் ஸ்ரீயுடன் கூடி நித்தியவாசம் புரிகின்ற னர். சூரியன் மேஷ ராசியைக் கூடும் பௌர்ணமி திதி, மார்கழிமாத சுக்கிலபக்ஷத் துவாதசி, துலா சங்கிரமணம் முதலிய புண்ணிய காலங்களில், ஆரம்பத்தில் லக்ஷ்மி சமேத சங்கர்ஷணரையும், ருத்திரனையும், தீர்த்த ரக்ஷகரான கணே சரையும் வணங்கி அனுக்ஞைபெற்று இதில் நீராட பிரும்ம ஹத்தி, கோஹத்தி, மாத்ருஹத்தி பித்ருஹத்தி முதலிய கொடிய பாவங்கள் அழிந்தொழிகின்றன.

பண்டொருகால் தன் தந்தையாகிய பிரும்மதேவரின் தலையைக்கொய்த மகா பாதகத்தால் துயருழந்த சிவபெரு மான், முடிவில் இத் தீர்த்த ஸ்நானத்தால் தூய்மை பெற்ற னர். எனவே இப் புண்ணிய தீர்த்தத்தின் புனிதம் பேசுந் தரமன்று.

முடிவாக; ஒருவர் முற்கூறிய தீர்த்தமைந்தினும், மார்கழிமாத சுக்லபக்ஷத் துவாதசியில், முதல்நாள் உபவாச மிருந்து முறைப்படி நீராட, பஞ்சமா பாதகங்களும் தீர்ந்து மிக்க பெருஞ்செல்வமெய்தி, முத்தியும் பெறுவரென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

## தல விருக்ஷங்கள்.

உயர்வற உயர்ந்த இத்திருப்பதியின் தலபுராணத்துள் நான்கு ஸ்தல விருக்ஷங்கள் புண்ணிய தருக்களாக பேசப் பட்டுள்ளது. அவை, வகுளம், அசுவத்தம், வஞ்சு, வில்வம் என நான்காகும்.

1. வகுள விருக்ஷம்.

தெய்வத் தன்மையுடைய இத்தரு மேதாவி முனிவரால் வளர்க்கப்பெற்றது. கோயிலின் தெற்குப் பிரகாரத்திலுள்ள இவ்விருக்ஷத்தின் நிழல் ஒருவர் மேற்பட அவர்க்கு நல்லறிவு நாளும் தலைப்படும். இதனடியில் செய்யப்பெறும் தானங்கள் மிகச் சிறந்த பயனளிப்பனவாம்.

2. அசுவத்த விருக்ஷம்.

பண்டு, பிரம்ம தேவரால் மணிமுத்தா நதிக்கரையின் தென்மேற்கு மூலையில் நடப்பட்டதான இத்தருவின் தரிசனத்தால் அஷ்டமா சித்திகள் அடையப்படுகின்றன.

3. வஞ்சு விருக்ஷம்.

மூன்றாவது தல விருக்ஷமான இவ்வஞ்சு (நீர் நொச்சில்) விருக்ஷம் மணிமுத்தாற்றின் அக்கினி மூலையில் இருப்பதொன்று. இத்தருவினடிவாரத்தில்தான் பண்டு மேதாவி முனிவர் ஸ்ரீ வஞ்சுளவல்லியாரைக் கண்டனர். எனவே மிக்க தெய்வத்தன்மை பொருந்திய இத்தருவை ஒருமுறை வலம் வருதல், உலகை வலம் வருதலுக்கு ஒப்பாகப் பேசப்படுகின்றது. இதனைப்பணிவார் சகல சம்பத்தையும் பெற்று எம்பெருமான் திருவருளுக்கும் உரியவராவர் என்பதில் ஐயமொன்றில்லை.

4. வில்வ விருக்ஷம்.

கோயிலின் தெற்கு வெளித்தோட்டத்திலுள்ள இத்தெய்வீகத்தரு, ஸ்ரீ வஞ்சுளவல்லியார் விளையாடுவதெற்கென மேதாவி முனிவரால் ஸ்ரீ சக்கரபாணி நரகேசரி சந்நிதிக்குச் சமீபமாக வைத்து வளர்க்கப்பட்டதாகும். இதனை வணங்குவோர் இஷ்டசித்தி யெய்துவர்; பரிசத்தால் பிணிகள் நீங்கப்

பெறுவர்; இதனை ஆலிங்கனம் செய்துகொள்ளும் மாதர் பலடு நீங்கி மக்களைப்பெற்று மகிழ்வர். இதனை வலம் வருதலும் பூமிப் பிரதக்ஷணத்திற்குச் சமமாகும். இதனடியில் செய்யப்படும் தானங்கள் புத்திமுத்தியளிக்கும் பெற்றியன.

## தலவனச் சிறப்பு.

"அகிற் குறடும் சந்தனமும் அம்பொன்னும் மணி முத்தும், மிகக்கொணர்ந்து திரையுந்தும் வியன்பொன்னித் திருநறையூர்" என்றும், "கழியாரும் கனசங்கம் கலந்தெங்கும் நிறைந்தேறி, வழியார முத்தீன்று வளங்கொடுக்கும் திருநறையூர்" என்றும், "பெடையடர்த்த மடவன்னம் பிரியாது மலர்க்கமலம், மடலெடுத்து மதுநுகரும் வயலுடுத்த திருநறையூர்" என்றும், "பொந்தில் வாழும் பிள்ளைக்காகிப் புள்ளோடி, நந்துவாரும் பைம்புனல் வாவி நறையூரே" என்றும், "நாரையூரும் நல்வயல் சூழ்ந்த நறையூர்" என்றும், ஸ்ரீ பரகால வள்ளல் வியந்து புகழ்ந்தவாறு நீர்வளம் மல்கி நிலவளஞ் சுரந்து செழித்துத்தளிர்த்த இத்தலத்தின் சோலை வனப்பு மனதுக்கு இனிமை பயப்பதாகும்.


கவினமைந்த இச்சோலையின் வனப்பில் பெரிதும் ஈடுபட்டு "சினையார் தேமாம் செந்தளிர்க்கோதிக் குயில் கூவும் நனையார் சோலை சூழ்ந்தழகாய நறையூரே" என்றும், "பொறியார் மஞ்ஞை பூம்பொழில் தோறும் நடமாட, நறுநாண் மலர்மேல் வண்டிசைபாடும் நறையூரே" என்றும், "சுளைகொண்ட பலங்கனிகள் தேன்பாய கதலிகளின், திளைகொண்ட பழங்கெழுமு திகழ்சோலைத் திருநறையூர்' என்றும் "குலையார்ந்தபழுக்காயும் பசுங்காயும் பாளைமுத்தும் தலையார்ந்த விளங்கமுகின் தடஞ்சோலைத் திருநறையூர்' என்றும் "அணிவண்டுகிண்டும் நறைவாரும் பொழில்சூழ்

நறையூர்" என்றும், 'நாறும் பொழில்சூழ் தழகாய நறையூர்" என்றும் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பாசுரங்கள் ஈண்டு அனுசந்திக்க உரியன.

## உற்சவங்கள்.

### 1. திருக்கல்யாண மகோற்சவம்.

இது ஆவணிமாதம் விசாக நன்னாளில் நடைபெறுகின்றது. மேதா முனிவரின் பிரார்த்தனைக்கு இரங்கியருளிய இறைவன், திருக்கல்யாண கோலத்துடன் ஈண்டுச் சேவை சாதித்தருளத் திருவுளம் பற்றினமையால் மகிழ்ச்சியுற்ற மாமுனிவர் இவ்வுற்சவத்தைத் தாமே நடத்துவித்தனர். அன்று அதனைக் கண்டு உய்திபெறாத நம்மனோர்க்காக இறைவன் இன்றும் இவ்வழகிய உற்சவத்தைப் பின்வருவாறு கண்டருளுகின்றனன். முதல்நாள் நிச்சயதார்த்தம். இரண்டாம்நாள் திருக்கல்யாணம். திருக்கல்யாணத்தன்று திருமுற்ற வெளியில் பெருமாளும் தாயாரும் மாலை மாற்றிக் கொண்டருள்வது மனதுக்கினிமைதருங் காட்சி. ஊஞ்சல் சேவை நெஞ்சையுருக்கும் நீர்மையது. இன்றைய திருமண்டபப்படி சமுத்தனார்குடி ஸ்ரீ தி. கோ. ராமசாமி அய்யர் அவர்களுடையது. நாடோறும் காலைப்புறப்பாடும், மாலையில் மாடவீதி புறப்பாடும் நடைபெறும். நாலாந்திருநாளின் நடுப்பகலில் ஸ்ரீமாந் N. K. R. நாராயணசாமி நாயடு அவர்களால் பரம்பரையாக நடாத்திவரும் தைலக்காப்புத் திருமஞ்சனம் சேவித்தற்குரியது. கண்ணுடையோர் இக்காட்சி கண்டு மகிழ்ச்சியுறல் கடனும். இரவு ஷைநாயடு அவர்களின் திருமண்டபத்தளிகை திருப்பாவாடையாக அமுது செய்விக்கப் பெற்று அனைவர்க்கும் விநியோகிக்கப்படுகின்றது. பின்னர் பெருமாளும் தாயாரும் அழகிய புஷ்ப பல்லக்கில் திருவீதி வலம் வருதல் சேவிக்க வுரியதொன்றும்.



மோகன அவதாரம்.

## 2. மார்கழி மகோற்சவம்.

இவ்விழா மார்கழி மாத சுக்கிலபக்ஷத்தில் அம்ஸவாகன ரான பிரம்மதேவரால் முப்பத்து முக்கோடி தேவர்களுடன் இனிதிருந்து நடாத்தப்பெற்றதாம். இன்றும் இவ்விழா மிக அழகாக அடியிற்கண்டவாறு நடைபெற்று வருகின்றது.

1-ஆம் திருநாள் துவஜாரோகணம்; மாலையில் திவ்ய தம்பதிகளின் சூரியப்பிரபை வாகனப் புறப்பாடு.

2-ஆம் திருநாள்; காலைத் திருவீதி புறப்பாடு. இப் புறப்பாடு நாடோறுமுண்டு. இரவு சிம்மவாகனப் புறப்பாடு

3-ஆம் திருநாள் ; வெள்ளி சேஷவாகனம். (இவ்வாக னம் திரு C. கன்னையா அவர்களால் சமர்ப்பிக்கப்பெற்றது.)

4-ஆம் திருநாள்; பெரியதிருவடிசேவை (கருடசேவை) முதலில் ஸ்ரீ பக்ஷிராஜன் புறப்பாடும், பின் கருடசேவை சப்பரப் புறப்பாடும் அம்ஸவாகனத்தில் உடனெழுந்தருளும் தாயார் சேவையும் கண்களுக்குப் பெருங் களிப்பருளும் பெற்றியன

5-ஆம் திருநாள்; சிறியதிருவடி சேவை. தாயாருக்குக் கமலவாகனம்.

6-ஆம் திருநாள்; யானை வாகனம். திவ்ய தம்பதிகளின் இந்த யானைவாகன சேவை மிக மிகச் சிறப்புடையது.

7-ஆம் திருநாள் ; சூர்ணோற்சவம். காலையில் புறப்பா டில்லை. மாலை 3-30 மணிக்கு வெள்ளிப்பல்லக்கில் திருவீதிப் புறப்பாடு. பெருமாள் ஆநிரைமேய்த்த அவசரத்தில் சேவை சாதித்தருள்வர்.

8-ஆம் திருநாள். காலையில் நவநீத சேவை. இரவு குதிரை நம்பிரான் புறப்பாடு. தங்கத் தண்டிகையில் தாயார்

புறப்பாடு. கண்ணையுங் கருத்தையும் ஒருங்கே கவரும் தன்மையது. இன்று வைகுண்ட ஏகாதசியாதலின், திவ்பதம்பதிகளின் சேவை விசேஷமானது. விரதராஜமான ஏகாதசியை உபவாஸத்துடன் முறையாக அநுஷ்டித்து திவ்ய தம்பதிகளை சேவிக்கப்பெறுவோர் எண்ணியவெல்லாம் எய்தப்பெற்று மிக்க பெரும்பேற்றையும் முடிவிற் பெறுவர்.

9-ஆம் திருநாள்; துவாதசிகாலையில் புஷ்பரத சேவை. திருமணிமுத்தாற்றில் தீர்த்தவாரி. பிரம்மதேவர் தேவர்களுடன் இவ்விழாவினை அழகுற நடாத்தி இன்று அவபிருதம் செய்வதாகத் தலபுராணங்கூறும். உலகின் சகல புண்ணிய நதிகளும் மணிமுத்தாற்றில் நீராடிப் புனிதமெய்திப் பொலிவுற்றது இந் நன்னாளிலேயாம். எனவே இத்தீர்த்தவாரி மிகப் புனிதமும் போதமும், பொங்குபெருஞ் செல்வமும் தருவதொன்றும், இரவு தெப்போற்சவம்; காலையின் புஷ்பரதமே இரவில் தெப்பமாக மாற்றப்படுகிறது. மணிமுத்தாற்றின் நீராழி மண்டபத்திற்குத் திவ்ய தம்பதிகள் எழுந்தருளி திருவாராதனம் கண்டருளுவர். ஸ்ரீ N. K. R. நாயடு அவர்களால் பரம்பரையாகச் செய்துவரும் அக்கார வடிசில் அது சமயம் திவ்யதம்பதிகளின் திருப்போனகமாகும்.

## 3. பங்குனி மகோற்சவம்.

இது பங்குனிமாதம் சுக்லபக்ஷத்தில் நடைபெறுவது. இவ்வுற்சவம் மனோரதம் நிறைவேறிய தபோதனர் மேதாவி முனிவரால் விதிபூர்வமாகவிமரிசையாக நடத்தப்பட்டதாகும். 9-ஆம் திருநாள் உத்தரத்தன்று திருத்தேர். பழைய திருத்தேர் ஜீரணமாகிவிட்டதால் தருமகர்த்தர்கள் மிக முயன்று புதிய திருத்தேர் செய்துவைத்துள்ளனர். சிற்பச் சிறப்புடைய இப்புதிய திருத்தேர் கண்கவர் வனப்பமைந்துள்ளது.

(இத் திருத்தேர் சுபானு-ஸு கார்த்திகை-மீ 21உ 6–12–1943ல் வெள்ளோட்டம் விடப்பெற்றது.) இத்திரு நாட்களில் மார்கழித் திருநாட்களைப்போலவே வாகனப்புறப் பாடுகள் நடைபெறும். ஒவ்வொரு பங்குனி உத்திரத்தன் றும் திருத்தேரில் பெருமாள் தாயார் எழுந்தருளி தேரோட் டம் நடைபெறுகிறது.

## 4. வசந்தோற்சவம்.

இத்திருநாள் வைகாசி மாதத்தில் பத்துநாட்கள் நடை பெறுகின்றது. திருக்கோயிலைச் சூழ்ந்துள்ள அழகிய திரு நந்தவனத்தின் நடுவே கவினுறத்தோன்றும் வசந்தமண்ட பத்தில் பெருமாளும் பிராட்டியும் எழுந்தருளித் திருமஞ் சனம் திருவாராதனம் முதலியன கண்டருளுவர். திவ்ய தம்பதிகள் இரவில் வசந்தமண்டபம் விட்டெழுந்தருளி நீணிலா முற்றத்தில் திருஉலாக்காட்சி கண்டருள்வது கண் கொள்ளாக்காட்சியாகும்.

விசாகத்தில் சாற்றுமறை. இனி வேறு பல சிறிய திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

## தலபுராண வரலாறு.

## மேதாவி முனிவர் தவமியற்றல்.

நலம்பல நிறைந்த சோழமண்டலத்தில் பூமகளின் உயர்திலகமெனப்பொலியும் திருநறையூர் என்னும் திருப் பதி யொன்றுண்டு. இப்பதி ஸ்ரீ ஸ்ரீநிவாசனும் சர்வேஸ் வரன் "நிலையாரநின்றான்" என்றவாறு வாட்டமின்றி மகிழ்ந் துறையும் நிர்மல ஸ்தானமாயும், நந்தலில் அடியார்க் கின் னருள்பொழியுஞ் செந்தாமரையாளுக்கு இனியவாசஸ்தான மாயும், முத்திதரும் சுயம்பு ஸ்தலங்கள் பன்னிரண்டினுள்

முதன்மை சான்றதாயும் விளங்குவதொன்றும். அரவரச ஞன ஆதிசேடனாலும் அளந்துகூறற்கரிய பெருப்புகழுடைய இத்திரு நறையூரென்னும் திவ்ய தேசத்தின் பாரந்த பெரும் புகழ் பன்னியுரைக்குங்கால் பாரதமாம். இத்தகைய பேசரும் பெருமைசான்ற இந்நன்னகரில், மாதவத்தாலுயர்ந்த மேதாவி என்னும் மாதவரொருவர் "வாவித்தடஞ்சூழ் மணிமுத்தாற்றின்" தென்கரையில் உயர்வற உயர்ந்த பெருந்தவமியற்றி இருந்தனர்.

திருமாமகள் தனக்கொரு மகளாகவும், திருமகள் கேள்வனை மருமகனுகவும் பெறவிரும்பிய இம்மேதாவி முனிவர் அப்பேறு பெருமளவும் தவஞ் செய்வதென்ற உறுதியுடன், முனிகுலந்தொழும் முதற்பெருங் கடவுளான மொய்துழாய் முகுந்தனைக் குறித்துப் பதினுயிரமாண்டு பெருந்தவமியற்றினர்.

## அருந்தவர்க்கு அசரீரி அருளியது.

எண்ணிலா அருந்தவத்தர் பலர்சூழப் பெருந்தவமியற்றிய அம்முனிவர்பெருமான், ஓர்நாள் மணிமுத்தாற்றின் முருகவிழ் புனலில் நீராடுகையில், தமதுகரத்தில் சக்கரபாணி நரகேசரி யென்ற அர்ச்சா விக்ரகமொன்று சாய்ந்தது கண்டனர். அதுகண்ட முனிவரும் உண்டோ உலகினில் இதனினும் வியப்பென உன்னி யதிசயித்து நிற்குமளவில் "முனிவரரே! இன்று நீர் பெற்ற இவ்வர்ச்சாவதாரப்பெருமான் ஸ்ரீ சக்கரபாணி நரகேசரியாவர். இவரைப் பிரதிஷ்டை செய்து ஆராதித்துவர இஷ்டசித்தி பெறுவீர்!" என ஆகாயத்தே வொரு அசரீரி எழுந்தது.

அசரீரி கூறியதுகேட்டு அதிசயித்த முனிவர் இஷ்டசித்திபெற விரும்பியவராதலின் மிகவும் மகிழ்ந்து, ஆகாய

வாணி கூறியவாறே பிரதிஷ்டைசெய்து ஆண்டுபதிஞைபிரம் ஆராதித்துவந்தனர்.

## நாகணைமீது நாரணன் அரிதுயில்.

ஒன்றும்தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று தேவருலகோடு உயிர்படைக்கத் திருவுளம்பற்றிய தேவாதி தேவனும் ஆதிப்பிரானுமான இருக்காரணஞ் சொல்லும் கஞ்சச்செல்வப் பெருக்காரணங்கின் கேள்வனை ஸ்ரீமந் நாராயணன், நான்முகனையும் அவரோடு தேவரையும் உலகுயிர்களையும் படைத்தருளியபின் "வெள்ளை வெள்ளத் தின் மேலொருபாம்பை மெத்தையாகவிரித்து அதன்மேலே கள்ளநித்திரை கொள்கின்ற மார்க்கம்" என்றபடி நாகணை யின் மீது நலமுற அறிதுயிலமர்ந்தனன்.

## திருமகள் கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கியது.

தயைக்குத் தாயகமான நாயகனும் நாரணன், அரிதுயில் அமர்ந்தருள்வதுகண்டு பொருதவளாகிய இலக்குமிப் பிராட் டியார் தன்சக்தி ஜாலங்களுடன் பாற்கடல் நீங்கி, வேத னின் தேவிகளான சாவித்திரி சரஸ்வதி முதலிய சகிகளுடன் மகிதலமெழுந்தருளி திருநறையூர் மணிமுத்தாற்றின் தென் கரையில் அக்கினி மூலையிலுள்ள வஞ்சு விருக்ஷத்தினடியில் பங்குனிமாதம் வெள்ளிக்கிழமை கூடிய உத்திர நன்னாளில் விருஷப லக்னத்தில் கன்னிகையாக ஆவிர்ப்பவித்தருளினள்.

## கன்னியை முனிவர் கண்ணுறல்.

தவத்தாலுயர்ந்த மேதாவிமுனிவர் தமது உச்சிப்போ தின் கடன்கழிக்க சீடர்களோடு மணிமுத்தாற்றின் கரைக்கு வந்து, என்றுமில்லாது மணிமுத்தாறும் மலர் வனமும் அன்று அழகுமிக்குப்பொலிதலையும், ஆறு இருதுக்களினும்

மலரும் மலர்கள் மலர்ந்து, நறுமணங் கமழ்ந்து திகழ்வதையும், அபசப்தெசய்ரி கூறுவனபோன்று தேனுண்ட வண்டுகள் தம் செவியருகே வந்து இசை கூறி மகிழ்தலையுங் கண்டு, என்றும்பெறு பேரின்பஉணர்ச்சி பெருகப் பெரிதும் களிதுளும்பிய உள்ளத்தராய் இதற்குக் காரணமின்னதென அறியமாட்டாது சிந்தையைச் செந்நிறுத்தி ஞானதிருஷ்டியால் உண்மையுணர்ந்து சுற்றி நோக்கி, வஞ்சி மரத்தினடியில் "அழகிவளைத் தவஞ்செய்து பெற்ற"தென உருவிற் பொலிந்து தோழிகளுடன் கூடி விளையாடிக்கொண்டிருந்த கன்னி நல்லாளைக் கண்ணுற்றனர்.

## பூமகள் மாதவர்க்குப் புதல்வியாதல்

தான் அயராதாற்றிய பெருந்தவமே இப்பெண்ணுருக் கொண்டதெனப் பொலியும் பெண்ணரசியைக்கண்டு, பெரு வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கேயடைந்து அவளையணுகினர். மாதவர் தம்பால் வருவதுணர்ந்த வன்னிக்கொடியனைய கன்னி நல்லாளும் மாதவத்தோன் முன் சென்று வணக்கஞ் செலுத்தி தாயைக்கண்ட சேயென நின்றனள். அதுகண்ட முனிவரும் மங்கலமுண்டாகவென மனமகிழ்ந்து வாழ்த்தி "குழந்தாய்! நீயாரென அரிய விரும்புகின்றேன். நற்றவஞ்செய்து உன்னைப்பெற்ற தாய்தந்தையர் யாவர்? நின் நற்பெயரென்ன? உங்களிருப்பிடம் யாது?" என வினவுவாராயினர்.

அவ்வாறு வினவிய முனிவரரை நோக்கி அப்பெண் கொடியும் "எண்ணிலாப் பெருந்தவத்து எந்தையே! எனது தாயுந் தந்தையும் தகமைசால் சுற்றமும் பேரும் ஊரும் பிறவொன்றும் அறியேன்! எல்லாம் எனக்கு தேவரீரேயென்று எண்ணியிவணடைந்தேன் ஏற்றருள்புரிக" என்று

இறைஞ்சித் தொழுதனள். இம்மொழிகேட்ட அப்பொய்யறு தவத்தோன் எண்ணியவெல்லாம் எய்தினன் போன்று இத யங் களித்து, யான்செய் நற்றவம் இன்றே முற்றியதென்று மொழிந்து சிந்தை மகிழ்ந்து கன்னிப் பொன்னியை மகளெனப் புல்கி உச்சிமோந்து உவகை பொங்க தன் ஆச்சிரமத்திற்கு அழைத்தேகிப் போற்றி வளர்த்து வருவாராயினர்.

## அங்கயற் கண்ணியின் ஆச்சிரம வாழ்க்கை.

மேதாவி முனிவர்க்குப் புதல்வியாகி அவர் ஆச்சிரம மடைந்த அப்பெண்கொடியும் வளர்பிறையென்ன வளர்ந்து தந்தையின் தவவாழ்க்கைக்கேற்ற தொண்டுகள் புரிந்தும், ஆச்சிரமத்தை நண்ணிவரும் எண்ணிலா இருடியர்க்கேற்ற பணி பல ஆற்றியும், அதிதி பூசை செய்து அழகுற வளர்ந்து வந்தனள்.

முனிவரும் தனதருமைச் சிறுமியின் வாழ்க்கை மகிழ்ச்சியில் பெரிதும் கண்ணுடையராய் தத்துக்கொண்டனரோ அல்லது தானே பெற்றனரோ என்று இருடியர் பலரும் எண்ணுமாறு எழில்பெற வளர்த்து வந்ததுடன், அவள் விளையாடுதற்கென தனதாச்சிரமத்திலுள்ள ஸ்ரீ சக்கரபாணி நரகேசரிப்பெருமாள் சந்நிதிக்கெதிரில் ஓர் வில்வச் செடியினையும் நடுவித்தருளினர். எனவே அச்செல்வச் சிறுமியும் வில்வச் செடிக்கு நாடோறும் நீர்வார்த்து கருத்தூன்றிப் பேணிவளர்த்தும், தோழிகளுடன் கூடி விளையாடியும் ஆச்சிரம வாழ்க்கையில் அளவற்ற இன்பமுற்று இனிது வாழ்ந்திருந்தனள்.

## கஞ்சமலர்க்கண்ணி வஞ்சுளவல்லியெனப் பெயர்பெற்றமை.

ஸ்ரீ தேவியாகிய கன்னியை முதலில் முனிவர் வஞ்சுள மரத்தடியிற் கண்ணுற்றது காரணமாக, அன்றுமுதல் அவட்கு வஞ்சுளவல்லியெனப் பெயரிடப்பட்டது.

## தேவாசுர யுத்தமும் தேவர்தம் தோல்வியும்.

ஸ்ரீ வஞ்சுளவல்லியார் மேதாவி முனிவரின் ஆச்ரமத்தில் வளர்ந்துவரும் நாளில் தேவாசுர யுத்தம் தொடங்கலாயிற்று. அதில் அசுரரால் அமரர்கள் தோல்வியுற்று, அலக்கணெய்தி, அருந்துயருழந்து தமதிருப்பிடம் விட்டு ஓடுவாராயினர்.

இவ்வாறு அமரர்கள் அசுரர்பால் தோல்வியுற்று துயருழந்து, துன்புற்று விழிக்கவும் அசுரர்கள் இறுமாந்து கொழிக்கவும் நேர்ந்தமைக்கு அடி, அமரர்தம் வாழ்வான அருட்பெருந்தேவியாம் இலக்குமிப் பிராட்டியார் பாற்கடற் பள்ளி நீங்கிப் பரமனைப் பிரிந்தமையேயாம்.

## பிரமனுதியர் பரமனை இறைஞ்சுதல்.

அமரர்குழாம் தமக்கு நேர்ந்த இன்னலுக்கும், தோல்விக்கும் ஏதுவின்னதென அறியமாட்டாது, இருந்திருந்து இரங்கிநைந்து, இறுதியில் நான்முகக்கடவுளையணுகி தமக்கு நேர்ந்த அலக்கணனைத்தும் எடுத்தியம்பி, இடுக்கண் தீர்ந்து எழில்பெறவாழும் இதங்காட்டி யருளுமாறு இணையடியிறைஞ்சினர்.

வானவர் துன்பங்கண்டு வருந்திய நான்முகன், அமரர் தந் துயர்தீர அருள்செய வல்லவன் எல்லாம் வல்ல முதற்பெருங்கடவுளாம் முகுந்தனேயாவன் எனத்தேறியுணர்ந்து இந்திரனோடு இமையவர் சூழ கருணையங்கடவுள் கண்வளர்ந்தருளும் பாற்கடலணுகி, ஆங்கே அரவரசின்மீது அறிதுயிலமரும் ஆதியஞ்சோதி அருட்பெருங் கொண்டலின் அடியிணை இறைஞ்சி ஏத்திவாழ்த்தி, தமக்குற்ற துயர் துடைத்தருளி காத்தருளுமாறு பிரார்த்திப்பாராயினர்.

## ஆழியங்கையன் அபயமளித்தல்.

பத்துடை யடியவர்க் கெளியனாய பரம்பொருளும் பரம கருணைகூர்ந்து அயன்முதலாய அமரரை நோக்கி "வாணிவல்லப! வானவர் தலைவ! வருந்துதலொழிக; அசுரரால் நீவிரெய்திய அல்லல் அனைத்தும் அறிவோம். திருவின் தலைவி நமது அரிதுயில்கண்டு பொருதவளாகிப் பூவுலகடைந்தனள். அமரர்தம் வாழ்வான அவர்மேன்மங்கை நம்மைப் பிரிந்தது காரணமாக நீவிர் பெருந்துய ருழந்தீர். அவளை நாம் மீண்டுமடைந்திடுநாளே அமரர் பெருந்துயர் அகன்றிடும் நன்னாள். அந்நாள் அண்மையில் அணுகிட அருளினம்; அஞ்சேல்" என்று அருள்செய்து மறைந்தனன்.

இவ்வாறு பரமன் அருளிய உயர்வரம் உன்னி உவகை பூத்த உள்ளத்தராய்த் தத்துறலொழிந்ததென்று தளர்ச்சி நீங்கி, வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வேதாந்த விழுப்பொருளை வாழ்த்தி வணங்கி வானவர் தமதம திருப்பிடம் வைகினர்.

## திருமால் ஐந்துருக்கொண்டு அலர்மகளை நாடல்.

பின்னர் காராழிவண்ணன் பேராழி அணைதுயிலும் பெருமிதம் துறந்து, சீராழியுடைய நாராயணியைத் தேடியடைந்திடத் திருஉள்ளமுடையராய், கிழக்குத்திசை நோக்கி சங்கர்ஷணனாகியும், தெற்குநோக்கிப் பிரத்யும்னனாகியும், மேற்கில் அநிருத்தனாகியும், வடக்கில் சாம்பனென்னும் ஸ்ரீ புருடோத்தமனாகியும், மத்தியபாகத்தில் வாசுதேவனாகியும் பஞ்ச வியூகமான ஐந்துருத்தாங்கிப் புறப்பட்டருளினன்.

ஒப்புயர்வற்ற உயர்தனிப்பரமன் அப்பிராகிருதத் திரு மேனிதாங்கிய இவ்வைந்து மூர்த்திகளாகி இறைவியைத் தேடி புறப்பட்டருளிய காலத்து, விநதைசிறுவனும் ஸ்ரீகருடபகவானும் விண்வழியாக விமலையைத் தேடுவான் விடைபெறலாயினர்.

ஆதியஞ்சோதியன் பஞ்சவியூகப் பரமர்களாகி அண்ட மனைத்தினும் அமலையைத் தேடியும் காணுதவராய், அனை வரும் முடிவில் சந்திப்பதற்கென முன்னரே வகுத்துக் கொண்ட சித்திக்ஷேத்திரமாகிய திருநறையூரடைந்து மணி முத்தாற்றில் நீராடி விடாய்தீர்ந்து சிறிதுபோது தங்கியிருந் தனர். "பல்லாயிரம் இருள்கீறிய பகலோன் என ஒளி ரும்" பஞ்சவியூகப் பரமர்கள் ஐவரையும், மணிமுத்தா நதிக்குவந்த மேதாவி முனிவரின் சீடர்கள் கண்டு வணங்கி முனிவரின் ஆச்சிரமத்திற்கு அழைத்துச் சென்றனர்.

சுராருடனே முனிவர்களும் சுருதிநான்கும் தேடுகின்ற பதஞ்சிவக்கத் திருவினைத்தேடி தமதாச்சிரமஞ் சார்ந்த அதிதிகள் ஐவரையும் கண்டு அதிசயித்த மேதாவி முனிவர் அவர்க்கு நல்வரவுகூறி எதிர்கொண்டழைத்து இருக்கை யீந்து, மார்வமென்பதோர் கோயிலிடத்து தம்மால் நாடோ றும் ஆர்வமென்பதோர் பூவிட்டேத்தும் அருட்சோதிப்பர மனுய ஆழியங்கையனே இவ்வாறு அதிதிகள் ஐவராக அவ தரித்தனனே என்று ஐயுற்று, ஒன்றுந்தோன்றுதவராய், உணர்வுகலங்கி உபசரித்துநின்றனர்.

## விநதைசிறுவன் விமலையை யுணர்த்தல்.

இதிவ்வாருக, விமலையை விண்வழித் தேடிவந்த விநதை சிறுவராம் பெரிய திருவடியும் இவண்வந்து, எல்லாம்வல்ல

இறைவி இங்கு வஞ்சளவல்லியாக வதிவதறிந்து இறைவர்க்கு அதனைக் குறிப்பாலுணர்த்த, இறையவர் ஐவரும் புன் முறுவல்பூத்து பொருந்தியங் கிருந்தனர்.

## வந்த நம்பி வளைக்கை பற்றல்.

பின்னர் ஸ்ரீ வாசுதேவன் திருக்கை யலம்புகைக்குத் தீர்த்தம்வேண்ட முனிவரும் விரைந்துசென்று குண்டிகையில் நீர்கொணர்ந்து கொடுத்தனர். அதனை வாங்கமறுத்து வாசுதேவன் வருமாறு கூறினர். "மாதவத்தீர் புருடர் தரும் புனல் எமக்குப் புனிதமுடையதன்று. அங்ஙனம் ஆடவரால் கொடுக்கப்படும் நீரை நாம் ஏற்பதில்லையென்ற விரதமுடையோம். கன்னிதரும்புனலே யாம் கைக்கொள்ளத்தக்கது. ஆதலின், நெடுநாளைய அவ் விரதத்தினை இன்று இழக்க இசைந்திலேம்" என்றனர்.

அம்மொழிகேட்ட மொய்ம்புறு தவத்தோன் நன்றெனக்கூறி, தன் அருந்தவப் புதல்வியாம் வஞ்சுளவல்லியைக் கூவியழைத்து "குழந்தாய்! நமது நற்றவப்பயனாய் இன்று நம் ஆச்ரமம் வந்தெய்திய அருந்தவர்க்கு எவனொருபுருடன் கையலம்புகைக்குப் புனல் தருகின்றானோ அவன் செய்யும் அன்னதானமும் பயனற்றதாதலின், நீ விரைந்துசென்று இக்கமண்டலத்தில் நீர் கொணர்ந்து கொடுப்பாயாக" என்று கூறினர்.

தந்தை சொற்படி தையலும் சென்று சடுதியிற் புனல்கொணர்ந்து "ஆடவர் பெண்மையை அவாவும்" வடிவழகார்ந்த நம்பியைக்கண்டு சிறிதுநாணி, பிரிந்தவர் கூடினாலன்ன பெருகிய உணர்ச்சியெய்தி, அன்பும் பணிவும் அடக்கமுமுடையளாய் நம்பிதன்கையில் நலமுடன் வார்த்தனள். வார்த்த நன்னீரை வளர்கரமேற்று அலம்புவார் போன்று வந்தநம்பியும் அவள்தம் வளைக்கை பற்றினர்.

அதுகண்டு அஞ்சிய வஞ்சுளவல்லியார் "எந்தையே! ஈதென்னதென்றறிந்திலேன், வந்த நம்பி என் வளைக்கை பற்றினார்! வாரும் வாரும் வந்து நீர் பாரும்" என்று வாய் திறந்து அரற்றினள்.

தனது அருந்தவ மகளின் கூக்குரல்கேட்டு கோப மூண்டமேதாவிமுனிவரும் "என்னே கொடுமை! ஈதென்ன மோசம்! வந்தவர் வஞ்சம் இருந்தவாறென்னே! வனிதை யின் புனிதம் கெடுத்திடவந்த வஞ்சகர் தம்மை அறிந்திலேன் அந்தோ; பொய்திரொழுக்கம் பொருந்தினார்போன்று எய்தி னரிதுவும் இயற்றவல்லரோ? வந்தவர் யாவரோ? யாவரே யாயினும் இதோ பெறுவரென் சாபம்", என்று கமண்டலத் துடன் வெகுண்டோடி வந்தனர்.

வந்தவர், வஞ்சுளவல்லியாரின் வளைக்கை பற்றி நின்ற வாசுதேவனைத் தீயுறநோக்கிச் சீறிச்சினந்து சபித்திடத் துணிந்து கமண்டல நீரைக் கையிலேந்தினர்.

அருந்தவ முனிவரின் பெருஞ்சினங்கண்டு பெரிதும் அஞ்சிய பொருளாளரான ஸ்ரீ வாசுதேவன் மேதாவி முனி வருக்குத் தம்மைக் காட்டிக்கொடுத்தருள நினைத்து திரு வாழித் திருச்சங்கேந்திய தனது திவ்யமங்கள திருவுருவங் காட்டி புன்முறுவல்பூத்து பொலிந்து நின்றருளினர்.

திருவுக்குந்திருவாகிய தேவதேவனின் திகழ்சுடர்ச் சோதி திருக்கோலங்கண்டு துணுக்குற்ற தூராதமனக்காதல் தொண்டர்பெருந் தகையரான மாமுனிவர், ஆராதமனக் களிப்போடு அழுதகண்ணீர் மழைசோர நினைந்துருகி; "எந் தாய்போற்றி இறைவாபோற்றி; நந்தலில் விளக்கே நாரணா போற்றி; வந்தருள்புரிந்த வள்ளலேபோற்றி; உயர்வற

உயர்நலம் உடையவபோற்றி; மயர்வற மதிநல மருளினய் போற்றி; அயர்வறு மமரர்க ளரசே போற்றி; துயரறு சுடரடி தூயவபோற்றி; முத்தே போற்றி; முதல்வா போற்றி; அத்தா போற்றி; அரியே போற்றி; போற்றி போற்றி புராதன போற்றி; நாயகநின்னை நானறியாது பேதையேன் பிழைத்த பிழைபொருத்தருள்வாய்'' என்று போற்றி வாழ்த்தி பொன்னடி வணங்கினர்.

## வாசுதேவன் மாதவர்க்கு வரமருளல்.

மாதவத்தராய மேதாவி முனிவரின் ஆதராதிசயங் கண்டு அகமகிழ்ந்தருளிய இறைவன் அவரை அன்புற நோக்கி ''மாதவத்தீர்! உமது மாதவம் வாழ்க! மலர்மகளே உமது மகளென வந்தனள்! நீவிர் எம்மை எது குறித்து நோற்றீரோ அதனை இன்று எய்தினீரன்றோ! க்ஷீர சமுத்திரராஜனைப்போன்றும், பெரியாழ்வாரைப்போன்றும், நீரும் எமக்கு இன்று மாமனாராயினீர். எனவே பெரிதும் மகிழ்ந்தனம். மேலும் நம்பால் பெறுவரமுளதெனின் பெற்று மகிழ்க'' என்று திருப்பவளச் சோதிவாய்த் திறந்தருளிச் செய்தனர்.

தவநிஷ்டராய மேதாவிமுனிவரும் இஷ்டசித்தி எய்தியது குறித்து அளவிலா மகிழ்ச்சியுற்று ஸ்ரீ வாசுதேவனது மண்ணும் விண்ணும் தாயவடியிணைகளைத் தமது கருத்துற நிறுத்தி ''வாழி வாழி நெடியோய் வாழி! அடியனேற்கருள் செய அமைவோய் வாழி! உயர்வற உயர்ந்த வொப்பிலா மணியே, செப்பரும் பேற்றைச் சிறியனேற் கருளினை. தன்னருளாலே இன்று உய்திபெற்றுயர்ந்தேன், மலர்மகள் உன்னை மகளெனப் பெற்றேன், மன்னியநீயும் மருமகனாய் இசைந்தனை! யான்பெற்றபேறு யாரினிப்பெறுவர்! எனவே

என்னினிப் பெறுவது எந்தாய் நின்னிடை? எனினும் வர மருள்வது நின் அருட்குறிப்பாயின் ஈரிருவரங்கள் எளிய னேற்கு அருளிட வேண்டுகின்றேன்.

அவற்றுள்; எல்லாம்வல்ல நின் அருட்பெருந்தேவியும், எனதருந்தவப் புதல்வியுமான ஸ்ரீ வஞ்சுளவல்லி சமேதரான தேவரீர் பின்னுணர்வணங்க இத்திவ்ய தேசத்தில், என்றும் இத்திருக்கல்யாண கோலத்துடன் சேவை சாதித்தருள வேண்டுவதொன்று.

இரண்டாவதாக, எனது புதல்வியான அஞ்சலோதி யான வஞ்சுளவல்லிக்கே இத்தலத்தில் எல்லா விஷயத்திலும் முதன்மையும் சுதந்திரமும் அருளுவதோடு, தேவரீர் அவ ளுக்குச் சர்வவிஷயங்களிலும் பாதந்திரராக இருந்தருள வேண்டும்.

மூன்றாவதாக, அடியேன் இத்தலத்தில் ஸ்ரீயுடன்கூடிய தேவரீரது திருவடிகளிற் சரண் புகுந்தமையான் மேலும் பிறவாமைபாகிய பெருவரமருளி நலமந்தமில்லதோர் நாட ருள வேண்டும்.

நான்காவதாக, இத்தலத்தில் வசிக்கும் மனிதர் முதல் பசு பக்ஷி மிருகாதி பல்லுயிர்க்கும் இறுதியில் வைகுந்த விண்ணகர வாழ்வருளவேண்டும்." என்றின்னவாறு பிரார்த் தித்த மேதாவி முனிவரை ஸ்ரீ வாசுதேவன் குளிர நோக்கி அவர் கோரிய நான்கு வரங்களையும் "தந்தோம்" என்று அருள்செய்து; சுகந்தகிரியின் உயர்ந்த சிகரமொன்றில் தன் சங்கற்பத்தால் ஐந்து விமானங்களுடன் கூடிய ஸ்ரீநிவாச விமானத்தைத் தோற்றுவித்து, அதனுள் ஸ்ரீ வஞ்சுளவல்லி யோடு சங்கர்ஷண பிரத்யும்ன அநிருத்த புருஷோத்தமர்க ளுடன், அனைத்துயிரும் உய்திபெற அர்ச்சாவதாரங்கொண்டு "நிலையார" நின்றருளினன்.

## வானவர் தானவரை வெல்லல்.

எல்லாம்வல்ல இறைவன் இத்தலத்தில் ஸ்ரீயுடன் கூடி எழுந்தருளியது முதற்கொண்டு புதிய பலம் பெற்ற வானவர், தானவரை வென்று இழந்த பெருஞ் செல்வ மெய்தி இனிது வாழ்ந்திருந்தனர்.

## அன்னவாகனர் ஆராதித்தமை.

ஸ்ரீ வஞ்சுவல்லியை நம்பி யெம்பெருமான் திருமணம் புரிந்தபின், நான்முகன் தேவிகளான சாவித்திரியும் சரஸ்வதியும் சத்தியலோகஞ் சென்று சதுர்முகன் பக்கல் சர்வேச்வரன் திருநறையூரில் ஸ்ரீ வஞ்சுளவல்லியாரைத் திருமணம் புரிந்த அவசரத்துடன் திருக்கோயில்கொண்டெழுந்தருளிய வரலாற்றைக் கூறினர். நான்முகக் கடவுளும் அதுகேட்டு அளவில் ஆனந்தமெய்தியவராய்த் திவ்யதம்பதிகளை வணங்கி வழிபடக்கருதி தன் தேவியருடன் திருநறையூரை யடைந்தனர்.

## நான்முகன் நம்பிபால் வரம்பெறல்

ஸ்ரீநிவாச க்ஷேத்திரமான நறையூரை யடைந்த நான்முகக் கடவுள், நிலையாக நின்றருளும் திவ்ய தம்பதிகளின் திருக்கோலத்தைக் கண்களாலாரக்கண்டுகளித்துப் பூசித்துப் போற்றி "எம்பெருமானே! எனைப்பயந்த அம்மனையோடு எழிலுற ஈண்டு நின்றருளும் தேவரீரை என்ஞான்றும் இப்பதியிலிருந்து ஆராதித்துவர அடியேற்கு அருள் புரிந்தருள்க" என இறைஞ்சி யேத்தினர்.


நான்முகன் கேட்ட நல்வரம் நினைந்து, நம்பியும் புன்முறுவல் பூத்து வேதனை நோக்கி "நீர் விரும்பியவாறே வரமருள் செய்தோம்! துவாதசாக்ஷர ஆராதித்துக்கொண்டு ஈண்டு என்றுமிருத்தி" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அங்ஙனமே அயனரும் அனைத்துலகும் பயந்த அன்னையோடுறையும் ஸ்ரீநிவாசனை ஆராதித்து, திவ்யதம்பதிகளுக்கு நவாகோற்சவத்தையும் நடத்துவித்து, மார்கழிமாத சுக்கில பக்ஷத் துவாதசியில் திரு மணிமுத்தா நதியில் அவபிருத ஸ்நானமும் கண்டருளபண்ணி அன்றுமுதல் இன்றும் ஆராதித்து வருவாராயினர்.


## ஸ்ரீ பக்ஷிராஜன் பரமனைப் பணிந்து உயர்வரம் பெறுதல்.

மேதாவி முனிவரின் விருப்பத்திற்கிணங்கி ஸ்ரீ வஞ்சுளவல்லி சமேதராக சித்திக்ஷேத்திரத்திலேயே என்றும் எழுந்தருளியிருக்கத்திருவுள்ளம்பற்றிய பரமனை நோக்கி ஸ்ரீ பக்ஷிராஜன் "எம்பெருமானே! என்னையாளுடையாய்! மலையார்ந்த கோலஞ்சேர் இம் மணிமாடம் மிகமன்னி என் அன்னையோடு நிலையார நின்றருளும் தேவரீரை அடியேனும் அகலாதிருந்து சேவிக்கும் பேற்றையும், பரத்வாதிகளிற் போன்று இவ்வர்ச்சாவதாரத்திலும் ஸ்ரீ பாதந் தாங்கும் சிற்றடிமைப் பேற்றையும் தந்தருள்வதோடு; என்னை விரும்பித்தொழும் மெய்யடியார் விரும்பும் வரமருளும் பெற்றியையும் அளித்தருளவேண்டும்" என அடிபணிந்தேத்தினர்.

வேண்டுவார் வேண்டிற்றெல்லாம் விரும்பியளிக்கும் வேத முதல்வனன நம்பி யெம்பெருமான் வைநதேயரைக் குளிர நோக்கிக் கடாட்சித்தருளி "விரும்பியவாறே வரம் தந்தோம்" என்று திருவருள்புரிய, மட்டற்ற மகிழ்ச்சி சான்ற பக்ஷிராஜனும் அன்று தொடங்கி இச்சித்திக்ஷேத்திரத்தில் அர்ச்சாவதாரங்கொண்டு அமர்ந்தருளிஅடியவர்க்கு இஷ்ட காமியார்த்தங்களை இனிதருளி வருகின்றனர்.



கல்கெருடன்



பொங்கல் ரதம்.

## பிரார்த்தனையும் - பயனும்.

இப் பக்ஷிராஜருக்கு அமுதகலசமெனும் மோதகத்தை அமுது செய்வித்தருளும் பக்தர்கள், தமது மனோபீஷ்டங்களை நிச்சயமாக அடையப்பெறுகின்றனர்.

கஸ்தூரி, குங்குமப்பூ, புனுகுசட்டம் முதலியவைகளை வாழைச்சாற்றில் கலந்து இவரது (கருடனது) திருமேனியில் சாத்துவோர் இஷ்டசித்தி யெய்துவர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இவரது சர்ப்பாங்கங்களில் பட்டு முதலிய சித்திரவஸ்திரங்களை அணிவிப்போர் எண்ணிய எண்ணியாங்கு எய்தி மகிழ்வர்.

ஆடிமாத சுக்லபக்ஷப் பஞ்சமி திதியில் இப் பக்ஷிராஜரைப் பக்தியுடன் அர்ச்சிப்போர் பிள்ளைப்பேற்றை விரும்புவோராயின் நல்ல புதல்வர் புதல்விகளையும் மணத்தை மகிழ்ந்த மாதர் மனதிற்கினிய கணவனையும், ஆடவர் நல்ல மனைவியையும், பேரின்ப வீட்டைப் பெறவிரும்பினோர் நலமந்தமில்லதோர் நாடான ஸ்ரீ வைகுந்தத்தையும் பெறுவரென்பது முக்காலும் உண்மையாகும்.

சுவாதி நன்னாளில் இவரை அர்ச்சிப்பவரும், இவர் தம் **பன்னிரு நாமங்களைப்** பாராயணம் பண்ணுமவரும், கருட கவசத்தைப் படிப்பவர்களும் விரும்பிய பயனெய்தி வெற்றியும் பெறுவர்.

உலகின் முப்பத்திரண்டுகோடி சகல மந்திர யந்திரங்களுள் கருட யந்திரமானது முதன்மையானதாகும். எனவே அதனை எழுதிப் பூசிப்போர் பூத வேதாள பைசாச முதலிய கொடிய பீடைகளினின்றும் நீங்கி வாழ்வர்; எல்லாவித ரோகமும் நில்லாதொழியும். மேலும் இந்த யந்திரம் வீடுபேற்றையும் விரும்பியளிக்கும் வீறுபாடுமுடையது.

## சோழன் கோச்செங்கனான் வரலாறு.

### தீர்த்த யாத்திரையும் - அரசிழத்தலும்.

திருவும் அறிவும் திறலும் புகழுமுடைய சோழர்குலத் திலகனான சோழன் கோச்செங்கணான், பண்டு சோழ மண்டலத்தை "வறிஞரோம்புமோர் செய்யெனக்காத்து இனிது அரசு செய்த" மன்னர் மன்னனாவன். தோலாத தனி வீரனாகிய இம் மன்னனின் பெரும் புகழ் எண்டிசையும் மண்டி நின்றதொன்று. திருமங்கையாழ்வார் அருளிய தெய்வத் தமிழ் மறையாகிய பெரிய திருமொழியுள் "தெய்வவாள் வலங்கொண்ட சோழன்" என்றும், விரல்மன்னர் திறவழிய வெம்மாவுய்த்த செங்கணான் கோச்சோழன்" என்றும், சிலைத்தடக்கைக்குலச்சோழன்" என்றும் பாராட்டப்பெறும் இவனை அவனியோர் "தாம்ராக்ஷ"னென்றும் அழைப்பதுண்டு.

இச்சோழ மன்னன், ஒருகால் கயா சிரார்த்தம் செய்ய நினைந்தவனாய் தம் மனைவியோடு தீர்த்தயாத்திரை சென்றதறிந்த மாற்றரசர்கள் அதுவே தக்க சமயமெனத் தேர்ந்து சோழநாட்டின்மீது படையெடுத்து இராச்சியத்தைக்கவர்ந்து கொண்டனர். யாத்திரை முடிந்து மீண்ட சோழ மன்னன் தன் அரசு பகைவரால் கவரப்பட்டதறிந்து திகைத்து நொடி போதில் தேறிச் சிறிது படை திரட்டிப்பகைவர்களை அஞ்சா நெஞ்சுடன் எதிர்க்கத் தொடங்கினன்.

### கோச்சோழன் தோல்வி.

பெரும்போர் நிகழ்ந்தது. போரில் தனது படைகள் மாள்வதுகண்டும் மன்னன் மனங்கலங்காது வன்சினங்காட்டி சமர்புரிந்தனன். பகைவரது பெரும்படையினடுவே தன்னந்தனியனாய் நின்று கொற்றவன் வெற்றிகாண் விழைந்தன

னேனும் விதியின் வலிமை வீரத்தை வென்றது. என்னே விதியின் வலிமை! போரில் உடைந்து முடிவில் தோல்வி கண்ட சோழன் காலத்தை எதிர்நோக்கி காட்டையடைந்து காய்கனியுண்டு கரந்துறைந்து சிலநாள் கழித்து மாறுவேடத்துடன் ஊர்பலதிரிந்து நல்வினைப்பயனால் முடிவில் இந்நறையூரின் சுகந்தவனம் வந்தடைந்தனன்.

இங்கு தவமியற்றி வாழும் தபோதனர்கள் தம்வனம் வந்தடைந்த மன்னனையுணர்ந்து அவனுக்கு நேர்ந்த இன்னலையறிந்து பெரிதும் இரங்கி, காய்கனிகளால் உபசரித்து அரசனை நோக்கிப் பின்வருமாறு தேற்றுவாராயினர். அரசே! தளர்ச்சியொழிக, வெற்றியும் கொற்றமும் விரைவினில் அடைவாய். உன் நல்வினைப்பயனே இன்று, உன்னை இங்கு கொண்டுவந்து சேர்த்தது. எனவே, இன்றோடு உனது இன்னலொழிந்தது. இன்றுமுதல் இதோவுள்ள இம்மணிமுத்தாற்றில் நீராடி ஸ்ரீ வஞ்சுளவல்லி சமேதனை ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமானைத் துவாதசாக்ஷர மகாமந்திர பிரம்ம வித்தையினால் ஆராதித்து வருவாயாக. அதனால் இஷ்டசித்தி பெற்று இழந்த இராச்சியத்தையும் பெற்று மகிழ்வாய் என்று இதமருளிச்செய்தனர்.

## சோழன் தெய்வவாள் பெற்று அரசு பெறுதல்.

நிறைமொழி மாந்தர் கூறிய மறைமொழி கேட்டு மகிழ்ந்த மன்னவன், மறையவர் கூறியவாறே மணிமுத்தாற்றில் நீராடி ஸ்ரீ வஞ்சுளேசனை ஆராதித்து வருகையில் ஓர் நாள் எல்லாம் வல்ல இறைவன் மன்னன்முன் தோன்றி "மன்ன! நின் உறுதிகண்டு மகிழ்ந்தோம். நாம் மகிழும் மணிமுத்தாற்றில் இன்னே சென்று நீராடி நாம் தரும் தெய்வவாள்கொண்டு, மாற்றலரைவென்று மண்ணுலகாளுதி" என அருளி மறைந்தனன். அதுகண்ட அரசன்

மகிழ்ச்சி துளும்பிய மனத்தினனாய் மணிமுத்தாற்றில் நீராடி "தெய்வவாள்" பெற்று, எண்ணுவார்தம் இடர்களைந்தருளும் எழிலார் நறையூர் உறை நம்பியைப் பணிந்து, எழுந்து நின் றவளவில் தனதருகு சார்ந்த கொற்றப்பரியொன்றுகண்டு குதித்தேறிப் போர்க்களம்குறுகி மாற்றலரை வென்று மணி முடி புனைந்து வாகைசூடி வையமாண்டு மகிழ்ந்தினிதிருந்த னன்.

## சோழன் திருப்பணிசெய்து விழாவெடுத்து மகிழ்தல்.

கொற்றவனான கோச்சோழர் தன் வெற்றிக்கு முற்ற வும் அருள்செய்த திருநறையூர் நம்பியெம்பெருமான் சந் நிதிக்கு விடைகொண்டு திருப்பணி பல செய்து, தன் பெய ரால் திருமண்டபமொன்றெடுத்து, தனது இராச்சியத்திற் செம்பாதியும், திருவாபரணங்கள் பலவும் சமர்ப்பித்து, கனக விமானமுங் கட்டுவித்து, மட்டற்ற மகிழ்ச்சியுடன் நம்பிநாத ருக்கு நவாகோற்சவத்தை நடாத்தி, வைகாசி மாத சுக்கில பக்ஷப் பௌர்ணமியில் திருமணிமுத்தாற்றில் அவபிருத ஸ்நானங் கண்டருளச்செய்து, செப்பருஞ் சீர்த்திபெற்று சிறந்து வாழ்ந்தனன்.

## சோழன் நாரதர் சொற்படி நற்றவமியற்றல்.

பரந்த பெரும் புகழுடைய இச்சோழன், பின்னர் தன் மைந்தனிடம் அரசினை ஒப்புவித்து ஸ்ரீ நாரத முனிவர்பால் நல்லுபதேசம் பெற்று, இந்நகரிலேயே ஏழாயிரம் இருடியரு டனிருந்து நற்றவமெய்தி நான்மறை நாயகன் நற்பதமணு கினன்.

## இந்திரன் தொழுதுயர்ந்த வரலாறு.

அமரர் நாட்டிறைவனாய இந்திரன் முன்னொருகால் தூர்வாச முனிவரால் சபிக்கப்பெற்று தன் சுதந்திரமும்

இந்திர போகமும் பொலிவுமிழந்து துயருழந்து, நான்முகக் கடவுளை யணுகிப் பிரார்த்திப்பானாயினன். அவரும் முத்தி தரும் தலங்களுள் முதன்மைபெறும் திருநறையூரடைந்து அநிருத்த தீர்த்தமாடி ஸ்ரீ ஸ்ரீநிவாசனை ஆராதித்து சாபத்தின் நீங்கி உயர்தி" என உரைத்தருளினர். அவ்வாறே இந்திரன் இப்பதியடைந்து அநிருத்த தீர்த்தமாடி நம்பியைப் பணிந்து சாபத்தின் நீங்கி நல்வாழ்வடைந்து அதற்கு நினைவுக்குறியாக அநிருத்த தீர்த்தக்கரையில் ஓர் அசுவத்த விருக்ஷத்தை நாட்டி அமரர்நா டடைந்தனர்.

## துண்டவெண்பிறையன் துயர்தீர்ந்த வரலாறு.

"ஆறும் பிறையு மரவமும் அடம்பும் சடைமேலணிந்து உடலும், நீறும்பூசி யேறாரும் இறைவ" னாய சிவபெருமான் ஒருகால் தன் தந்தையாகிய நான்முகக் கடவுளின் சிரமொன்றைக் கொய்தினர், அப் பெரும் பாதகத்தால் பிரமனது மண்டையோடுசிவபெருமானது கையைப்பற்றிக்கொண்டது. எனவே 'பிண்டியார் மண்டையேந்தி மூவுலகும் பலிதிரிந்து" நலிவுற்று, இறையருளால் நறையூரையடைந்து, ஆங்குள்ள சங்கர்ஷண தீர்த்தமாடி, எண்ணுவார்தம் இடர்களைந்தருளும் எல்லாம் வல்ல முதற் பெருங் கடவுளான ஸ்ரீ வஞ்சுளவல்லி சமேத ஸ்ரீ ஸ்ரீநிவாச வள்ளலை வணங்கி "மந்திரராஜ" மென்னும் தூய திருவெட்டெழுத்து (அஷ்டாக்ஷர மகாமந்திரம்) கொண்டு பூசித்து, அமரரும் அஞ்சத்தக்க மகா கோரமான பெருந்தவத்தைச் செய்து முடிவில் சங்கர்ஷண தீர்த்தக்கரையில் தன் மாபாதகத் துயர்தீர்ந்து சிவமாயினர். இதனை ஸ்ரீ பரகால வள்ளல்;

**பெடையடர்த்த மடவன்னம் பிரியாது, மலர்க்கமலம்**
**மடலெடுத்து மதுநுகரும் வயலுடுத்த திருநறையூர்**

முடையடர்ந்த சிரமேந்தி மூவுலகும் பலிதிரிவோன்,
இடர்கெடுத்த திருவாள னிணையடியே யடைநெஞ்சே.

என்று அருளிச்செய்துள்ளமை காண்க. (பெரிய திருமொழி 6, 9, 1.) எனவே அது முதற்கொண்டு அத்தலத்துறையும் சிவபெருமானுக்குச் **சித்தீசர்** என்ற திருநாமமும், அவர் கபாலவிமோசன சித்தி பெற்றுயர்ந்தமையால் இத்தலத்திற்கு "**சித்தீச்சரம்**" என்ற திருநாமமும் வழங்குவன வாயின.

## சூரியன் பூசித்த வரலாறு.

மகா வீரியனுகிய சூரிய பகவான் பண்டொருநாள் கதிர் காலும் தமது தேர்ச்சக்கரத்தில் கொடுபட்டுத் தன் கரங்களை இழந்தனன். அதனால் அறுபட்ட கரத்தனனுய்த் துயருழந்த அப்பகலவன், உலகெலாந் திரிந்தும் தனக்குற்ற இன்னல் தீராமையை யுன்னிப் பெரிதும் வருந்தி, அமரர் குருவான பிரகஸ்பதியை யடைந்து இறைஞ்சி வேண்டினன். அவரும் அருக்கனது அந்நிலைமை கண்டிரங்கி அவனை நோக்கி "சித்தி க்ஷேத்திரமடைந்து, சித்திரைமாத சுக்கில பக்ஷத் துவாதசியன்று மணிமுத்தா நதியில் நீராடி ஸ்ரீகாந்தனை ஆராதிக்க இஷ்டசித்தி பெறுவாய்" என்றியம்பினர். அவ்வாறே பகலவனும் அப்பதி சார்ந்து மணிமுத்தா நதியிற் படிந்து ஸ்ரீவஞ்சுளவல்லி கேள்வனைப் பக்தியினுல் அர்ச்சித்து ஆராதித்துப் பொற்கரங்கள் பெற்றுப் பொலிவுறலாயினன்.

அதனுற் பெருமகிழ்ச்சியும் உயர்வாழ்ச்சியும் பெற்ற பகலவன் தன் துன்பங்கெடுத்து ஆண்டருளிய நறையூர் இன்புற்றமர்ந்தருளும் நம்பி யெம்பெருமானை, அன்று தொடங்கி இன்றும் ஈண்டு ஆராதித்து வருகின்றனர்.

## பானுதத்தன் வழிபட்டுயர்ந்த வரலாறு.

முன்னொருநாள் மாகிஷ்மதி என்ற பட்டினமொன்றில் பானுதத்தனென்னுமோர் அந்தணனிருந்தான். அவன் நற்கலைகளாய வேதக்கலைகளை நன்கு பயின்றவனாயிருந்தும் ஓர்நாள் கோப வயத்தனாய்த் தன் குருவை இகழ்ந்தனன். அதனாற் சினத்தின் நீங்கியவரான அக்குருவும் சினந்து சபித்தனர்.

அதனால் பானுதத்தன் தன் நல்லுருவிழந்து பிரமராக்கத சரீரம்பெற்று, காடெங்குந் திரிந்து கந்தமூலங்களையும், காற்றையும், காட்டு விலங்குகளையும் தின்று, நலிவுற்றுப் பல நாடுந்திரிந்து, இறுதியில் விதிவசமாக நறையூரையடைந்து, ஆண்டுள்ள பிரத்யும்ன தீர்த்தத்தைக்கண்டு தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள நினைத்தவனாய் அப்புண்ணியப் புனலில் இறங்கி முழுகிப் பருகினன்.

தெய்வத்தன்மை பொருந்திய அப்புண்ணியப் புனலைப் பருகினமையால் உடனே குருசாபத்தின் வந்த பிரமராக்கத சரீரம் நீங்கி முன்னைய நல்லுரு வெய்தினன்.

திருநறையூர்ப்பதியின் தீர்த்த மகாத்மியத்தாலும், மரகதமணிவரைபோல் மன்னிநின்றருளும் ஸ்ரீ வஞ்சுளவல்லி மணவாளன் இன்னருளாலும், சாபவிமோசனம் பெற்றமைக்குப் பெருமகிழ்ச்சியுற்ற பானுதத்தன், அப்புண்ணியப் புனலின் கரையில் பொருந்து மாதவமிருந்து நாரணன் நற்பதம் நண்ணி யின்புற்றனன்,

## வாயுபகவான் வணங்கிய வரலாறு.

ஸ்ரீய: பதியான சர்வேச்வரன் இச்சீனிவாசக்ஷேத்திரத்தில் ஸ்ரீயுடன்கூடி நின்றருளியதைச் செவியுற்ற வாயு பகவான், அத்திவ்ய தம்பதிகளின் திவ்யமங்கள திருக்கோலத்தைச் சேவித்துய்வான் கருதி, இத்திருப்பதியடைந்து சிந்

தைக்கினிய திருக்கோலத்தைக் கண்களாரக் கண்டு களித்து, கனிந்து மெய்யுருகி, வாழ்த்தி வணங்கி, திருவுக்குந் திருவாகிய ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமானுக்கு நவாகோற்சவத்தையும், சிம்மமாத சுக்கிலபக்ஷத்தில் பிலவோற்சவத்தையும், நடாத்தி மணிமுத்தாற்றில் * அவபிருதமும் கண்டருளப்பண்ணி விடைபெற்றுப் போயினர்.

## சரித்திர வரலாறு.

### திருமங்கை யாழ்வார்.

நலம்பல நிறைந்த இந்நிலவுலகில் நிலவும் சமயங்கள் பல. அவைகள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்று வைதிக சமயம், மற்றொன்று பாஹ்ய சமயமாம். வேதத்தை ஒட்டிய சமயம் வைதிக சமயம். இதனை அகச் சமயம் என்றுங் கூறுவதுண்டு. வைதிக சமயம் என்றால் வேதக்கொள்கைகளோடு மாறுபடாது, வேதசம்பந்தமுடையது என்பது பொருள். மற்றது வேதத்திற்குப் புறம்பானது அவை புறச்சமயம் அல்லது வேத பாஹ்ய சமயம் எனப்படும்.

அகச் சமயமான வைதிக சமயங்கள் மூன்றே. அவை வேதாந்த மதங்கள் என்ற சிறப்புப்பெயர் பெறுவன. அவை அத்வைத துவைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்கள். இம் மூன்று மதங்களுக்கும் வேதம் பிரமாணம்; வேத உபநிடத பிரதிபாத்யனான நாராயணனே பரதத்வம்.

வேதாந்த மதங்கள் மூன்றினுள் * தத்வ ஹித புருஷார்த்தங்களை உள்ளவாறே தெள்ளிதின் விளக்குவது

† அவபிருதம்—விழா முடிவிற் செய்யும் மங்கல ஸ்நானம்.

* தத்வம்-கடவுள். ஹிதம்-கடவுளை யடையும் நெறி. புருஷார்த்தம்-புருடர் பெறும் பேறு, அல்லது வீடு.

வைணவ சமய சித்தாந்தமான ஸ்ரீவிசிஷ்டாத்வைதம். இதனை நடுநின்று நனி ஆய்வோர் "வேறுபல சமயங்களினும் வீறு பல படைத்தது வைணவம்" என்பர். பழமையிற் பழமையாம் பேருண்மைகளும், புதுமையிற் புதுமையாம் பொருண் முடிபும் ஒருங்கே திரண்ட உண்மைச் சமயம் வைணவசமயம் வைணவம் அன்புச் சமயம்; அறிவின் பிறப்பிடம்; அன் பிற்குறைவிடம்; அழிவில் இன்பத்து அணைவிக்கும் அருள் நெறி; நித்திய சாந்தியின் நிலைக்களம்; உலக சமயங்களின் உயரிய தாயகம்; பாரத நாட்டின் பாரமார்த்திகப் பொக்கிஷம்; பழம்பெரும் தமிழரின் பழிப்பில் பெருநெறி. அறிவால் நெறிகாட்டி அன்பால் உயிர்களை உய்விக்கும் தமிழர் சமயமான வைணவத் திருவினைத் தமிழ் நாட்டில் மலையிட்ட விளக்காகத் திகழச்செய்த பெரியார்கள் ஆழ்வார்களாவர். ஆழ்வார்களனைவரும் நல்ல தமிழ்ப் பெருமக்களேயாவர். தமிழர்தம் கடவுட்கொள்கையின் தனிப்பெருந் தலைவர்களான இவர்கள் (ஆழ்வார்கள்) பதின்மர் ஆவர். ஸ்ரீ ஆண்டாளையும் மதுரகவிகளையுங் கூட்டிப்பன்னிருவர் என்றுங் கொள்வதுண்டு.

## ஆழ்வார்கள் ஏற்றம்.

ஆழ்வார்கள் நித்ய சூரிகளின் அவதாரம் என்பது கொள்கை. என்றும் சம்சார சம்பந்தமின்றி நலமந்தமில்லதோர் நாடான ஸ்ரீ வைகுந்த வான்போகம் துய்ப்போர் நித்ய சூரிகளாவர். இவர்கள் ஈசுவரனுடைய சங்கற்பத்தின் படி, உலகினர்க்குத் "தீதில் நன்னெறிகாட்டி" அவர்களைத் திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆளாக்கியருள அவதரிப்பவர்கள். இவர்கள் தங்கள் "குன்றுதலில் வைகுந்தவான் போகம் நீத்து" வையத்து அவதரித்து உலகத்தாரை நல்

வழிப்படுத்துவதிலேயே ஆழ்ந்தவர்கள், அல்லது அளிய மாந்தர் கவலையுட்படுகின்றமைக்கு ஐயோ என்றிரங்கி அவர்கள் படும் துக்கத்தில் ஆழ்ந்து நிற்பவர்கள் என்பதாலும், எல்லாம்வல்ல இறைவனது அளப்பரிய ஆராவமுதமான கல்யாணகுணப் பெருங்கடலுள் ஆழ்ந்து நின்றவர்கள் என்னுங் காரணத்தாலும் ஆழ்வார்கள் எனப்படுவர்.

மற்றுமோர் மாண்பும் ஈண்டுமறப்பதற்கில்லை. அதாவது ஆழ்வார்கள் என்ற சொல்லிலுள்ள ழகரச் சிறப்பாகும். உலகமொழிகளுள், தமிழ் இனிய மொழியாவதும், தனக்குரிய ழகரச்சிறப்பினாலேயாம். தமிழ் ஆழ்வார்கள், அமிழ்தம், பழம், அழகு என்ற தொடர்களுள் ழகரம் தரும் இனிமை எண்ணி மகிழ்தற்குரியது. இவ் வினிய ழகர ஒற்றால் தமிழ் பெரும் தனிச் சிறப்பு, ஆழ்வார்களுக்கும் அசாதாரணமாகும். இதுகொண்டு ஆழ்வார்களின் உயர் தனிச் சிறப்பும், அருந்தமிழுடன் அவர்களுக்குள்ள தனித் தொடர்பும் அறிந்துகோடற்குரியன.

எம்பெருமானது தசாவதாரம்போன்று, ஆழ்வார்கள் பதின்மரையும் ஓர் புதிய தசாவதாரம் எனப் போற்றுவது வைணவர் மரபு. உலகின் புறவிருள் போக்கும் துவாதச ஆதித்யர்களிற் காட்டினும் பெருமைசான்ற, அகவிருள் ஒழித்த கூறுதற்கரிய வீறுடைமைபெற்ற இவ்வாழ்வார் களின் வைபவம் வாசாமகோசரமாம்.

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் சிறந்த மெய்யடியார்களனய ஆழ்வார்கள் அனைவரினும், காலத்தாற் பிற்பட்டவர் நமது திருமங்கையாழ்வாராவர். இவருக்குப் பிறகு ஆசாரியர்களல்லது ஆழ்வார்கள் அவதரிக்கும் பேற்றை இந் நாடு பெறவில்லை.

## அவதாரமும் - அரசியலும்

ஆரம்பத்தில் "ஆத்மாவை வெய்யிலில் வைத்துஉடலை நிழலில் வைத்து வளர்த்தவர்" என்று ஆசாரியர்களால் கூறப்படும் திருமங்கையாழ்வார், சோழவளநாட்டின் ஆலி நாடு என்ற பகுதியைச் சார்ந்த திருக்குறையலூரில் திருவவதரித்தருளியவர், இவர் கள்வர்குடியில் கலி பிறந்த 393வது ஆண்டான நள வருடத்தில், கார்த்திகைமாதம் பௌர்ணமி கூடிய கார்த்திகை நன்னாளில் எம்பெருமானின் "சாரங்க வில்லின்" அம்சமாகத் திருவவதரித்தருளி, நீலன் என்ற பெயரோடு சோழ மன்னனது சேனைத்தலைவராய் இருந்து, பின் குறுநில மன்னராகி பரகாலர் என்ற பெயர் பெற்று, ஆலிநாட்டை அரசாண்டிருந்தனர்.

## குறையலூர் வேந்தர் குமுதவல்லியை மணம்புணர வழைத்தல்

தங்குபெரும் புகழாளரான ஆழ்வார்களனைவரினும் பொங்குபெரும் புகழாளரான மங்கையர்கோன் காளைப் பருவத்தில் "புலன் படிந்துண்ணும் போகமேபெருக்கி, மாரனூர் வரிவெஞ்சிலைக்கு ஆட்செய்து, தெரிவைமார் உருவமே மருவி, துய்மையில் தொண்டராய்" வாழ்ந்து வந்தனர். அக்காலத்து; திருவாலிக்குச் சமீபமான திருவெள்ளக்குளத்திலிருப்பாரொரு வைத்தியர் வீட்டில் சர்வாவயவ சுந்தரியான குமுதவல்லியென்னும் தெய்வப் பெண்ணொருத்தி வளர்ந்து வருவதறிந்து, அவளையடைய வேண்டுமென்ற பேராசையுடையராய், அவள் தன் வளர்ப்புத் தந்தையான வைத்தியரைக் கண்டு தனக்கு அவளை மணஞ்செய்து தருமாறு வேண்டினர்.

## ஆலிநாடர் ஆழ்வாராதல்.

இதனை யறிந்த குமுதவல்லியாரும் "திருமண், திருவிலச்சினை முதலிய பஞ்ச சமஸ்காரம் பெற்றுள்ள

ஸ்ரீ வைஷ்ணவர்க்கன்றி மற்றவர்க்கென்று "பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று கூறியருளினன். அதுகேட்ட பரகாலரும், "இன்னே சென்று அச்சமஸ்காரங்களைப் பெற்று ஸ்ரீ வைஷ்ணவனாகி வருகின்றேன்" என்று கூறி, நாச்சியார் கோயிலென்னும் இத் திருநறையூர் வந்தடைந்தனர். வந்தவர் ஈண்டு "மலையார்ந்த கோலஞ்சேர் மணிமாடம் மிக மன்னி, நிலையார நின்றருளும்" நம்பியெம்பெருமானின் திருக்கோயிலடைந்து "தூமணிமாடக்கவாடம் கடந்து புகுந்து ஆங்கே மாரகதக் குன்றம்போல்மன்னி நின்றருளும் நம்பியெம்பெருமானின் நல்ல மாமலர்ச்சேவடி வணங்கி தமக்கு த்திருவிலச்சினை செய்து ஸ்ரீவைஷ்ணவனாக்கி யருளுமாறு நெஞ்சங் குழைந்து இறைஞ்சியேத்தினர். எண்ணுவார் தம் இடர் களைந்தருளி அவர் வேண்டிற்றெல்லாம் விரும்பி அருளும் நம்பியெம்பெருமான் அமலங்களாக விழிக்தருளும் தண்டாமரைக்கண்களால் அருள் சுரந்து பரகாலரைக் குளிரக்கடாட்சித்தருளி, 'பீதகவாடைப் பிரானே பிரம குருவாகி வந்து' என்ற மறையுரையின்படி தாமே ஆசாரியனாகி "தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழித் திகழ்திருச்சக்கரத்தின் கோயிற் பொறியாலே" பரகாலருக்குத்திருவிலச்சினை செய்து பன்னிரு திருமண்காப்பும் சாத்தியருளி மறையுரைத்த மந்திரமான நலந்தருஞ் சொல்லையும் உபதேசித்தருளி, திருமங்கையாழ்வார் என்ற தாஸ்ய நாமஞ் சாத்தி, அவர் தம் சிந்தையுள்புகுந்து தம்பால் ஆதரம்பெருக அருள்செய்து போகவிட்டருளினர்.

## குமுதவல்லியார் நிபந்தனையும் - திருமணமும்.

ஆழ்வாரும், நம்பி யெம்பெருமானின் திருவருளுக்கே தம்மை அறவிலைசெய்து கொடுத்தவராய், திருவாலியடைந்தனர். ஸ்ரீவைஷ்ணவராகி வந்த பரகாலரைக்கண்டு பரமா

னந்தமெய்தி குமுதவல்லியார், "ஒரு வருடகாலம் நாடோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீயாராதனம் செய்வித்து, அவர்தம் ஸ்ரீபாத தீர்த்தமும் போனகச் சேடமும் பிரசாதப்படுமவர்க்கே யான் வாழ்க்கைப்படுவதென்று விரதமுடையேன்" எனப் பின்னுமொரு நிபந்தனையும் கூறுவாராயினர்.

பரகாலர், இந்த நிபந்தனையையும் நிறைவேற்றுவதாக உறுதி கூறி ஊரும் நாடும் உலகமுமறிய குமுதவல்லியாரை திருமணம் செய்துகொண்டனர்.

## நறையூர்க் கோயிலில் சிறையிருத்தல்.

அப்பால், வாக்களித்தவாறு ஒரு வருடகாலம் வைணவர்களுக்குத் ததீயாராதனம்செய்து நிபந்தனையை நிறைவேற்றிய பின்னரும், பரகாலர் ததீயாராதனத்தைத் தொடர்ந்து நடத்தி வருவாராயினர். அதனாற் பெருஞ்செலவாளராய் அரசனுக்குரிய கப்பமான வரிப்பணத்தையும் செலவழித்துவிட்டமையான் சோழனுக்கு அரசிறைகட்டத் தவறினர். அதனாற் சினமூண்ட சோழன் பரகாலரைப் பிடித்து வருமாறு சில போர் வீரர்களை அனுப்ப, அவர்களை பரகலார் அடித்துத் துரத்திவிடவே சோழவரசனே நேரில் வந்து போரிட்டுப் பரகாலருக்கு ஆற்றாது உடைந்தோடி, முடிவில் தந்திரத்தால் சிறைப்படுத்தி, **திருநறையூர்க் கோயிலில்** காவல்வைத்துப் போயினன்.

## வரதனருளால் வரிப்பணம் பெறுதல்.

இவ்வாறு நறையூர் நம்பியெம்பெருமான் சந்நிதியில் காவல் வைக்கப்பட்ட திருமங்கைமன்னர் ததீயாராதனம் தடைபட்டமைக்காகப் பெரிதும் வருந்தி, அருட்குருவாகி

தன்னை ஆட்கொண்டருளிய நம்பியை நினைந்து நெஞ்சங் குழைந்து உபவாசமிருந்து கண்ணீர் மல்கக் கண்ணுறங்கிய வளவிலே, பெருமாள் கோயிற் (காஞ்சீபுரம்) பேரருளாளப் பெருமாள் ஆழ்வாரது கனவில் தோன்றி, "காஞ்சீபுரம் வந்து புதைப்பொருள் கொண்டு பகுதியைச் செலுத்திச் சிறைவீடு செய்துகொள்ளும்" எனத்திருவாய் மலர்ந்தருளினர். பரகாலரும் "இது பேரருளாளன் பிரசாதம் எனத் துணிந்து காஞ்சீபும் சென்று வேகவதி நதிக்கரையில் புதைக்கப்பட்டிருந்த பெரும்பொருளை எடுத்து காவற்காரர்களிடம் பகுதிப் பணத்தைச்செலுத்தி, மிகுதியுடன் ஆலிநாடடைந்து மீண்டும் ததீயாராதனத்தைத் தொடர்ந்து நடாத்த இதனையறிந்த சோழனும் ஆழ்வாரையடைந்து தான்பெற்ற பகுதிப் பணத்தை அபராதமாக வைத்து மன்னிப்புவேண்டி அருள் பெற்றுப் போயினன்.

## திருவேடு பறி.

சோழன் திருப்பித்தந்த பொருளும் புதையல் பொருளும் சிலநாளில் ததீயாராதனத்தில் செலவாகிவிடவே இனி வழிபறித்தாகிலும் ததீயாராதனத்தைத் தொடர்ந்து நடத்தக்கடவோமென்று, ஆழ்வார் தமது தோழர்களும் அமைச்சர்களுமான தாளூதுவான், நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், தோலாவழக்கன் என்ற நால்வருடன் வழிப்பறி செய்து ததீயாராதனத்தைத் தொடர்ந்து நடத்தி வருமளவில், எம்பெருமான் இவரைத் தடுத்தாட்கொள்ளத் திருவுளம் பற்றினன்.

## வெட்டுங்கலியன் விரட்டிநெடுமாலெட்டெழுத்தும் பறித்தமை.

திருவின் செல்வனான வயலாலிமணவாளன் பெரிய பிராட்டியாருடன் திருமணக்கோலந்தாங்கி, சர்வாவயவ பூஷிதராய் ஆழ்வார் பதிவிருந்த திருமணங் கொல்லைவழி

யாக எழுந்தருள, ஆழ்வாரும் திவ்யதம்பதிகளின் திருவாபரணங்களைக்கண்டு மனமிகமகிழ்ந்து, அவர்களை அதட்டி நிறுத்தி ஆபரணங்களையெல்லாம் கழற்றச்செய்து, மணவாளன் திருவடி விரலில் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்ற முடியாது, தரையிற்படிந்து தமதுபற்களால் கடித்து வாங்கினர். ஆழ்வாரின் இந்தச் சாஹஸச்செயல்கண்டு எம்பெருமான் பரமகிருபைகூர்ந்து "நம்கலியனே' என்று திருப்பெயரிட்டனர்.

பின்னர் பரகாலர் தாம் கவர்ந்த திருவாபரணங்களையெல்லாம் ஒரு மூட்டையாகக்கட்டி எடுக்க முயன்றும், தமமால், அதுபெயர்க்கவும் முடியாமையுணர்ந்து, பெருஞ்சினங்கொண்டு வாளையுருவி மணவாளனை நோக்கி "இம் மூட்டையை எடுக்கவொட்டாதுசெய்த மந்திரத்தைச்சொல். இல்லையேல் வெட்டி வீழ்த்துவேன்'' என்று அச்சுறுத்தி நின்றனர். அதுகண்டு மணவாளனுப பரமகருணாகானும், பெரிதும் அஞ்சி நடுங்கினன்போன்று நடித்து, பரகாலரைப் பரிவோடழைத்து அவரின் வலது திருச்செவியில் "சகல மகாமந்திரங்களுக்கும் மேலானதான ஒப்புயர்வற்ற **பெரிய திருமந்திரத்தை** (திருவட்டாக்ஷரம்) உபதேசித்தருளினான்.

## திருவின்கேள்வன் பெரியதிருவடிமேற் சேவை சாதித்தல்,

சகலவேத சாரதமமான பெரிய திருமந்திரோபதேசம் பெற்ற பரகாலர் ''இதென்ன நமக்குத் திருநறையூர் நம்பியெம்பெருமான் உபதேசித்த "நலந்தருஞ்சொல்லை'' இந்த மணவாளன் சொன்னனே'' என்று திகைத்து நிற்கையில், எம்பெருமான் பெரிய பிராட்டியாருடன் பெரிய திருவடி மேல் (கருடாரூடனாக) இவருக்குச்சேவை சாதித்தருளி மயர்வற மதிநல மருளினன்.

விண்மீது பெரிய திருவடியின்மேற் சேவைசாதித்தருளிய பெரிய திருமந்திரப்பொருளைக் கண்களாலாரக் கண்டு களித்து, திவ்யதம்பதிகளின் திருவடிகளிற் சரணம் புகுந்து பெறலரும் பேறுபெற்றேன் என்று பெரிதும் பரவசராகி "மந்திரத்தையும் மந்திரத்தின் பொருளான" பரம்பொருளையும் சாக்ஷாத்கரித்தனர்.

## மங்கை மன்னன் கண்டுகொண்ட மந்திரம்.

அயர்வறுமமரர்கள் அதிபதியால்மயர்வற மதிநலம் அருளப்பெற்ற அருள்மாரியான பரகாலரும் "வாடினேன்வாடி" என்று திருப்பதிகந்தொடங்கி "குலந்தருஞ் செல்வந்தந்திடும் அடியார் படுதுயராயினவெல்லாம், நிலந்தரஞ்செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலமளிக்கும், வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதாயினுமாயினசெய்யும், நலந்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" என்று தமது அநுபவத்தை வெளியிட்டருளிய பின்னர், மாறன் தமிழ் மறைக்கு அங்கங்களாக, ஆசு மதுரம் சித்திரம், விஸ்தாரம் என்னும் நாற்கவிகளாலே பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற ஆறு திவ்யப்பிரபந்தங்களின் வாயிலாகப் பெருகிய தமது திவ்யானுபவத்தை உலகம் வாழப் பிரகாசிப்பித்தருளினர்,

## திவ்யதேச யாத்திரையும் - திருமடல் அருளிச்செய்தலும்.

பின்னர், ஆழ்வார் திவ்யதேசங்களை மங்களாசாசனஞ் செய்தருள நினைந்தவராய் வடதிசைநோக்கிப் புறப்பட்டருளி, வடநாட்டுத்திருப்பதிகளை மங்களாசாசனஞ் செய்து கொண்டு; திரும்பி தொண்டைநாட்டுத் திருப்பதிகளையும்

மங்களாசாசனம் பண்ணியருளி, சோழநாடடைந்து சீர்காழியில் ஆழ்வாரால் வாதில் வெல்லப்பெற்ற சம்பந்தரால் கொடுக்கப்பெற்ற வேலாயுதத்தைப்பெற்று "ஆலிநாடன் அருண்மாரி அரட்டமுக்கி, அடையார்சீயம், கொங்குமலர்க் குழலியர்வேள், மங்கைவேந்தன், கொற்றவேற்பரகாலன், கலியன்" என்ற பிருதுகளைப்பூண்டு சோழநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாசனஞ் செய்துகொண்டு தன் ஆசாரியனாகிய நம்பியெம்பெருமான் எழுந்தருளியுள்ள இத் திருநறையூர் அடைந்து நம்பியைப்பணிந்து அவர் விஷயமாக பத்துப் பதிகங்கள் பாடியருளி தம்மைத்திருத்திப் பணிகொண்டருளிய அவ்வெம்பெருமான் திறத்து "கடலினும்பெரிய காதல்" தலையெடுக்கப்பெற்றவராய் நாயகிபாவமெய்தி பரகால நாயகியாகி "தென் நறையூர் மன்னு மணிமாடக் கோயில் மணாளனை"ப் பெற்றாலன்றி உயிர்தரிக்கமாட்டாதவராய் மடலூரத்துணிந்து "சிறிய திருமடல்" "பெரியதிருமடல்" என்ற இரு ஒப்புயர்வற்ற பிரபந்தங்களை அருளிச்செய்து இத்திவ்ய தேசத்தில் தமக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை உலகறியச் செய்தருளினர்.

## நம்பிக்குத் திருமடலும் அரங்கனுக்குத் திருமதிளும்.

பின்னர், திருவாலி நாடரான ஆழ்வாரும், "நன்னறையூர் நின்ற நம்பிதன் நல்லமாமலர்ச் சேவடி, சென்னியிற்சூடி தொழுது எழுந்து பிரியாவிடை பெற்று திவ்யதேசங்களுக்கெல்லாம் நாற்றாங்காலான திருவரங்கம் பெரியகோயிலை யடைந்து பெரியபெருமாளைத் திருவடிதொழுது, திருமதிள் திருக்கோபுரம் முதலியன நிர்மாணிக்கக் கருதி, நாகை சென்று புத்தவிக்கிரகத்தைக் கொணர்ந்து உருக்கிப் பணமாக்கி திருமதிள் முதலிய கைங்கரியங்களைச் செய்து கிருதகிருத்தியரான ஆழ்வாரை, ஓர்நாள் அழகிய மணவா

ளப்பெருமாள் அன்போடு அருகமைந்து தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டம் ஸ்ரீ சடகோபன் முதலியன பிரசாதித்த ருளி "ஆழ்வீர்! திருமடல் பிரபந்தங்களை நமக்கருளிச் செய்து, திருமதிள் கைங்கர்யத்தை நம்பிக்குச் செய்யலா காதோ?" என்ன, ஆழ்வாரும் "நாயன்தேன்! நாயன்தேன்! நம்பிக்குத் திருமடலும் தேவரீர்க்குத் திருமதிளுமே சமைத் தேன். மதிள் இங்கேதான் மடல் அங்கேதான்" என்று விடை யருளிச்செய்தனர்.

எனவே திருமங்கையாழ்வார்க்கு இத்திருநறையூர்த் திருப்பதியிலுள்ள விசேஷ அபிமானம் செப்பும் திறத்த தன்று. மேலும் மற்றைய திவ்யதேசங்களை மங்களாசாசனம் செய்தருளும் பாசுரங்களிலும் நறையூர் நம்பியெம்பெரு மானை மங்களாசாசனஞ்செய்து அவர்பக்கல் தமக்குள்ள நன்றியறிவை (உபகாரஸ்மிருதியை) வெளிப்படுத்த மறப்ப தில்லை.

செம்மொழிவாய் நால்வேத வாணர்வாழும் திருநறையூர்
[மணிமாடச் செங்கண்மாலை
பொய்ம்மொழி யொன்றில்லாத மெய்ம்மையாளன் புலமங்
[கைக் குலவேந்தன் புலவையார்ந்த
அம்மொழிவாய்க்கலிகன்றி யின்பப்பாடல் பாடுவார்விய
[னுலகில் நமனுர்பாடி
வெம்மொழிகேட் டஞ்சாதே மெய்மைசொல்லில் விண்ண
[வர்க்கு விருந்தாகும் பெருந்தக்கோரே.

**திருப்பதி மகாத்மியம்.**

இத்திருப்பதிக்கு யாத்திரைசெய்ய நினைந்த ஒருவர் தம் இல்லம்விட்டெழுந்து எத்தனையடி தூரம் நடக்கின்ற

னரோ, அத்தனையடி சங்கியை காலம் அவர் சாகத்துவீபத்தில் சார்வ பௌமராயிருந்து, சகல சுகானுபவமுமெய்தி இறுதியில் சாயுச்சிய பதவியுமெய்துவர்; தேவர்களும் இத்திருப்பதியில் தாவரதிரியக்குகளாகப் பிறக்க விரும்புகின்றனர். இத்தலத்தைச் சுற்றி மூன்றுயோசனை தூரத்திற்குள் பிறக்கப்பெறும் உயிர்களுக்கு எமபயம் இல்லை. இத்தலவாசத்தால் தரித்திரமொழிந்து சகல செல்வப்பெருக்கும் உண்டாகும். இத்தலத்தில் எவரும் தாரம் அனுதாரம் தாரானுதாரம் என்னும் மந்திரங்களைச் செபிக்க இஷ்டசித்தி பெறுவர். மார்கழிமாத சுக்கிலபக்ஷ ஏகாதசியில் உபவாசமிருந்து தலபுராணம் வாசித்து துவாதசி அருணோதயத்தில் இத்தலத்தின் புண்ணிய தீர்த்தங்களிலொன்றினும் தீர்த்தமாடி, ஸ்ரீ வஞ்சுளவல்லி சமேதரான ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பரமனை அஷ்டாக்ஷர மகாமந்திரங்கொண்டு அர்ச்சிப்போர் சகல சித்தியும் முத்தியும் பெறுவது நிச்சயம்; என்றின்னவாறு தலபுராணத்துள் கூறப்பெற்றுள்ளது.

## தலவரலாறு கூறும் நூல்கள்.

வடமொழிப் பிரும்மாண்ட புராணத்திலுள்ள பிருகு சௌநக சம்வாதமாகிய ஸ்ரீநிவாசக்ஷேத்திர மகாத்மியமும், பவிஷ்யோத்தர புராணத்துள் உபரிபாகத்திலுள்ள பிரம்ம நாரத சம்வாதமும், தென்மொழியில் திவ்யகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அவர்கள் அருளிச்செய்த திருநறையூர் நம்பி மேகவிடு தூது என்னும் பிரபந்தமும் இத்தலச் சிறப்பும் வரலாறுங் கூறுவனவாம்.

## தலபுராண படன பலன்.

நல்வினைப் பயனுடைய ஒருவரே இத்திருப்பதியின் புராணத்தைப் படிக்கப்பெறுவர். இத்தல புராணத்தை

ஒருவர் படித்தலாலும், படிப்பித்தலாலும், படிக்கப் பக்கல் நின்று கேட்பதாலும் சர்வதுக்க நிவர்த்தி பெறுவர். இத்திருப்பதியின் சிறப்பினைப் பாக்கப்பேசும் தல புராணத்தை மனத்தால் நினைப்பவரும் இம்மையில் இஷ்ட காமியார்த்தங்களைப் பெற்று மருமையில் பிரும்ம சாயுச்சி யத்தையும் பெறுகின்றனர். விருப்பமற்ற ஒருவரும் இதனை விதிவசமாய் கேட்கப்பெறின் அவரது பாவங்கள் அன்றே பறந்தோடி விடுகின்றன.

நம்பியெம்பெருமான் சந்நிதியில், தலபுராணங்கேட் பவரும், கேட்பிப்பவரும் சகல செல்வங்களையும் பெற்று வெற்றியுமெய்தி, வீரியத்துடன், உடல்வளப்பமும், வன்மை யும்பெற்று புத்திர பௌத்திராதிகளோடு நிறையாயுள் பெற்று வாழ்வர்.

## கல்வெட்டுகள்.

1. இக்கோயிலின் நடுவே வடபக்கத்துச் சுவரில் ஓர் கல்வெட்டுளது. அதனை அரசாங்கத்தார் 1931-1932 ஆம் வருடத்திய 132 ஆம் நம்பர் என்று பதிவு செய்துள்ளனர். ஜடாவர்மன் திருபுவன சக்ரவர்த்தி, சுந்தரபாண்டிய தேவர் அரசர், ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் ஓர் உட்பிரிவான மேலூர் நாட்டிலுள்ள மணல்பாக்கம் நகர் வாசி யான ஒருவரால் குலோத்துங்கச் சோழவளநாட்டின் ஒரு ஜில்லாவான திருநறையூர் நாட்டிலுள்ள திருநறையூரில் உல குய்ய நின்றருளின எம்பெருமான் திருக்கோயிலுக்கு ஓர் ஸ்தலம் சாசனம் செய்யப்பட்டிருக்கிறது.

ஜடாவர்ம சுந்தரபாண்டியன் 1267. A. Dல் சோழமண் டலத்தை ஜெயித்தனர். அவர் A. D. 125ல் ஆட்சி செலுத்த ஆரம்பித்திருக்கவேண்டும். எனவே 1931-32ஆம் வருடத்

திய கல்வெட்டில் எழுதப்பட்டிருப்பது A. D. 1269ல் இருக்கவேண்டும்.

2. வெளிக்கோபுரத்தில் இடது பக்கத்துச் சுவற்றில் மற்றோர் கல்வெட்டுளது. இது 133-ஆம் நவம்பரில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சகாப்தம் 1436க்குச் சரியான A. D. 1516ல், தொண்டைமண்டலத்திலுள்ள அரிகண்ட புரம், வடமலை, அண்ணுகால் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க சோழமண்டலம் திருநறையூரில் எழுந்தருளியிருக் கும், நம்பி, நம்பிக்கை நாச்சியார், ஸ்ரீ ராமன் இவர்களுக்காக சில வரித்தொகை இனுமாக விடப்பட்டிருக்கிறது.

3. மற்றோர் கல்வெட்டு (1927) கோயிலில் மண்ட பத்தில் வைத்துக்கட்டப்பட்டுளது. வம்சம் தஞ்சாவூர்நாயக வம்சம். அரசன்-ஸ்ரீரகுநாத நாயகர். சகாப்தம் 1540 காள யுக்திவருடம் தைமாதம் 25ஆம்தேதி. இக்கல்வெட்டிலிருந்து ரகுநாதநாயகருடைய பெருமைக் குறிகுறியாக அட்டவணை ரங்கப்பையரால் நாச்சியாருக்காக ஓர் மண்டபம் கட்டப்பட்ட தாகத் தெரிகிறது. சகாப்தம் 1540 A. D. 1618க்குச் சரி யானது 1614 A. Dல் ரகுநாதநாயகர் ஆக்ஷி ஆரம்பம். அவர் அநேக திருமால் ஆலயங்கள் கட்டினுரென்று தெரிகி றது. சோழபாண்டியர்களுக்குள் போர்நடந்த காலத்தில் இவர் காவேரி அணையை வெட்டிவிட்டாரென்றும், அவருக் குப்பின் விஜயராகவ நாயக்கர், அவர் மகன், பட்டத்துக்கு வந்தாரென்றும் தெரிகிறது

இவருக்குப் பிறகு 1675 H. Dல் "வெங்காஜி" என் னும் மகாராஷ்டிர அரசர் ஆளத்தொடங்கினர். செங்கணுன் சோழன் 5 ஆவது நூற்றுண்டின் பிற்பகுதிக்கும் 7 ஆவது நூற்றுண்டின் முற்பகுதிக்கும் இடையில் இருந்தவர். சைவர்கள் இவரை "கோச்செங்கட்சோழநாயனுர்' என்று வேறு பெயரிட்டழைத்தனர்.

திருமங்கையாழ்வார் காலம் 7ஆவது நூற்றுண்டின் பிற்பகுதிக்கும் 8ஆவது நூற்றுண்டின் முற்பகுதிக்கும் இடையிலுள்ளது.

(இவை இக்கோயில் சம்பந்தமாகத் துரைத்தனத்தாரால் எடுக்கப்பட்டிருக்கும் 132-133ஆம் நம்பர் கல்வெட்டுக்களின் குறிப்புக்கு மொழி பெயர்ப்பாகும்.)

**நிர்வாகம்.**

பேசரும் பெருமைசான்ற இச்சந்நிதியின் தர்மகர்த்தாக்களாக உயர்திருவாளர்கள் M. D. தியாகராஜ பிள்ளை, P. R. பொன்னுசாமி, N. K. R. திருவரங்கம் நாயுடு ஆகிய மூவரும் இருந்து வருகின்றனர். இவர்களுள் ஸ்ரீ N. K. R. திருவரங்கம் நாயுடு அவர்கள் மானேஜிங் டிரஸ்டியாகயிருந்து அரிய தொண்டாற்றி வருகின்றனர்.

1. அழுக்கும், வௌவால் நாற்றமும், இருட்டுமின்றி அழகான நல்ல தென்கலைத்திருமண்காப்புகளுடன் சீரிய மணிமாடமாகத் திகழ்ந்து பொலியும் இச்சந்நிதிக்கு இரவில் நல்ல ஒளிதருமாறு மின்சார விளக்குகள் போடப்பட்டுள்ளன.

2. புதிய அழகான திருத்தேர் ஒன்று செய்துவைக்கப் பட்டுள்ளது.

3. பெருமாள் திருமேனிக்குத் தங்கக்கவசம் புதிதாகச் செய்து சமர்ப்பிக்கப்பெற்றுள்ளது.

4. புதிய லூர் கல்லிழைத்த மாங்காய்மாலை திருவாபரணமாக வாங்கப்பெற்றுள்ளது.

5. பஞ்சபருவகாலங்களில் பெருமாளுக்கும் தாயாருக்கும் திருமஞ்சனாதிகளும், ஆழ்வாராசாரியர்களின் திரு

நட்சத்திர பரிபாலனங்களும் திட்டப்படி யாவும் குறைவின்றி நடைபெற்றுவருகின்றன.

## தேவஸ்தான வரவு செலவுகள்.

தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் ஏகர் 415 செண்டு 70.

### ஒரு வருடத்திய வருமான விவரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| நஞ்சை | 44000 | 0 | 0 |
| புஞ்சை | 2000 | 0 | 0 |
| கட்டிட வாடகை | 700 | 0 | 0 |
| மனைப்பகுதி | 300 | 0 | 0 |
| மோஹினி | 973 | 0 | 0 |
| வட்டி | 2627 | 0 | 0 |
| சில்லரை ஆதாயம் | 800 | 0 | 0 |
| | 51,400 | 0 | 0 |

### செலவு விவரம்.

| | | | |
|---|---|---|---|
| நித்திய பூஜை | 4400 | 0 | 0 |
| உத்ஸவம | 9500 | 0 | 0 |
| மராமத்து | 1000 | 0 | 0 |
| கட்டிடம் | 7000 | 0 | 0 |
| கிஸ்தி | 5400 | 0 | 0 |
| வாகனம், நகை, வாங்குதல், & ரிப்பேர் | 2500 | 0 | 0 |
| சிப்பந்திகள் சம்பளம் | 5900 | 0 | 0 |
| ஆடிட் | 900 | 0 | 0 |
| சில்லரைச் செலவு | 3400 | 0 | 0 |
| க்ஷேமநிதி | 2400 | 0 | 0 |
| அனுதை விடுதி க்ஷயரோக ஆஸ்பத்திரி முதலியவைகளுக்கு நன்கொடை | 3000 | 0 | 0 |
| பாங்கி இருப்பு | 6000 | 0 | 0 |
| | 51.400 | 0 | 0 |

## கட்டளைகள்.

இத்தேவஸ்தானத்தில் தற்போது ஸ்ரீமதி காத்தாயி அம்மாள் கட்டளையும், குடவாசல் ஸ்ரீ சாமிநாத பிள்ளை கட்டளையும், நடந்துவருகின்றன. அவைகளுக்கு மாத்தூரிலும் நாச்சியார்கோயிலிலும் முறையே ஒரு வேலியும் 10-மா நிலமும் மானியமாக விடப்பட்டுள்ளன. முதல் கட்டளையானது ஸ்ரீ M. வைத்திநாத முதலியார் அவர்களால் நடத்திவரப் பெறுகின்றது. இரண்டாவது கட்டளை ஸ்ரீ N. K. R. நாராயணசாமி நாயுடு அவர்களால் நடத்திவரப்பெறுகின்றது நாடோறும் 2படி அமுதுபடி பிரசாதம் தேசாந்தரிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

## துவாதசிக்கட்டளை.

இவை தவிர ஸ்ரீ N. K. R. நாராயணசாமி நாயுடு அவர்களால் சாசுவதமாகவும் பரம்பரையாகவும் துவாதசிக் கட்டளை நடத்தப்பெற்று வருகின்றது. துவாதசியில் 10 பேருக்குப்பிரசாதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

## உபயங்கள்.

| நம்பர் | உபயக்காரர். | நடைபெறும் காலம். | உபய விபரம். |
|---|---|---|---|
| | A. நித்தியப்படி | | |
| 1 | ஸ்ரீமாந், N.K.R. நாராயணசாமி நாயடு அவர்கள் | நித்தியப்படி. | நந்தவன கைங்கரியம். சொந்தமாக ஒரு நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் புஷ்பங்களும், துளசியும், நித்தியபடிக்கு திருமாலை கட்ட உதவுகிறது. |
| 2 | சமுத்தனூர் குடி ஸ்ரீ தி. கோ. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் | நித்தியப்படி. | புஷ்ப தோட்டம் பயிராக்கி அதில்கிடைக்கும் ரோஜா, மல்லிகை துளசிமுதலான புஷ்பங்கள் திருமாலைக்கு உதவுகிறது |

(முற்கூறிய இருவரும் இம்மாபெரும் கைங்கரியத்தை சிரத்தையுடன் நடத்திவருகின்றனர்.)

| | | | |
|---|---|---|---|
| 1 | B. ஏறுபடி. ஸ்ரீ. N. கோபாலய்யர் அவர்கள். | கனுமண்டகப்படி. | தளிகை, திருமஞ்சனம், |

| நம்பர் | உபயம் செய்பவர். | உபயம் நடைபெறும் காலம். | உபய விபரம். |
|---|---|---|---|
| 2 | ஸ்ரீ S. ராதா கிருஷ்ண பிள்ளை | சங்கராந்தி மண்டபப்படி | தளிகை, திருமஞ்சனம் |
| 3 | ஸ்ரீ விருத்தாஜலம் பிள்ளை அவர்கள் | வருடப்பிறப்பு மண்டபப்படி | ஷை ஷை |
| 4 | ஸ்ரீ தி. கோ. ராம ஸ்வாமி அய்யர் | 1. திருக்கார்த்திகை<br>2. திருக்கல்யாணமுதல்நாள் | தளிகை, திருமஞ்சனம், தீபம் |
| 5 | ஸ்ரீ S. R. சுப்பிர மணிய அய்யர் அவர்கள் | மார்கழி-பங்குனி உற்சவங்களில் கருடசேவை மண்டபப் படி. மானியத்திலிருந்து வரும் வரும்படியைக் கொண்டு. | ஷை ஷை |
| 6 | கிராமமிராசுதாரர் | ஷை உற்சவங்களில் 5ஆம் நாள் | ஷை ஷை |
| 7 | ஸ்ரீஉத்தராதி மடம் | ஷை உற்சவங்களில் யானை வாகன மண்டபப்படி | ஷை ஷை |
| 8 | ஸ்ரீ கோதண்டராம முதலியார் அவர்கள் ஆலங்குடி | மார்கழி மாத உற்சவத்தில் தெப்ப மண்டபப்படி. | தளிகை மட்டும்.<br>இது மானிய நில வருமானத்திலிருந்துநடத்தப்படுவது. குறைவின்றி செய்யப்படவேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 9 | ஸ்ரீ N. K. R. நாராயணசாமிநாயடு அவர்கள் | திருக்கல்யாண உற்சவத்தில் 4-வதுநாள் மண்டபப்படி. | தைலக்காப்பு திருமஞ்சனம் & தளிகை. |
| | C. இதரஉபயங்கள் | | |
| 1 | ஸ்ரீ N. K. R. நாராயணசாமி நாயடு அவர்கள் | ஸ்ரீ மணவாள மாமுனிகள் மாத,வருட, திருநட்சத்திரம் உடையவர், நம்மாழ்வார், ஏனைய ஆழ்வார்கள், ஆசாரியர்கள் திருநட்சத்திரங்கள் | சேஷவாகனத்தில் பெருமாளும் தாயாரும் மணவாளமாமுனிகளுடன் பெரிய வீதிப் புறப்பாடு. |
| 2 | ஸ்ரீ தி. கோ. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் சமுத்தனூர்குடி. | அர்த்தசாமத்தின் உபசாரம் திருப்பள்ளியறை நித்தியப்படி. | பசுவின்பால் நன்றாகக்காய்ச்சப் பெற்று ஏலப்பொடி பசுவின் நெய் சர்க்கரை முதலியன சேர்த்து, நிவேதனம்செய்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. |
| 3 | ஸ்ரீமதி K. முத்து கிருஷ்ணம்மாள் அவர்கள் | சாஸ்வதமானது | கல்லிழைத்த விலையுயர்ந்த பச்சைக்கிளி. நாய்ச்சியார் திருக்கைக்கு. |

| நம்பர் | உபயம் செய்பவர், | உபயம் நடைபெறும் காலம். | உபய விபரம். |
|---|---|---|---|
| 4 | வாஞ்ஜதிராஜபுரம் ஸ்ரீநிவாஸய்யர் அவர்கள் | சாஸ்வதமானது. | வெள்ளி அஞ்சடுக்குத்தீபம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது |
| 5 | ஸ்ரீC. கன்னையா அவர்கள் | ஷை | வெள்ளிசேஷ வாகனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## ஜயம்!



மலர்கோள் கண்ணிக்குழலழகும் மாலைக்கிசைந்ததோளழகும்
வண்ணஞ் சிவந்த வாயழகும் வழுத்தற்கரிய கண்ணழகும்
இலகு திலகக் கத்தூரி என்றும் விலகா நுதலழகும்
இணையற்றொளிரும் முடியழகும் இனியசெங்கைத்தலத்தழகும்
அலரைப்பழிக்கும் அழகினதாய் 'அஞ்சேல்' என்ன அருளுவ
அன்பர் தம்மை உய்விக்கும் அபயத்திருக்கைப்பேரழகும்[தாய்
நிலவுமிரண்டு திருவடியின் நிலைத்தவழகும் கண்டுநிதங்
களித்து மகிழும் பேறதனைக் காசினிபெற்று வாழியவே!

---

செங்கமல வயல்சேருந் திருநறையூர் வாழியே
சீராரு நம்பியிணைத் திருவடிகள் வாழியே
பங்கமறுமேதாவி பயந்தசெல்வி வாழியே
பாரின்மறை தென்சொல்லாற் பகுத்துரைப்போன் வாழி
யெங்க ளேதிராச னிணைமலர்த்தாள் வாழியே [யே
யீடில் வரவரமுனிவ னெப்பொழுதும் வாழியே
செங்கைகுவித் தன்போடு சேவிப்போர் வாழியே
சேப்புவோர் வாழிசெவி சேர்ப்போரும் வாழியே.

---

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111113

ஸ்ரீ முருகன் அச்சகம்,
கும்பகோணம்.